Registered as a News Paper in Sri Lanka

பக்கம் 20 ரூபா 13/50


දිනමුරසු වාරමලර් நவ.04-10, 2001

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 432

## தீவிரமடையும் தேர்தல் முஸ்தீபுகள்





★ மாதவனின் புதிய காதல்

★ தொப்புள் மாற்றுச் சிகிச்சை



சூடு - சுவை - சுவாரசியம் அது தான் தினமுரசு

# ஆன்மீகம்

## இறைவன் இருப்பதை எம்மதமும் உணர்த்துகிறது!



எள்ளினுள் எண்ணெய் நிறைந்திருக்கிறது. பாலின் ஒவ்வொரு துளியிலும் வெண்ணெய் நிறைந்துள்ளது. பூவினுள்ளே வாசம் மறைந்துள்ளது.பழத்தினுள் மதுரமான ரசம் நிறைந்திருக்கிறது. ஒவ்வொரு மரத்துண்டினுள்ளும் நெருப்பு மறைந்துள்ளது. அதேபோல் இறைவனும் உலகம் முழுதும் நிறைந்திருந்தாலும் வெளியில் தெரிவதில்லை. மறைந்தே காணப்படுகிறார். என்று பகவான் ஸ்ரீ சத்திய சாயிபாபா அவர்கள் அமுதவாக்காக அருள் மொழி பகர்ந்திருக்கிறார்.

எமது இந்து மதமென்றாலும் சரி வேறு எந்த மதமென்றாலும் சரி இறைவன் இருப்பதை மறுப்பதற்கில்லை. ஆண்டவன் ஒருவன் இருக்கின்றான். அவன் அன்பு மனங்களில் வசிக்கின்றான் என்றவொரு தத்துவப்பாடல் நல்ல படிப்பினையூட்டுவதாக இருப்பதை அறியமுடியும்.

கருணையில்லாத மதபோதனைகளால் கடவுள் இருப்பதை அவனது அருள் கிடைப்பதை உணர்த்த முடியாது. கண்ணில் பார்வையும், காதில் கேட்கும் சக்தியும் நிறைந்துள்ளது போல சைதன்ய ஸ்வரூபமாக மனதில் நீக்கமற நிறைந்திருக்கும் இறைவன் உலகெங்கும் ஒளிப்பிளம்பாகவுள்ளார். உலகம் முழுதும் இறைவனின் வடிவமே! மனிதனுக்கு இத்தனை சமீபத்தில் இறைவன் இருந்தாலும் தன் அறியாமையினால் மனிதன் அவரை எங்கும் தேடிக் கொண்டேயிருக்கிறான். ஒவ்வொரு மனிதனும் தான் சச்சிதானந்த வடிவம் எனப் புரிந்து கொள்ள வேண்டும்! மனிதர்களின் உள்ளே தெய்வத்துவம் விரவி நிற்கிறது. காமக்குரோத குணங்களை விட்டு காருண்ய வழியினைப் பின்பற்றி கடவுளை நம்பி ஆன்மீக நெறியை தவறாதுணர்ந்து வாழ்வின் பயனைப் பெறுவோமாக!

பூசகர் அ.அரசரெத்தினம்-சேனையூர்-06.

## வியாபாரத்தின் சிறப்பு

ஒரு வியாபாரியிடம் நான்கு தன்மைகள் இருந்தால் அவருடைய சம்பாத்தியம் பரிசுத்தமானதாக ஆகிவிடும். ஏதேனுமொரு பொருளை வாங்கினால் அதனை பழித்துக் கூறமாட்டார். ஏதேனுமொரு பொருளை விற்றால் (அதிகமாக அதனைப்) புகழ்ந்து கூறமாட்டார். விற்பனையில் (பொருளின் குறையை) மறைக்கமாட்டார். விற்பதிலும் வாங்குவதிலும் சத்தியம் செய்யமாட்டார்.

விற்பனை செய்பவரும் வாங்குபவரும் அவ்விடத்தை விட்டுப் பிரிந்து செல்லாதவரை அவ்விருவருக்கும் (வியாபாரத்தை முறிப்பதற்கு) உரிமை இருக்கிறது. விற்பவர் வாங்குபவர் இருவரும் உண்மை சொல்லியிருந்தால் (பொருளைப்பற்றி விலையைப் பற்றியுள்ள குறைநிறையை) இருவரும் தெளிவு படுத்தியிருந்தால் அவ்விருவரின் வியாபாரத்தில் அவர்களுக்கு பரக்கத்துச் செய்யப்படும். (அவ்வாறின்றி இருவரும் குறையை மறைத்து, பொய் சொல்லியிருந்தால் கொஞ்சம் இலாபம் கிடைக்கக்கூடும். (ஆனால் அவ்விருவருடைய பரக்கத்தை அவர்களே அழித்தவர்களாவர்.

நம்பிக்கைக்குரிய உண்மை பேசும் வியாபாரி கியாமத்து நாளில் அர்ஷின் நிழலில் இருப்பதோடு ஷுஹதாக்கள், நபிமார்கள், சித்திக்கீன்கள் ஆகியோருடனும் இருப்பர்.

நபி(ஸல்) அவர்கள் (நூல் திர்மிதி, தர்கிப்)

வை.எம்.தாஹிர்கரீம், கல்முனை-06.

## தன்னன்பு, பிறரன்பு, இறையன்பு

திருச்சட்ட அறிஞர் ஒருவர் இயேசுவிடம் "போதகரே, திருச்சட்ட நூலில் தலை சிறந்த கட்டளை எது?" என்று கேட்டார்.

அவர், "உன் முழு இதயத்தோடும், முழு மனத்தோடும் உன் ஆண்டவராகிய கடவுளிடம் அன்பு செலுத்து. இதுவே தலை சிறந்த முதன்மையான கட்டளை. 'உன்மீது நீ அன்பு கூர்வதுபோல உனக்கு அடுத்திருப்பவர் மீதும் அன்பு கூர்வாயாக' என்பது இதற்கு இணையான இரண்டாவது கட்டளை. திருச்சட்ட நூல் முழுமைக்கும் இறைவாக்கு நூல்களுக்கும் இவ்விரு கட்டளைகளே அடிப்படையாக அமைகின்றன" என்று பதிலளித்தார். - (மத்தேயு 22:36-40)

நாம் கண்ணால் காணாத கடவுளை அன்பு செய்வதெப்படி?

நாமும் நம்முடைய அயலவர்களும் கடவுளுடைய சாயல்கள். நாம் நம்முடைய அயலவர்களிடத்தில் கடவுளைக் காண வேண்டும். அவரை அன்பு செய்ய வேண்டும். நாம் ஒவ்வொருவரும் கடவுளுடைய பரிசுத்த ஆலயங்களாக இருக்கின்றோம் என்று வேதம் கூறுகின்றது.


அயலவன் என்கின்ற ஆலயத்தில் குடிகொண்டிருக்கின்ற கடவுளை அன்பு செய்ய வேண்டுமாயின் அதற்கு நாம் நம்முடைய அயலவனை அன்பு செய்ய வேண்டும். நாம் நம்மை அன்பு செய்வதுபோல அயலவனை அன்பு செய்ய வேண்டும் என்று இயேசு கற்பிக்கின்றார். நாம் நம்மை அன்பு செய்கின்றோமா?

'புகைப் பிடித்தல் உடல் நலத்துக்குக் கேடானது என்று சிகரட் பெட்டியில் போடப்பட்டிருக்கின்றது. அதை வாசிக்கின்றோம். விளங்கிக் கொள்கின்றோம். ஆனால் புகைப்பிடிப்பதை விடவில்லை. அதன் மூலமாக வந்த புற்றுநோய், நுரையீரல் நோய்களினால் அவதியுறுகின்றோம். மதுபானங்கள் எவ்வளவு தீமையானவை என அறிந்திருக்கின்றோம். தாராளமாகக் குடிக்கின்றோம். ஈரலே கருகிப் போய் விடுகின்றது. போதைப் பொருட்களைப் பாவிக்கின்றோம். தீய பழக்க வழக்கங்கள், அவை தீயவை என்று தெரிந்துங்கூட தொடர்ந்து செய்கின்றோம். நமக்கே நாம் தீ மூட்டிக்கொள்கின்றோம். தற்கொலை செய்து கொள்கின்றோம். நாம் நம்மை அன்பு செய்வதில்லை என்பதற்கு மேற்கூறியவையே சான்றுகள்.

பிறரை அன்பு செய்யவும் அதன் மூலமாகக் கடவுளை அன்பு செய்து அமைதியான நிம்மதியான, சந்தோஷமான வாழ்வு வாழ நாம் முதலில் எம்மை அன்பு செய்வோம். சகல விதமான பலவீனங்கள், இயலாமைகளோடுகூடவே நாம் நம்மை ஏற்றுக் கொள்வோம். இதுவே பிறரையும் அன்பு செய்து கடவுளையும் அன்பு செய்யச் சிறந்த வழி.

எஸ்.வின்செண்ட்-கொழும்பு-12.

## கவிதைப் போட்டி இல.432



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி: 10.11.2001

கவிதைப் போட்டி இல.432
தினமுரசு வாரமலர், த.பெ. இல-1772, கொழும்பு.


## கவிதைப் போட்டி இல.429

### பரிசுக்குரிய கவிதை

### முயற்சி!

முயலாது
முடங்கிக் கிடப்பதைவிட
முயன்று
முடவனாவது மேல்!
சிறகில்லையென
சிறுமைப்பட மாட்டேன்
சின்னக் கால்களினாலே
சிறப்பாய் பாய்வேன்!
பி.சி.அன்ரன்-மட்/கூளாவடி.

### இடம் உள்ள வரை இடம் பிடித்துள்ள வியக்க வைத்த கவிதைகள்



### அக்கரைப்பச்சை

சிறகிருந்தும் பறக்கமுடியாத-பட்சிகளே..?
கட்சியாய் கூடுவிட்டுக் கூடிவரும் போதும்
சுலபமாய் படிதாண்ட எண்ணுகிறாயே..?
அக்கரையில் அகதிகளின்
அவலக் கேடுகள்தான்
ஆர்.சாந்தி-சம்பூர்-06.

### வாழ்க்கையில் முன்னேற..

எள்ளி நகையாடுபவரை பாராது
பிறர் உதவியை நாடாது
எண்ணத்தை கைவிடாது,
எமதாக்கி
தாமாக முயற்சித்தால்
பலன் எமக்கே...!
ஜெ.தனேஸ்ராஜ்-மட்டக்களப்பு.

### பதவி ஆசை

தேர்தலுக்குமன் தமிழ்க்கட்சிக்
கோழிக் குஞ்சுகள் தாமாக இணைந்தாலும்
தேர்தலுக்குப் பின் பருந்தொன்று வந்து
விருந்தாகக் கவ்வி விடும் பதவி ஆசைகாட்டி
சி.தங்கவடிவேல்-மட்டக்களப்பு.

### வழிகாட்டி

தடைகளை தகர்தெறிந்து
தன் பின்னே வருமர் மனமறிந்து
புது வழி தேடிக்கண்டு
நீ கூட்டிச் செல்கையை காண்கையில்
மனம் தவிக்குது -நானும்
உன்னில் ஒருவளாகிவிட
அபிராமி.ஜே.கல்முனை.

### ஆபத்து

ஆறறிவு காலன் எம்மை
ஆட் கொண்டு விட்டான்
ஈங்கு இனி என்ன செய்ய
காலம் தாழ்த்தின்
எம் உயிர் போய் விடும்!
இரு மனம் கொள்ளாது எல்லோரும்
ஒரு மனதாய் புறப்படுங்கள்!
கிருஷ்னன் சிவா-மஸ்கொலியா.

### முன்னேறுவோம் வாரீர்!

ஒதுங்கிப் பயந்து நின்றது போதும்
ஒற்றுமையுடனே என்பின்னே வாரீர்!
இதுவரை பொறுமை கொண்டோம் நாமும்
இனியும் வேண்டாம் முன்னேறுவோம் வாரீர்
பசறையூர்-மல்லிகா பத்மநாதன்.

### புகலிடம் தேடி..!

ஒற்றுமையாக இங்கு!
உலா வரும் பெண்குயின்களே!
அறிவிழந்த மனித இனம்!
அழித்திடுதே நாட்டை இங்கு!
எறிகணை தாக்குதலால்!
எல்லாமே இழந்தப் பின்பு!
எந்த நாட்டை நோக்கி நீவீர்.
இப்படி ஒரு படையெடுப்பு!
ஹப்புத்தளையூர்-மனோ கோபாலன்.

### தவிப்பு

இரை தேடப் போன
எங்கள் அம்மாவை
இன்னும் காணவில்லை
நெஞ்சம் தவிக்குதே எம்
தவிப்பு யாருக்கும்
தெரியவில்லையா?
பி.மாணிக்கராசா-
திருகோணமலை.

### தலைப்பாரம்!

தாய்க் குலமிங்கு
தனியாகப் பிள்ளைகளைவிட்டு
தாவியே கடலில் பாய
தலையைப் போட்டுப் பார்க்கிறது-ஏன்?
தாய் தந்தையர்க்கு இங்கு
தலைப்பாரம் கூடிவிட்டதோ??
காரைதீவூர் சிவம்-குருக்கள்மடம்

### மனித வாடை...!

ஒரே குலத்தில் பிறந்தீர்
ஒன்றாய் வாழ்ந்தீர்
ஒற்றுமை ஓங்க ஒய்யாரமாய்
பவனி வந்தீர்!
இடையில் ஏன் பக்கென்று
பாய்ந்து வழி தவறுகிறாய்-ஓ!
நீ மட்டும்தான் முன்னே
மனித வாடை இருப்பதை
முகர்ந்தாயோ?
ஏ.எப்.எம்.றியாட்-
முள்ளிப்பொத்தானை.

# வாசக[ர்] சாலை

எல்லோர் மனதையும் ஓர் நாளிலே கொள்ளை கொள்ளும் எனதினிய முரசே!

வாரத்தில் செவ்வாய் தோறும் மலராக என்முகத்தில் மலர்ந்தாலும் நீ மலர்ந்திட்ட அம்சங்கள் அனைத்தும் இனிமையோ இனிமை. அதிலும் 'ஆன்மீகம்' 'வாரம் ஒரு வார்த்தை', 'பாப்பா முரசு', 'கவிதைப் போட்டி' இவைகள் அனைத்தும் எல்லோருக்கும் புத்திபுகட்டக்கூடிய அம்சங்களாகும். எல்லோர் மனதிலும் இடம் பிடித்துள்ளன. உனது பணி தொடர எனது பலகோடி வாழ்த்துக்கள்.

ஜெயக்குமார்-தீபா-ஜோர்தான்.

அகிலம் போற்றும் அன்பின் முரசே!

உன் ஆக்கங்கள் அத்தனையும் சுவைக்கச் சுவைக்க அமிர்தம்தான். நீ உலகில் நடக்கின்ற பல விசித்திரமான விடையங்களை தேர்ந்தெடுத்து மிகவும் அற்புதமாக எம் மக்களுக்கு வழங்கி வருகிறாய். நீ கொண்டு வரும் அம்சங்கள் அனைத்துமே கண்ணினையும் மனதினையும் குளிரவைக்கின்றன. பல உள்ளங்களைக் கொள்ளை கொண்டுள்ள உன்சேவை தொடர வேண்டி வாழ்த்தும்,

கதிரமலை ராஜி-நெடுந்தீவு.

கடந்த வார முரசில் வந்த 'தகவல் பெட்டி'யில் வெளியான படங்களும் தகவல்களும் அருமையாக இருந்தன. என் அபிமான கிரிக்கெட் வீரர் சச்சினின் முகமூடி, வைரமங்கை ஆகியவை வெகுஜோர்.

அன்றைய 'சினிவிசிட்' விஜய், அஜித், மாதவன், சூர்யா ஆகிய இளம் முன்னணி ஹீரோக்களின் படங்களைத் தாங்கி வந்தது. பிரசாந்த் படம் இல்லாததுதான் ஒரு குறை.

ஆர்.செல்வி, பம்பலப்பிட்டி.

### கானகனுக்குப் பாராட்டுக்கள்


எங்கும்... எப்போதும்... எல்லோர் மனங்களிலும் நீங்காத இடத்தினை பிடித்திட்ட என்... இனிய முரசே...!

நீ... சுமந்து வரும் அத்தனை அம்சங்களும் அற்புதம்தான்.

அதிலும் 'எக்ஸ்ரே ரிப்போர்ட்', 'அலசுவது இராஜதந்திரி', 'தேன்கிண்ணம்', 'சிறுகதைகள்' போன்றவைகள் பிரமாதமாக இருக்கின்றன.

முரசு 425ல் வெளியான கானகனின் அண்டை மண்டலத்தில்... ஜெயலலிதா பதவி இழக்கும் காலம் நெருங்குகிறது.. தலைப்பிலான அம்சம் பார்த்துக் கொண்டிருந்த போதே! ஜெயலலிதா பதவி இழந்ததை அறியமுடிந்தது. சபாஷ்.. கானகனுக்கு எனது பாராட்டுக்கள்.

புதியகாத்தான்குடி முஸம்மில்-குவைத்.



சூடு சுவையுடன் சுவாரசியமாக செய்திகளை அள்ளித்தரும் தினமுரசே! நான் முதலில் விரும்பிப் படிப்பது 'சினிவிசிட்' பகுதியைத்தான் முரசு 430ல் நான் ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் 'ஆளவந்தான்' படம் பற்றிய விபரங்களை தந்து என்னை சந்தோசப்படுத்தி விட்டாய்.மற்றும் 'மின்வெட்டு' சிறுகதையும் அருமையாகவே இருந்தது. தேர்தல் பற்றிய செய்திகளை சூடுசுவையுடன் எதிர்பார்க்கின்றேன்.

சி.பேரின்பன்-கந்தளாய்.

வெற்றி முரசே!

இலங்கை அரசியல் நிலவரங்களைத் தெள்ளத் தெளிவாகக் கூறிவரும் நீ, அண்டை மண்டலமான இந்தியாவின் அரசியலையும் அலசி வருகிறாய்.

கடந்த சில வாரங்களாக உலகத்தில் பார்வையைத் தன் பக்கம் இழுத்துள்ள ஆப்கான் போர்ச் செய்திகளைத் தந்து கொண்டிருக்கிறாய். விளக்கப்படங்களுடன் போர்ச் செய்திகளைத் தரும் தண்டாயுதனுக்குப் பாராட்டுக்கள்.

எஸ். மோகனதாஸ், கொட்டாஞ்சேனை.

### அறிவித்தல்

உங்கள் கரம் சேரும் முரசில் அச்சுப் பிழையோ, அல்லது ஏதாவது பக்கத்தில் அச்சாகத் தவறி இருந்தால், உங்கள் முகவரிடம் திருப்பிக்கொடுத்து விட்டு, வேறு பிரதி வாங்கிக்கொள்ளுங்கள். 'முரசு' அச்சாகும் வேகத்தில் அரிதாக சில தாள்களில் தவறு நேர்ந்து விடுகிறது. மாற்றித்தர மறுக்கும் முகவர்கள் பற்றி எம்மிடம் புகார் தரலாம். புகாருடன் குறிப்பிட்ட தாளையும் அனுப்ப வேண்டும். திருப்தியான சேவையே முரசின் மூச்சு.

# உங்கள் பக்கம்

## தமிழர்களின் அவல நிலை

வடமேல் மாகாணத்தின் புத்தளம் மாவட்டத்தில் வாழும் தமிழ் மக்கள் பல்வேறு பிரச்சனைகளை எதிர்கொண்டு வருகின்றனர். அரசியல் ரீதியில் அநாதைகளாகவே வாழ்கின்றனர். புத்தளம் தேர்தல் மாவட்டம் புத்தளம், சிலாபம், ஆனமடுவ, நாத்தாண்டிய, வென்னப்புவ ஆகிய ஐந்து தேர்தல் தொகுதிகளை உள்ளடக்கிய பெரும் ஒரு மாவட்டமாகும். சகல தொகுதிகளிலும் பெருமளவிலான தமிழ் வாக்காளர்கள் உள்ளனர்.

ஆனால் இது காலம் வரையும் எந்தவொரு தமிழ்ப் பிரதிநிதியும் பாராளுமன்றம் செல்லவில்லை. தேர்தல்களில் கட்சிகளின் சார்பில் போட்டியிட்டாலும் அவர்கள் பெரும்பான்மை அரசியல் வாதிகளின் இன அடிப்படை வாதம் காரணமாக அவர்களின் கைப்பொம்மையாகவும், அவர்களை பாராளுமன்றத்திற்கு அனுப்புவதற்காக வக்காலத்து வாங்கும் ஒரு வேட்பாளராகவுமே காட்டிக் கொண்டு வந்துள்ளனர். சரியான அடிப்படையில் எதிர்வரும் பொதுத் தேர்தலில் கட்சிகளின் சார்பில் எவரும் போட்டியிடாது தனி ஒருகுழுவாக சுயேட்சை வேட்பாளர்கள் குழு என்ற அடிப்படையில் களத்தில் குதிப்பார்களேயானால் ஒருவர் பாராளுமன்ற பிரதிநிதியாக செல்லும் வாய்ப்பு அதிகமாகவே உள்ளது.

இன்று இப்பிரதேச மக்கள் மதம், மொழி, கலாசாரம் மாற்றம் பெறுவதில் 1983 ஆடிக்கலவரத்தின்பின் கூடிய கவனம் செலுத்தி வருகின்றனர். தாய் மொழியான தமிழ் மொழி மூலமான கல்வி கற்பதை நிறுத்தி பிற மொழியைக் கற்பிப்பதில் பல பெற்றோர்கள் பெரும் உறுதியுடன் நிற்கின்றனர். இதற்கு முக்கிய காரணம் இன்றைய யுத்த கால சூழலேயாகும்.

புத்தளம் மாவட்டத்தில் சிலாபத்திற்கு முன்னேஸ்வரம் ஆலயம் மட்டும் நமக்குக் கிடைக்காமல் போயிருந்தால் புத்தளம் மாவட்டத்தில் தமிழ் மக்கள் வரலாற்றின் ஒரு பகுதி எமக்குத் தெரியாமலேயே போயிருக்கும். குறிப்பாக சிலாபம் பகுதியில் தமிழ் மக்கள் சீரும் சிறப்புடன் வாழ்ந்தார்கள் என்று கூறுவதற்கு முன்னேஸ்வரம் ஆலயத்தின் செப்பேடுகள்தான் சாட்சியாக உள்ளன. அந்தளவிற்கு சிறப்பு வாய்ந்தது முன்னேஸ்வரம் ஆலயம்.

சில ஆங்கல நூல்கள் கூட இப்பகுதி தமிழர்களின் வரலாற்றை எடுத்துக் கூறுகிறன. முன்னேஸ்வரம் கிராம மக்கள் கூட இன்று வேற்றுமொழி, இன, கலாசாரத்திற்குள் விழுந்து விட்டனர். பண்டைய காலத்து தமிழ் அரசர்களுக்கு குருவாகவும், சேனாதிபதியாகவும் சிறப்புடன் இருந்த பலர் வாழ்ந்த கிராமம்தான் மருதங்குளம். இக்கிராம மக்கள் மிகவும் வேகமாக மாற்றம் பெற்று வரு கின்றனர். வீரசிங்கம் வீரசிங்கவாகவும், விஜய சிங்கம் விஜய சிங்கவாகவும் மாற்றம் பெற்று வருகின்றனர். அடையாள அட்டைகள் கூட மாற்றம் செய்யப்பட்டு வருகிறது. சிலாபம் பகுதியில் போதிய மாணாக்கர்கள் இல்லாமையினால் பல தமிழ் ஆரம்ப பாடசாலைகள் மூடு விழா நடாத்தப்படவும் உள்ளது.

கல்வியைப் பொறுத்தவரை எல்லாப் பாடசாலைகளிலும் பல பாடங்களுக்கும் தரமான ஆசிரியர்கள் இல்லை. பல பாடசாலைகளில் இடநெருக்கடியும், போதிய கட்டட வசதியும் இல்லை.

சிலாபம் இந்து வாலிபர் சங்கம் முன்னேஸ்வரம் ஆலயத்திற்கு அருகாமையில் கைவிடப்பட்ட நிலையில் கிடந்த வயல் காணியில் ஒரு ஏக்கரை பத்து வருடத்துக்கு முன்பு கொள்வனவு செய்தது. இந்தக் காணியில் மண் நிரப்புவதற்கு அரச அதிகாரிகளிடம் அனுமதி கேட்டால் ஒரு சிலரின் முயற்சியால் தடை செய்யப்பட்டுவிட்டது. இக்காணியில் ஓர் இந்து கலாசார மண்டபமும், அறநெறிப்பாடசாலை ஒன்றும் நிறுவுவதற்கே சபையினர் முயற்சி செய்து வருகின்றனர். எதிர்வரும் தேர்தலின் பின் வரும் தமிழ் அமைச்சர்கள் இக்காணி விடயத்தில் தங்களின் அரசியல் செல்வாக்கை பாவித்து முன்னேஸ்வரம் வடிவாம்பிகா தேவியின் பெயரில் கட்டடம் அமைக்க வழிவகுக்க வேண்டும்.

*சிலாபம் திண்ணனூரான்.*

மடல்கள் மற்றும்
ஆக்கங்கள்- உட்பட சகல
தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:-1772,கொழும்பு.
தொலைபேசி: 074-514282
தொலை நகல் (Fax):-074-513266

# தேர்தல் வன்முறைகளை கட்டுப்படுத்தும் அதேவேளை புலிகளின் அச்சுறுத்தலில் இருந்தும்

# அரசியல் தலைவர்களை பாதுகாக்கும் சவாலுக்கு முகம் கொடுத்துள்ள பாதுகாப்புத் தரப்பினர்

கடந்த 27 திகதி சனிக்கிழமையுடன் வேட்புமனுத் தாக்கல் செய்யும் இறுதி நாள் முடிவடைந்ததையடுத்து சகல அரசியல் கட்சிகளும் சுயேட்சைக்குழுக்களும் தமது தேர்தல் பிரசாரப் பணிகளை ஆரம்பித்திருக்கும் அதேவேளை பிரச்சாரக் கூட்டங்களுக்கு பாதுகாப்பு வழங்குவது குறித்து பொலிஸ் தலைமையகம் தீவிரமாக ஆராய்ந்து வருகின்றது.

இது தொடர்பாக கடந்த ஒரு வாரத்துக்குள் பொலிஸ் தலைமையகத்தில் பல சுற்றுப் பேச்சுவார்த்தைகள் நடைபெற்றுள்ளன.

தேர்தல் பிரசாரக் கூட்டங்களின்போது வேட்பாளர்கள் கடைப்பிடிக்கவேண்டிய ஒழுங்கு முறைகள் குறித்தும் பொலிஸ் தலைமையகம் அறிவுறுத்தியுள்ளது. இதன்படி இரவு 9 மணியின் பின்னர் கூட்டங்கள் நடத்துவது தடைசெய்யப்பட்டதுடன் ஊர்வலங்களுக்கும் தடைவிதிக்கப்பட்டுள்ளது.

கடந்த காலங்களை விட இம்முறை பொதுத் தேர்தலில் கூடுதலானவர்கள் போட்டியிடுவதாலும் கட்சிகள், தனிநபர்களுக்கு மத்தியில் பிளவுகள் முன்னெப்போதுமில்லாத அளவு அதிகரித்திருப்பதாலும் பரவலான தேர்தல் வன்முறைகள் நடைபெறலாம் என்று எதிர்பார்க்கப்படும் அதேவேளை பிரசார நடவடிக்கைகளின்போது அரசியல் வாதிகளை குறிவைத்து புலிகளின் தாக்குதல்கள் இடம்பெறலாம் என்றும் அச்சம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொதுத் தேர்தலின்போது பாதுகாப்பில் ஏற்படும் குறைபாடுகளை பயன்படுத்தி உயர் மட்ட படை அதிகாரிகளை அல்லது அரசியல் தலைவர்களை கொலை செய்யும் நோக்கத்துடன் புலிகள் இயக்க தற்கொலையாளிகள் தலைநகருக்குள்ளும் நாட்டின் வேறு சில முக்கிய நகரங்களுக்குள்ளும் ஊடுருவியிருப்பதாக புலனாய்வு வட்டாரங்களை மேற்கோள் காட்டி அரசாங்கம் செய்தி வெளியிட்டுள்ளது.

இதனால் உள்ளூர் கட்சிகளிடையில் வன்முறைகளை கட்டுப்படுத்துவதுடன் புலிகளின் தாக்குதல்களை தடுக்கவேண்டிய பொதுப் படையான பாதுகாப்பு ஏற்பாடுகளையும் செய்யவேண்டிய நிலையில் பொலிஸார் உள்ளனர்.

இந்நிலையில் கடந்த வாரம் முதல் பொலிஸ் தலைமையகத்தினால் மேற்கொள்ளப்பட்ட இடமாற்றங்களை பொலிஸ்மா அதிபர் லக்கி கொடித்துவக்கு உறுதி செய்தார். தேர்தல் காலங்களின் போது பொலிஸாரின் இடமாற்றம் புதிய விடயமல்ல என்றும் நீதியான தேர்தலுக்கு அவசியமென்றும் செய்தியாளர் மாநாடொன்றில் அவர் குறிப்பிட்டார்.

பொதுத் தேர்தலின்போது கூடுதலான வன்முறைகள் இடம்பெறலாம் என்று எதிர்பார்க்கப்படும் இடங்களில் பாதுகாப்பு கடமைகளுக்காக இராணுவத்தினரையும் பயன்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

சாதாரணமாக ஒரு வாக்குச் சாவடியில் ஆயுதம் தாங்கிய இரண்டு பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்படுவார்கள் என்றும் விசேட சந்தர்ப்பங்களில் மேலதிகப் பொலிஸாரோ, இராணுவத்தினரோ பயன்படுத்தப்படுவார்கள் என்றும் தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸாநாயக்கா தெரிவித்திக்கிறார். எவ்வானெனினும் புலிகளின் அச்சுறுத்தலிலிருந்து அரசியல் தலைவர்களுக்கு பாதுகாப்பு அளிக்கும் அதேவேளை கட்சிகளுக்கிடையிலான தேர்தல் வன்முறைகளை பாதுகாப்பதுமாக பாதுகாப்பு தரப்பு பலத்த சவாலை எதிர்க்கொண்டுள்ளது.

## மூதூர் கைக்குண்டு வீச்சில்
## 6 வயது சிறுவன் பலி 8 பேர் காயம்

மூதூரில் கடந்த ஒரு வாரகாலமாக இடம்பெற்றுவரும் பதற்றநிலைக்கு மத்தியில் கடந்த திங்கட்கிழமை இரவு ஹைதர் நகர் பகுதியில் மூன்று வீடுகளின் மீது கைக்குண்டுகள் எறியப்பட்டதில் 6 வயது குழந்தை ஒன்று உயிரிழந்ததுடன் 8 பேர் படுகாயமடைந்தனர்.

கடந்த வாரம் இடம்பெற்ற புலிகளின் தாக்குதலையடுத்து இப்பகுதியில் தமிழ், முஸ்லிம் மக்களிடையில் பதற்றநிலை ஏற்பட்டது. இரு இனங்களையும் சேர்ந்த இளைஞர்கள் கோபாவேசம் கொண்டவர்களினால் வெட்டிக் கொலை செய்யப்பட்டதையும் காயத்துக்கு உள்ளாக்கப்பட்டதையும் அடுத்து சனி, ஞாயிறு தினங்களில் மாலை நேரத்தில் பொலிஸாரால் ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டிருந்தது. இந்நிலையிலும் கூட கடந்த திங்கள் அன்று இரவு 9.45 மணியளவில் வீடுகள்மீது கைக்குண்டு வீசப்பட்டுள்ளது.

தற்போது நிலைமை கட்டுப்பாட்டின் கீழ் இருப்பதாகவும் இரு இனங்களுக்கு மிடையில் முறுகல் நிலையைத் தவிர்க்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

எவ்வாறெனினும் மூதூர் பகுதி மக்கள் இரவு நேரத்தை மிகுந்த அச்சத்துடன் கழிக்க வேண்டி ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

## ஐ.தே.கவின் முதலாவது கூட்டம் கண்டியில்

ஐக்கிய தேசியக் கட்சியின் முதலாவது தேர்தல் பிரசாரக் கூட்டம் திங்கட்கிழமை கண்டியில் ஆரம்பமானது.

ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க உட்பட கட்சியின் பல முக்கியஸ்தர்கள் கலந்துகொண்ட இந்தக் கூட்டத்தில் அண்மையில் பொதுஜன ஐக்கிய முன்னணியில் இருந்து எதிர்க் கட்சிக்கு மாறிய உறுப்பினர்களும் சிறுபான்மைக் கட்சித் தலைவர்களும் கலந்து கொண்டு உரையாற்றினர்.

## லொறிகளுக்குத் தடை

மட்டக்களப்பு, செங்கலடி, பதுளை வீதியில் லொறிகள் செல்வதற்கு படையினர் தற்காலிக தடைவிதித்துள்ளனர்.

கடந்த வாரம் இந்த பகுதிகளுக்குச் சென்ற 4 லொறிகளை புலிகள் கடத்திச் சென்றுள்ளனர். இதனையடுத்தே இந்தத் தடை விதிக்கப்பட்டுள்ளது. இந்தத் தடையைத் தொடர்ந்து இந்தப் பகுதிகளிலிருந்து கல், மண் போன்றவை நகர்ப்பகுதிகளுக்கு எடுத்து வருவது தடைப்பட்டுள்ளது.

## கடந்த காலங்களில் ஜே.வி.பி.யும் ஐ.தே.க.வும் போட்டிக்கு ஆட்கொலை செய்ததாக கூறுகிறார் ஜனாதிபதி

கடந்த அச்சம் நிலவிய காலப்பகுதியில் ஐக்கிய தேசியக் கட்சியும், ஜே.வி.பி.யும் போட்டிக்கு ஆட்கொலை செய்ததாகவும் இந்த வன்செயல்களில் தனது கணவரும் பலியானதாகவும் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்கா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

லண்டனில் பி.பி.சி. சேவையுடனான பேட்டியொன்றிலேயே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

கடந்த வன்முறை காலத்தில் எனது கணவர் கொல்லப்பட்டார். அவரை புலிகள் கொலைசெய்யவில்லை. இலங்கையில் திக்குத் திசையற்ற வன்செயல்கள் தலைவிரித்தாடிய காலத்தில் எனது கணவரின் கொலை இடம்பெற்றது. அன்று வன்முறையே ஆட்சி செலுத்தியது. அரசாங்கத்தினால் வன்செயல்கள் தூண்டிவிடப்பட்டன. மக்கள் விடுதலை முன்னணி தனக்கு பிடிக்காத சகலரையும் கொன்றொழித்தது என்றும் திருமதி குமாரதுங்க தெரிவித்தார்.

யுத்தம் இனப்பிரச்சனை தொடர்பாக கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி சுமார் 60 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் இலங்கையின் போரினால் கொல்லப்பட்டிருப்பதாகவும் அவர்களுள் அதிகமானவர்கள் இளவயதுடையவர்கள் என்றும் குறிபிட்டார். புலிகள் சிறுவர்களை யுத்தத்திற்காக கடத்துவதாகவும் தற்கொலையாளிகளாக அவர்களை பாவிப்பதாகவும் கூறினார்.

இந்தப் பிரச்சனையைத் தீர்க்க சர்வதேச சமூகம் ,எவ்வாறு உதவ முடியும் என்று பி.பி.சி. செய்தியாளரின் கேள்விக்கு பதிலளித்த திருமதி குமாரதுங்க, அது மிகவும் நெருக்கடியான பிரச்சனை. பயங்கரவாதம் எது என்பதை உலகம் முதலில் உணர்ந்துகொள்ளவேண்டும். இது மிக வேகமாகவும் ஆபத்தாகவும் வியாபித்து வருகின்றது.

நாடுகளுக்கிடையிலான யுத்தம் இன்று சர்வதேச போர்களாக விஸ்தரிக்கப்பட்டுள்ளது. பயங்கரவாத அமைப்புக்களாலேயே இவ்வாறு ஏற்பட்டுள்ளது. உலகம் முழுவதிலும் நிலைமை இதுதான். ஒரு நாட்டின் எல்லைகளால் மாத்திரம் பயங்கரவாதத்தை நிறுத்திவிட முடியாது. புதிய தொழிநுட்பத்தின் உதவியுடன் அது பரவக்கூடும். உலகம் இதனை உணர வேண்டும். செயல் ரீதியில் பங்களிப்பு செலுத்தவேண்டும். சட்டங்களை பிறப்பிப்பதால் மாத்திரம் பிரயோசனமில்லை. ஐக்கிய நாடுகள் சபையோ வேறு அமைப்புக்களோ சட்ட மூலங்களை நிறைவேற்றிக் கொள்வதால் பிரச்சனையை தீர்த்துவிட முடியாது. அவை செயல்படுத்தப்பட வேண்டுமென்று ஜனாதிபதி குறிபிட்டார்.

## வரதர் அணி உறுப்பினர் சுட்டுக்கொலை

வாழைச்சேனை பேத்தாழைப் பகுதியில் ஞாயிற்றுக்கிழமை காலை ஈ.பி.ஆர்.எல்.எப். (வரதர் அணி) உறுப்பினரொருவர் சுட்டுக்கொல்லப்பட்டார்.

இந்தச் சம்பவத்தில் கொல்லப்பட்டவர், ஒரு பிள்ளையின் தந்தையான சுந்தரமூர்த்தி ஜீவானந்தமூர்த்தி (ஆனந்தன்) என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

வாழைச்சேனை துறைமுகச் சந்தியிலுள்ள தங்கள் அலுவலகத்திலிருந்து சக உறுப்பினரொருவருடன் பேத்தாழை சிவன் கோயில் வீதிக்குச் சென்றுகொண்டிருந்தபோதே, இவர்களைப் பின் தொடர்ந்து சென்ற இரு இளைஞர்களில் ஒருவர் தன் வசமிருந்த கைத்துப்பாக்கியால் இவரைச் சுட்டுக் கொன்றுவிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர்.

தலையில் இரு துப்பாக்கிச் சன்னங்கள் பாய்ந்த நிலையில் இவர் அந்த இடத்திலேயே வீழ்ந்து உயிரிழந்தார்.

## நான்கு தமிழ்க்கட்சி கூட்டமைப்பின் ஒரே நோக்கம் ஈ.பி.டி.பி.யை பலவீனப்படுத்துவதேயாகும்

**–அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா–**

இனத்தின் பெயராலும், ஒற்றுமையின் பெயராலும் ஐக்கியப்பட்டுள்ளதாக நான்கு தமிழ் கட்சிகளின் கூட்டமைப்பு எனக் காட்டிக் கொள்வதன் ஒரே நோக்கம் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி.)யை பலவீனப் படுத்துவதேயாகுமென அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் தேர்தல் வேட்புமனுவைத் தாக்கல் செய்த பின்னர் கட்சி அலுவலகத்தில் குழுமியிருந்த ஆயிரக்கணக்கானவர்களுக்கு தொலைபேசி மூலம் உரையாற்றிய அமைச்சர் தொடர்ந்து உரையாற்றுகையில்;

"1977 பொதுத் தேர்தலில் ஒன்றுபட்ட சக்தியாக மக்கள் ஆதரவை பெற்றபின் கூட்டணியினர் என்ன செய்தார்கள் என்பதை மக்கள் நன்கறிவர். பகட்டு வாழ்வுக் குட்பட்டு பிரச்சனைகளைத் தீர்ப்பதில் முனைப்பாகச் செயற்படாது விட்டனர். இதனால் இவர்கள் தத்தம் பதவிகளைக் கூடக் காப்பாற்றிக்கொள்ள முடியாமல் ஒளித்து ஓடவேண்டிய நிலைமையே ஏற்பட்டது.

நாங்களும் வாடிய பயிர் கண்டு வாடினோம் என்று பாடிக்கொண்டிருக்க முடியாது. உங்கள் துன்பங்கள், துயரங்கள் பற்றி எடுத்துரைத்து அனுதாபம் தேடிக்கொண்டிருக்க இயலாது.பயிர் வாடுவதற்கான காரணத்தைக் கண்டறிந்து நீர் ஊற்றிப், பசளையிட்டுச் செழுமைப் படுத்துவதே பொருத்தமானதாகும். அதனையே நாம் செய்து கொண்டிருக்கிறோம். ஆனால், நாம் இவ்வாறு செயற்படுவதை விரும்பாத சக்திகள் கூட்டுச்சேர்ந்து கூத்தாடுகின்றன.

கடந்த பொதுத் தேர்தலின்போது எமக்கு பத்து ஆசனங்கள் கிடைத்திருக்குமாயின் வடக்கு, கிழக்கு மாகாணத்தின் அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு பணிகளை முழுமையாகப் பொறுப்பேற்றிருக்க முடியும். கடந்த காலத்தில் அஷ்ரப் மற்றும் பேரியல் அஷ்ரப் போன்றவர்கள் தமது சமூகத்தின் முன்னேற்றத்திற்கு பெருமளவு உதவியுள்ளனர்.

அது தவறு எனக்கூற முடியாது.

ஒரு தனி மனிதனுக்கு பசியும், தாகமும் என்று இரு வெவ்வேறு உணர்வுகள் எவ்வாறு இருக்கிறதோ, அதேபோலவே இனத்திற்கு அடிப்படைப் பிரச்சனைகளும் இருக்கின்றன. அன்றாடப் பிரச்சனைகளும் இருக்கின்றன. இவற்றில் ஒன்றிற்குத் தீர்வு காண்பதற்காக மற்றதை ஒத்திவைக்கவோ, தள்ளிப்போடவோ முடியாது.

மத்தியில் கூட்டாட்சியும், மாநிலத்தில் சுயாட்சியும் என்பதே எமது அரசியல் இலக்கு. எக்காலமும், பிரிக்கமுடியாத வடக்கு-கிழக்கு மாகாணத்தில் விசேட அதிகாரங்களுடனான சுயாட்சி பெறுவதே சமாதான சகவாழ்வை நிலை நாட்டும் வழியாகும். இக்கோரிக்கைகளுக்கு செயல் வடிவம் கொடுப்பதற்காகவே எங்கள் கரங்களை பலப்படுத்த உங்கள் வாக்குகளைப் பயன்படுத்த வேண்டும்" எனக் கூறினார்.

## பொலிஸ்மா அதிபர் உத்தரவு

தேர்தல் சட்ட விதிகளை மீறிச் செயற்படுவோர் எவரானாலும், அவர்கள் மீது கடும் நடிவடிக்கைகள் எடுக்கும்படி பொலிஸ் மா அதிபர் லக்கி கொடித்துவக்கு நாட்டில் உள்ள சகல பொலிஸ் நிலையங்களின் பொறுப்பதிகாரிகள், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சர்கள், பிரதிப் பொலிஸ் மா அதிபர்கள் ஆகியோருக்கு உத்தரவிட்டுள்ளார்.

எந்தவொரு அரசியல் கட்சிக்கும் சார்பாக செயற்படும் பொலிஸார் தொடர்பான முறைப்பாடுகளைத் தமக்கு அனுப்பி வைக்கும்படியும், அவ்வாறான பொலிஸார் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

சுதந்திரமான, நீதியான தேர்தல் ஒன்று நடைபெற, பொலிஸார் தமது பணிகளைச் செய்ய வேண்டும் என்பதைத் தான் எதிர்பார்ப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

## புலிகளின் ஆயுதக் கடத்தலை தடுக்க 'வருணகிரண' நடவடிக்கையும் இந்திய கடற்படையின் கண்காணிப்பும் தீவிரம்!

முல்லைத்தீவு கடற்பரப்பினூடாக விடுதலைப்புலிகள் ஆயுதங்கள் கடத்துவதை தடுப்பதற்காக 'வருணகிரண' படையினர் தொடர்ந்தும் பலப்படுத்தப்பட்டு வருவதாகக் கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் தயாசந்தகிரி தெரிவித்துள்ளார்.

அண்மைக் காலமாக சர்வதேச கடற்பரப்பினூடாக விடுதலைப் புலிகள் முல்லைத்தீவு கடற்பகுதியில் ஆயுதக் கப்பல்களைத் தருவித்து பெருமளவு ஆயுதங்களை தரையிறக்கியிருந்தனர்.

இதுகுறித்து கருத்து தெரிவித்துள்ள கடற்படைத் தளபதி தயா சந்தகிரி, "சர்வதேச கடற்பரப்பினூடாக வடக்கு-கிழக்கு பகுதிகளில் புலிகளுக்கு ஆயுதங்களை கடத்தி வந்த பலபடகுகள் கடற்படையினரின் தாக்குதல்களால் முடமாக்கப்பட்டுள்ளன.

அண்மைக்காலங்களில் நடைபெற்ற ஆழ் கடல் சமர்கள் மூலம், புலிகளின் படகுகள், ஆயுதங்கள், வெடிபொருட்கள் மற்றும் எரிபொருட்கள் கொண்டுவரப்பட்டமை தெளிவாகத் தெரிய வந்துள்ளது.

கடந்தவாரம் கூட பருத்தித்துறை கடற்பரப்புக்கு அப்பால் கடற்சமர் நடைபெற்றுள்ளது. பெருமளவு எரிபொருட்களுடன் வந்த புலிகளின் படகுகள் தடுத்து நிறுத்தப்பட்டதுடன் சில அழிக்கப்பட்டன. இதனால், அவர்களுக்கு பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

எமது கடற்படை வளம் குறிப்பிடத்தக்க அளவே இருந்தாலும் நாம் நல்ல பலன்களை அடைந்து வருகிறோம். முல்லைத்தீவு கடற்பரப்பில் சாலை முதல் அலம்பில் வரையான முக்கிய கடற்பரப்பில் நாம் தடைகளை ஏற்படுத்தியுள்ளதால் புலிகளின் விநியோகங்கள் தடைப்பட்டுள்ளன.

இருந்தாலும், புலிகளின் விநியோக செயற்பாடுகளை தடுப்பதற்காக இப்பகுதியில் நிலை கொண்டுள்ள 'வருணகிரண' படையினருக்கு வளங்கள் மேலும் மேலும் தேவை. 'வருணகிரண' நடவடிக்கைக்கு முன்னர்கூட இப்பகுதியில் கடற்படையினருக்கு பெரும் நெருக்கடிகள் இருந்தன.

அண்மைக்காலமாகப் புலிகள் பெருமளவு இராணுவத் தளபாடங்களை நாட்டுக்குள் கடத்தி வருகின்றனர். எனினும், இந்த இராணுவத் தளபாடங்கள் எவையென அடையாளம் காணப்படவில்லை. ஆனாலும், புலிகளுக்கு எரிபொருளுக்கும் வெடிபொருட்களுக்கும் பெரும் தட்டுப்பாடு நிலவுவது தெரியவருகிறது.

இந்த, ஆயுதக் கொள்வனவுகள் மூலம் புலிகள் மற்றொரு பாரிய மோதலுக்குத் தயாராகி வருகிறார்கள். போதியளவு வளங்கள் கிடைத்தால் அவர்கள் தாராளமாக செயற்படுவதை எம்மால் தடுத்து நிறுத்த முடியும்.

அத்துடன், அவர்களுக்கு ஆயுதங்களை எடுத்து வந்து சர்வதேசக் கடற்பரப்பில் வைத்து சிறிய படகுகளுக்கு அவற்றை மாற்றும் தாய்க்கப்பலை விரைவில் கண்டு பிடிப்போம். எமது படையினர் தங்களுக்குக் கிடைத்துள்ள குறைந்த வளங்களைப் பயன்படுத்தி மிகுந்த சிரமங்களின் மத்தியில் எதிரிக்கு எதிராக செயற்பட்டு வருகின்றனர்.

எமக்கு அதிக வளங்கள் கிடைக்குமாயின் புலிகளுக்கான விநியோகங்களை எம்மால் முற்றாகவே கட்டுப்படுத்த முடியும் என உறுதியாக நம்புகிறேன். இதன் பின்னர் 90 வீதமான போரை வெல்ல முடியும்" எனவும் தெரிவித்தார்.

இதேவேளை புலிகள் ஆயுதங்கள் கடத்தி வருவதைத் தடுத்து நிறுத்த இந்தியக் கடற்பரப்பில் ரோந்து நடவடிக்கைகளை அதிகரிக்குமாறு இலங்கை அரசு இந்திய அரசைக் கேட்டதையடுத்து அந்தமான், நிக்கோபார் தீவுப் பகுதிகளில் இந்தியக் கடற்படையினர் தங்கள் நடவடிக்கைகளை அதிகரித்துள்ளனர்.

## இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவிடம் பரஸ்பரம் முறைப்பாடுகள்

முன்னாள் அமைச்சர் எஸ்.பி.திசாநாயக்காவிற்கு எதிராக இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

சமுர்த்தி நிதிக்கு சொந்தமான 16 கோடி ரூபா பணம் மோசடி செய்யப்பட்டமை தொடர்பாகவே இம்முறைப்பாட்டில் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

கெஸ்பாவை பிரதேச அபிவிருத்தி செயலாளர் நிமால் ஜயரட்ன என்பவர் தாக்கல் செய்துள்ள மேற்படி முறைப்பாட்டில்,

சமுர்த்தி விவகார அமைச்சராக இருந்த எஸ்.பி.திஸாநாயக்க சமுர்த்தி நிதியத்திற்கு சொந்தமான பணத்தை மோசடி செய்தமைக்கான ஆதாரங்கள் இருக்கின்றன. இலஞ்ச ஆணைக்குழு அதிகாரிகள் விசாரணை செய்யும் பட்சத்தில் அதனை வெளியிட சமுர்த்தி அதிகாரிகள் தயாராக இருக்கின்றனர்.

அங்குராங்கெத்தயில் மிகப்பெரிய ஆடம்பர மாளிகையொன்றை கட்டுவதற்கு எஸ்.பி.திஸாநாயக்காவினால் எப்படி முடிந்தது? அத்தோடு அமைச்சர் ஒருவருக்கு 35 ஆயிரம் ரூபாவே மாதாந்த சம்பளம். அவ்வாறு சம்பளம் பெற்ற முன்னாள் அமைச்சர் எவ்வாறு ஆடம்பர மாளிகை கட்டமுடிந்தது? இதுபற்றி விசாரணை நடத்தப்படவேண்டும். என்று முறைப்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை பொதுஜன ஐக்கிய முன்னணிக்கு நெருக்கமான வர்த்தகர் எனக் கருதப்படும் ரொனி பீரிஸ் என்பவருக்கு இலங்கை வங்கியின் லண்டன் கிளையினால் வாங்கப்பட்ட 850 கோடி ரூபாவுக்கான வட்டி அறவிடப்படாமல் தள்ளுபடி செய்யப்பட்டமை தொடர்பாக விசாரணை செய்யுமாறு ஐ.தே.க. உப தலைவர் காமினி அத்துக் கோரள இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்துள்ளார்.

# முரசம்

## தேர்தல் வன்முறைகளுக்கு முடிவு கட்டுங்கள்

***அன்புள்ள உங்களுக்கு, வணக்கம்.***

ஜனநாயகத்தின் பலத்தையும் அதன் சொந்தக்காரர்களான மக்கள் சக்தியையும் வெளிப்படுத்தும் நிகழ்வாகக் கருதப்படும் தேர்தல் இந்த நாட்டை பொறுத்தமட்டில் என்றால் மற்றொரு யுத்தம்தான்!

தேர்தல் அறிவிக்கப்பட்டது தொடக்கம் அதனுடன் சம்பந்தப்பட்டவர்கள் தமது செயற்பாடுகளால் மக்களை ஒருவகை பீதிக்கு உள்ளாக்கி முடிவுகள் வெளியாகும் வரை அச்சம் கலந்த சூழ்நிலையில் வாழச் செய்து விடுகின்றனர்.

இந்த நாட்டில் தேர்தல்களை மானிட விழுமியங்களுக்கு ஏற்றவகையில் கொலைகள், தாக்குதல்கள், தீவைப்புகள் இல்லாத ஓர் அமைதியான ஜனநாயகத் தடை தாண்டலாக நடத்த முடியாதா என்ற கேள்வி முன்னெப்போதும் இல்லாத அளவு வலுப்பெற்றுள்ளது.

சகல அரசியல் கட்சிகளும் அரசியல்வாதிகளும் தாம் வன்முறையை எதிர்ப்பதாகவே கூறுகின்றனர்.

முறைகேடுகளில் ஈடுபடுபவர்கள் மீது அவர்களது தகுதி தராதரம் பாராது சட்ட நடிவடிக்கை எடுப்போம் என்று அனைத்து கட்சித் தலைவர்களும் சபதமிட்டுக் கூறுகின்றனர்.

ஆனால் யதார்த்தம் நேரெதிராக இருக்கின்றது.

மக்களின் ஜனநாயக உரிமை பகிரங்கமாக மீறப்படுகின்றது.

வேட்பு மனுத்தாக்கல் செய்யும் நாள் முடிவுற்ற ஒரு வாரகாலத்துக்குள் நூற்றுக்கும் மேற்பட்ட தேர்தல் வன்முறைகள் குறித்த முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன.

ஜனநாயகம் என்பது மக்களின் உரிமைகளை அடிப்படையாகக் கொண்ட ஓர் அரசியல் வேதம்! ஜனநாயகத்தின் ஒவ்வொரு புள்ளியிலும் மக்கள் தான் இருக்கின்றார்கள்!

இந்த மக்களின் நலனுக்காக பாராளுமன்றத்தினால் ஆற்றப்பட வேண்டிய பங்களிப்பு இலேசானதல்ல.

நாட்டு மக்களுக்கு உச்சகட்ட சுபீட்சத்தை பெற்றுக் கொடுப்பதே பாராளுமன்றத்தின் முதல் பணி முக்கிய பணியும் அதுதான்!

இந்த நோக்கங்களை வெற்றிகரமாக அடையவேண்டுமாயின் உயர்தகைமை கொண்ட ஒரு பிரிவினர் மக்களால் தெரிவ செய்யப்பட வேண்டும்.

நீதியானதும் நேர்மையானதுமான ஒரு தேர்தலின் மூலம் மாத்திரமே அதனை செய்ய முடியும்!

ஒவ்வொரு வன்முறையின் இறுதியிலும் நசுக்கப்படுவது மக்கள்தான்!

இதன் காரணமாகவே வன்முறைகளை தவிர்க்க வேண்டுமென கோரப்படுகின்றது.

மேடைகளில் மகாத்மா வேஷமிட்ட சிலர் மேடையை விட்டு இறங்கியதும் நடந்து கொள்ளும் விதம் மிகவும் அநாகரிகமாக இருக்கின்றது.

மக்களில் அநேகமானவர்கள் சுத்த முட்டாள்கள் எனக் கருதியே இவர்கள் செயற்படுகின்றனர்.

அவ்வாறிருப்பின் அது அந்த அரசியல்வாதிகளின் கண்மூடத்தனமே தவிர மக்கள் முட்டாள்கள் என்று நினைக்கத் தேவையில்லை.

மறுதரப்பில் இருக்கும் காடையர்கள்மீது கை நீட்டும் ஒவ்வொருவரும் தமது தரப்பில் இருக்கும் காடையர்களை ஒதுக்க முன்வருவார்களாயின் நிலைமை சீராகும்.

எனவே தேர்தல் வன்முறைகள் குறித்து முறைப்பாடு செய்து தாம் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளதாக காட்டிக் கொள்ள முயற்சி எடுப்பதை விட சுமுகமான தேர்தல் ஒன்றுக்காக சுயமாக உறுதிகொண்டால் மாத்திரமே ஜனநாயகத்தின் உயிர் பாதுகாக்கப்படும்!

■ ■

*மீண்டும் மறுமடலில் வந்து கலக்கும்வரை*

*என்றென்றும் அன்புடன்,*
*ஆசிரியர்.*

---


**எக்ஸ்ரே ரிப்போர்ட்**

# குறிதவறிய தற்கொலைக் குண்டு

புலிகளின் மற்றொரு குறிதவறிய தற்கொலைக் குண்டு கடந்த திங்கட்கிழமை கொழும்பு நாரஹேன்பிட்டி பகுதியில் வெடித்தது. இந்த குண்டுதாரியின் இலக்கு பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயகவாக இருக்கலாம் என்று பரவலான ஊகங்கள் தெரிவிக்கப்படுகின்றன. அன்றைய தினம் திரு.விக்கிரமநாயக அந்தப் பகுதியில் பொது வைபவம் ஒன்றில் கலந்து கொள்ளவிருந்தார். இதை வைத்தே இந்த சந்தேகம் எழுப்பப்படுகின்றது. எவ்வாறெனினும் தலை நகரில் கைவசம் இருந்த தற்கொலைதாரி ஒருவரை இலக்கை எட்டாமலே புலிகள் இழந்துள்ளனர்.

இந்தக் கொலையாளியின் இறுதி நேர செயற்பாடுகளை அவதானிக்குமிடத்து இவர் தலைநகர் குறித்து போதிய தெளிவற்றவராகவும், சிங்கள மொழியில் பரிட்சயமில்லாதவராகவும் இருந்துள்ளதை அவதானிக்க முடிகிறது. தனது இலக்கை எட்டும் வரையில் இவர் சாமர்த்தியமாக செயற்பட்டுள்ளார் என கூறமுடியாதுள்ளது.

கொழும்பு மாவட்ட அரசாங்க அதிபர் காரியாலயம் ஒன்றை அமைக்கும் திட்டத்துக்கு அடிக்கல் நாட்டவே பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக வந்திருந்தார்.



பிரதமர் கலந்துகொள்ளும் வைபவங்களில் மேற்கொள்ளப்படும் வழமையான பாதுகாப்பு ஏற்பாடுகள் இம்முறையும் செய்யப்பட்டிருந்தன. வீதியோரங்களில் பொலிஸார் நிறுத்தப்பட்டிருந்தனர். நிகழ்ச்சி நடைபெறும் மேடையை சுற்றி இரகசியப் பொலிஸார் குவிக்கப்பட்டிருந்தனர்.

இந்நிலையில் உடம்பில் குண்டைக் கட்டிக்கொண்டு நடந்து வந்து கொண்டிருந்த புலி உறுப்பினரை சிவில் உடையில் இருந்த இரண்டு அதிகாரிகள் விசாரணை செய்துள்ளனர். சிங்கள மொழியில் ஊர் எது என்று கேட்டதும் குண்டுதாரி தடுமாற்றத்துடன் முதலில் தெஹிவளை என்றும் பின்னர் மட்டக்களப்பு என்றும் கூறியுள்ளார். அடையாள அட்டையை கேட்டபோது மறதியில் கொண்டுவரவில்லை என தமிழில் பதிலளித்திருக்கிறார். உன்னிப்பாக அவதானித்த பொலிஸ் அதிகாரி ஒருவருக்கு இவரது உடலில் குண்டு இருப்பது தெரியவந்ததும் அதுபற்றி உணராதது போல புலி உறுப்பினரை அந்த இடத்தை விட்டு 'போ' என்று தமிழில் கூறி அனுப்பி வைத்துள்ளனர்.

அதன்பின்னர் அருகில் உள்ள வீடொன்றுக்குச் சென்ற பொலிஸார் இந்த விடயத்தை தொலைபேசி மூலம் உடனடியாகவே பொலிஸ் நிலையத்துக்கும் பிரதமர் பாதுகாப்பு பிரிவிற்கும் தெரியப்படுத்தியுள்ளனர். இதையடுத்து புலி உறுப்பினரை பின் தொடர்ந்து சென்ற பொலிஸ் மோட்டார் சைக்கிள் அணியினர் சித்ரா லேனில் உள்ள தொடர்மாடி வீடுகளுக்கு முன்னால் வைத்து துப்பாக்கியை நீட்டி குண்டுதாரியை சரணடையுமாறு கேட்டபோதே அவர் தன் உடம்பில் இருந்த குண்டை வெடிக்கச் செய்து கொண்டதாக தெரிவிக்கப்படுகின்றது. புலி உறுப்பினரை கைது செய்ய முற்பட்ட பொலிஸ் அதிகாரிகள் இருவர் உட்பட 4 பேர் உயிரிழந்ததுடன் குண்டு வெடித்தபோது அந்த வழியாக வாகனங்களில் சென்று கொண்டிருந்த சுமார் 20 பேர் வரை காயமடைந்தனர். பல வாகனங்கள் இழுத்துச் செல்லப்பட்டு அருகில் உள்ள சுவர்களிலும் மரங்களிலும் மோதுண்டன. காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த பலரது நிலைமை கவலைக்கிடமாக இருக்கிறது.

குண்டுதாரி தனது இலக்கை நெருங்கி அதனை வெடிக்க வைத்திருந்தால் பாரிய உயிர்ச்சேதங்கள் ஏற்பட வாய்ப்பிருந்துள்ளது. பிரதமர் இருக்கும் மேடையை நெருங்க முடியாது போனால் சற்றுத் தூரத்தில் இருந்து வெடிக்கச் செய்தாலும். மேடையில் உள்ளவர்களுக்கும் சேதம் ஏற்படும் வகையில் அதி சக்தி வாய்ந்த குண்டே உடலில் பொருத்தப்பட்டிருந்துள்ளது. இதன் காரணமாகவே பாதை நடுவில் குண்டு வெடித்ததும் அருகில் இருந்த வாகனங்கள் கூட தூக்கி எறியப்பட்டுள்ளன.

இந்த குண்டுதாரியை வளைத்துப் பிடித்ததை விடவும் இவர் எங்கிருந்து நாரஹேன்பிட்டி பகுதிக்கு வந்து சேர்ந்தார் என்பதை அறிவதே பாதுகாப்பு தரப்பினர் எதிர்நோக்கும் உடனடி சவாலாக உள்ளது. இவருடன் வேறு சிலரும் வந்திருக்கலாம் என்ற சந்தேகத்தின் பேரில் குறிப்பிட்ட பகுதியில் கடும் தேடுதல் மேற்கொள்ளப்பட்டது.

கடந்த ஒரு மாதகாலத்துக்குள் கொழும்பில் இரண்டு இடங்களில் குப்பைத் தொட்டிகளில் இருந்து தற்கொலை அங்கிகள் மீட்கப்பட்டன. அரசாங்க முக்கியஸ்தர்கள் கலந்து கொள்ளவிருந்த வைபவங்களை மையமாக வைத்தே இந்த தற்கொலை அங்கிகள் மறைத்து வைக்கப்பட்டிருக்கலாம் என்றே பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

கட்டுநாயக்கா விமான நிலையம், விமானப்படைத் தளம் என்பவற்றின் மீதான தாக்குதல்களைத் தொடர்ந்து தலைநகரில் மேலும் பல தாக்குதல்களை புலிகள் நடத்தக் கூடும் என்று ஊகங்கள் வெளியாகின. பெரும்பாலும் அவர்களது இலக்கு கொழும்பு துறைமுகமாகவோ பொருளாதார கேந்திரஸ்தானங்களாகவோ இருக்கலாம் என்றே கருதப்பட்டு வந்தது. அரசாங்க புலனாய்வுப் பிரிவினரும் இவ்வாறான நிலைகள் குறித்தே தமது கூடுதல் கவனத்தை செலுத்தியிருந்தனர். ஆனால் இம்முறை புலிகளின் கவனம் உயர்மட்ட அரசியல்வாதிகளின் பக்கம் திரும்பியிருப்பதையே இந்தத் தாக்குதல் உணர்த்துகின்றது.

அமைச்சர் சீ.வி.குணரத்ன மீதான தற்கொலைத் தாக்குதலின் பின்னர் தனியொரு அரசியல்வாதியை குறிவைக்கும் தாக்குதல்கள் தலைநகரில் இடம் பெற்றிருக்கவில்லை. ஆனால் மீண்டும் பழைய படி அரசியல் தலைவர்களை குறிவைக்க ஆரம்பித்திருப்பது தற்போதைய தேர்தல் நிலவரத்துக்கு மத்தியில் பாதுகாப்புத் தரப்பினருக்கு பெரும் தலையிடியாக அமையும் என்பதில் சந்தேகமில்லை.

## தேர்தல்கால ஆபத்து

தேர்தல் காலம் என்பதால் ஆளும் கட்சி எதிர்க் கட்சி என்றபாகுபாடில்லாமல் சகல முக்கியஸ்தர்களுக்கும் பாதுகாப்பு வழங்கப்பட வேண்டியுள்ளது. ஒரே நேரத்தில் முக்கிய அரசியல் கட்சிகள் பலவும் பல்வேறு இடங்களில் கூட்டங்களை நடத்தும். சனத்திரள்களுக்கு மத்தியில் ஒவ்வொரு தனிநபரையும் உன்னிப்பாக கண்காணிக்க வேண்டியிருக்கும். இது இலேசான காரியமாக இருக்கப் போவதில்லை.

பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக பொதுவாகவே கடும் போக்காளர் என்று சகலராலும் அறியப்பட்டவர். யுத்தத்துக்கு யுத்தத்தை தவிர மாற்றுத் தீர்வு கிடையாதென பகிரங்கமாகவே கூறிவருபவர். இந்த அடிப்படையில் கணிசமான சிங்கள வாக்கு வங்கியை பாதுகாத்து வைத்திருப்பவர்.

கடந்த காலங்களில் புலிகளை அழித்தே தீருவது என்ற விடயத்தில் உறுதியான நிலைப்பாட்டுடன் இருந்தவர் எனவே பிரதமர் தாக்குதல் இலக்காவதில் ஆச்சரியமில்லை. ஆனால் அரசியல்வாதிகளை குறிவைப்பது என்று வெளியில் இறங்கினால் வசதியாக அகப்படுபவர்களை தீர்த்துக்கட்டுவதே புலிகளின் பாணி! இந்த வகையில் எந்தவொருவரையும் பார்த்து அவர் புலிகளின் 'லிஸ்டில்' இருக்கமாட்டார் என்று கூறுவதற்கில்லை.

பத்து அல்லது அதற்கும் அதிகமான தற்கொலையாளிகள் கொழும்பில் தங்கியிருப்பதாக பொலிஸார் சந்தேகம் தெரிவித்துள்ளனர். இதற்கிடையில் தேர்தல் காலத்தில் பாதுகாப்பில் ஏற்படும் ஒட்டைகளை பயன்படுத்தி நாட்டின் மத்திய பகுதியிலோ, தென்பகுதியிலோ பாரிய தாக்குதல் ஒன்றை நடத்த புலிகள் திட்டமிடலாம் என்று கடந்த வாரம் இடம்பெற்ற பாதுகாப்பு சபை கூட்டத்தில் ஆராயப்பட்டுள்ளது. இத்தகைய தாக்குதல்கள் இனவன்முறைகளை தோற்றுவிக்கும் கும்பல்களுக்கு வாய்ப்பாக அமைந்துவிடாமல் உரிய நடவடிக்கை எடுப்பது குறித்தும் பாதுகாப்பு சபை கூட்டத்தில் ஆராயப்பட்டிருக்கிறது.

## சர்வதேச நிலவரம்

எவ்வாறெனினும் புலிகளின் இத்தகைய தாக்குதல்கள் இராணுவ இலக்குகளாக இருக்கும் பட்சத்தில் அதனால் போரியல் ரீதியில் உள்ள சாதகத்தன்மை போலவே தற்போதைய சர்வதேச நிலவரங்களின்படி தற்கொலைத் தாக்குதல்களை நடத்துவதால் பாதகமான நிலைமைகளும் தோன்ற இடமுண்டு.

பயங்கரவாதத்திற்கு எதிரான போர் எனக் கூறிக் கொண்டு அமெரிக்கா ஆப்கானிஸ்தான் மீது தாக்குதல் நடத்தி வருகின்றது. இந்த நடவடிக்கை முடிவுற்றதும் கொலம்பியாவில் செயற்படும் ஆயுதக் குழுக்களுக்கு எதிரான நடவடிக்கைகளில் இறங்கப் போவதாக அமெரிக்கா அறிவித்துள்ளது. அமெரிக்காவின் பயங்கரவாதத்துக்கு எதிரான போராட்டத்தில் காஷ்மீர் ஆயுதக் குழுக்களை சிக்க வைக்கும் கடுமையான முயற்சியில் இந்தியா ஈடுபட்டுள்ளது.

புலிகளையும் அதற்குள் சிக்கவைக்கும் பிரயத்தனத்தில் இலங்கை அரசாங்கம் ஆர்வம் காட்டி வருகின்றது. கடந்த திங்கட்கிழமை கொழும்பில் தற்கொலை குண்டு வெடித்த சந்தர்ப்பத்தில் கூட ஜனாதிபதி லண்டனில் புலிகளை பயங்கரவாதிகள் எனச் சாடிக் கொண்டிருந்தார். வெளிநாட்டு செய்தி நிறுவனங்களுக்கு வழங்கிய பேட்டிகளில் திருமதி குமாரதுங்க பயங்கரவாதத்துக்கு எதிரான அமெரிக்காவின் நடவடிக்கைகளை வெகுவாகப் பாராட்டியிருந்ததுடன் இலங்கையும் இத்தகைய பயங்கரவாதத்தின் பிடியில் சிக்கியிருப்பதாக கூறியிருந்தார்.

உடனடியாக புலிகளுக்கு எதிரான நடவடிக்கைகளில் இறங்க அமெரிக்காவோ மேற்கு நாடுகளோ தயாராகாத போதும் தொடர்ச்சியான தற்கொலைத் தாக்குதல்கள், சிவில் தலைவர்கள் மீதான வன்முறைகள் இலங்கை அரசாங்கத்தின் முயற்சிக்கு துணையாக நிற்கும் வாய்ப்பிருக்கிறது.

ஆனால் இவற்றை கவனத்தில் கொள்வதை விட தமது இலக்குகளை அடைவதே முக்கியமானதென புலிகள் கருதுவதாகத் தெரிகிறது.

## ஐ.தே.க.வின் சங்கடம்

எவ்வாறெனினும் தென்னிலங்கையில் புலிகள் நடத்தும் பாரிய தாக்குதல்கள் அரசியல் அரங்கிலும் தளம்பலை ஏற்படுத்தும் சாத்தியமிருக்கிறது.

ஐக்கிய தேசியக் கட்சி புலிகள் தொடர்பில் மௌனம்சாதித்து வருகின்றது. புலிகளுக்கு சார்பாகப் பேசும் தமிழ்க்கட்சிகளை ஆதரிக்கும் போக்குடன் தேர்தலில் இறங்கியுள்ளது. இந்தத் தமிழ்க்கட்சிகளும் மக்களை கவருவதற்காக புலிகளுடனான நெருக்கம் குறித்து மிதமிஞ்சிய கதைகளையும் சேர்த்தே பிரசாரம் செய்து வருகின்றன.

**எம்.பி.எம். பர்ஸான்**

மறுபுறத்தில் அரச தரப்பும், ஜே.வி.பி.யும். ரணில்-பிரபாகரன் கூட்டைப் பற்றி முழங்கி வருகின்றன. சாதாரண சிங்கள பாமர மக்கள் மத்தியில் இந்த கருத்தை வலியுறுத்த இவ்விரு தரப்பும் கடும் பிரயத்தனம் மேற்கொண்டு வருகின்றன.

இத்தகையதொரு தேர்தல் பிரசாரப் பின்னணியில் புலிகள் நடத்தும் தாக்குதல்கள், அதுவும் பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக போன்ற சிங்கள பௌத்தத்துவத்தை கடுமையாக ஆதரிக்கும் தலைவர்கள் மீதான தாக்குதல்கள் தென்னிலங்கை சிங்கள வாக்கு வங்கிகளை பொதுஜன ஐக்கிய முன்னணிக்கு ஆதரவாகத் திருப்ப வாய்ப்புண்டு.

சிவில் தலைவர்கள் மீதான தாக்குதல் ஒரு புறம் நடைபெற்றுக் கொண்டிருக்க புலிகளை ஆதரிக்கும் தமிழ்க்கட்சித் தலைவர்களுடன் உறவுகளை பேணிக் கொண்டு பிரசாரம் செய்வதில் ஐக்கிய தேசியக் கட்சிக்கு பலத்த சங்கடம் காணப்படுகின்றது.

இத்தகைய தாக்குதல்களை கண்டிக்காமல் விட்டால் அதனை சுட்டிக் காட்டி பொதுஜன ஐக்கிய முன்னணி பிரசாரம் செய்யும். புலிகளை பெரிதாக திட்டித் தீர்க்கவும் முடியாத சங்கடத்தில் ஐ.தே.க. இருக்கிறது. ஏனெனில் ரணில் பிரதமராக வந்தால் புலிகள் இயக்கம் மீதான தடை நீக்கப்படும் என்றும், யாழ்ப்பாணத்தில் இருந்து படைகள் வாபஸ் பெறப்படும் என்றெல்லாம் தமிழ்கட்சிகள் தமது மக்களுக்கு கதை சொல்லி வருகின்றன. எனவே புலிகளை திட்டி தமிழ்க் கட்சிகளின் கூற்றை பொய்யாக்க ஐ.தே.க. விரும்பாது. புலிகள் அமைதியாக இருப்பார்களாயின் மௌனம் சாதித்து நிலைமையை சமாளித்துக் கொண்டு போக ஐ.தே.க.வினால் முடியுமாகும். ஆனால் தாக்குதல்கள் தீவிரமாகும் போதும் அது பற்றி வாய்திறக்காமல் இருக்க ஐ.தே.க.வினால் முடியாது. அப்படியிருந்தால் பொதுஜன ஐக்கிய முன்னணியின் ஐ.தே.க-புலி பிரசாரத்தை ஆமோதிப்பதாகப்போய்விடும்.

தமிழ்க்கட்சிகள் என்னதான் கூத்துப் போட்டாலும் இம்முறை சிங்கள அடிப்படைவாத வாக்குகளின் பலம் தேர்தலின் போது பெருவாரியாக வெளிப்படுவதை தவிர்க்க முடியாமல் போகும்.

# உள்ளாட்சித் தேர்தல் முடிவுகள் அஇஅதிமுகவுக்கு ஒரு செக்

தமிழகத்தில் நடைபெற்ற உள்ளாட்சித் தேர்தல்களுக்கான முடிவுகள் முற்றிலுமாக அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், அ.இ.அ.தி.மு.க.வும் அதன் கூட்டணிக் கட்சியினரும் வெற்றி வாகை சூடியுள்ளனர்.

ஆனால் கடந்த மே மாதம் நடைபெற்ற சட்டப்பேரவைத் தேர்தல்களில் அக்கூட்டணி பெற்ற இமாலய வெற்றியுடன் ஒப்பிடும் போது உள்ளாட்சித் தேர்தல் வெற்றி அவ்வளவு பெரியதல்ல.

தற்போது மொத்தமுள்ள ஆறு மாநகராட்சிகளில் திருநெல்வேலி, சேலம், கோயம்புத்தூர் ஆகியவற்றை அ.இ.அ.தி.மு.க.வும், திருச்சியை அதன் கூட்டணிக் கட்சியான தமிழ் மாநில காங்கிரசும் கைப்பற்றியுள்ளன. மதுரை, சென்னை மாநகராட்சிகள் தி.மு.க.வின் வசமாகியுள்ளன. தி.மு.க. தலைவர் மு.கருணாநிதியின் மகன் மு.க.ஸ்டாலின் மறுபடியும் சென்னை மாநகரத்தின் வணக்கத்திற்குரிய மேயராகியிருக்கிறார்.

மாநகராட்சிகளைப் பொறுத்தவரை தி.மு.க.வுக்கு ஏற்பட்டிருப்பது இழப்புதான். கடந்த 1996 தேர்தலில் தமிழ் மாநில காங்கிரசுடன் தேர்தலைச் சந்தித்த தி.மு.க.மதுரை, சேலம், திருநெல்வேலி, சென்னை ஆகிய மாநகராட்சிகளில் அது வெற்றி பெற்றது என்பதை நினைவு கூர வேண்டும்.

மாநகராட்சிகளைத் தவிர்த்து, நகராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், நகரப்பஞ்சாயத்துகள், மாநகாரட்சி மண்டலங்கள் உள்ளிட்ட உள்ளாட்சி அமைப்புகளில் வெற்றி விகிதத்தை கணக்கிடும் போது சட்டப்பேரவைத் தேர்தலில் ஏற்பட்ட பலத்த சரிவை ஓரளவுக்கு தி.மு.க மீட்டெடுத்திருக்கிறது என்றுதான் கூற வேண்டும்.

தி.மு.க. தலைவர் கருணாநிதி தன் கைப்பட எழுதிய ஒரு வாசகம் சில பத்திரிகைகளில் விளம்பரமாக வெளியிடப்பட்டுள்ளது. இருண்ட ஜனநாயகத்தில் ஒளி விளக்கு ஏற்றிய தமிழக மக்களைத் தலை தாழ்த்தி வணங்குகிறேன் என்பதுதான் அந்த வாசகத்தில் காணப்படும் சொற்கள். தேர்தல் முடிவுகள் குறித்து அவருக்கு ஓரளவு மகிழ்ச்சி என்பதையே அது விளக்குவதாக எடுத்துக் கொள்ள வேண்டும்.

ஆனால் தேர்தல் அன்றும் வாக்குகள் எண்ணப்படும் போது நடைபெற்ற சம்பவங்களை நினைத்துப் பார்க்கும் போது தமிழக மக்களுக்கு ஏற்பட்ட அதிர்ச்சி சாதாரணமானதல்ல. கள்ள வோட்டுப் போடுவது என்பது தமிழகத்தில் உள்ள தி.மு.க, அ.தி.மு.க ஆகிய இரு கட்சிகளுக்குமே கை வந்த கலை என்பதை மறுப்பதற்கில்லை.

ஆனால் வாக்குச் சாவடிகளைக் கைப்பற்றல், வாக்குச் சீட்டுகளை கிழித்தெறிதல், எதிர்க்கட்சி வேட்பாளர்களை மிரட்டிப் பணியச் செய்தல் போன்ற அடாவடிச் செயல்கள் மிக அதிக அளவில் இந்த உள்ளாட்சித் தேர்தலில் நடந்தேறி தமிழக மக்களை உலுக்கி எடுத்தன. ஆட்சி பீடத்தில் அமர்ந்திருக்கும் அ.தி.மு.க.வினர் வெளிப்படையாக, வெட்கமின்றி குண்டர்களின் துணையுடன் தமிழகத்தில் வலம் வந்தார்கள். சட்டம் ஒழுங்கைப் பாதுகாக்க வேண்டிய காவல்துறையினரோ ஆளும் கட்சிக்கு கைகட்டி சேவகம் செய்யும் சேடிப் பெண்களாய் நின்றிருந்தனர். வாக்குச் சாவடிக்குள் செய்தி சேகரிக்கச் சென்ற பத்திரிகையாளர்களைக்கூட குண்டர்கள் விட்டு வைக்கவில்லை. கத்தியைக் காட்டி மிரட்டினர். இந்த வன்முறைகளைக் கண்ட பின்னர் உள்ளாட்சி அமைப்புகளுக்கு கட்சி சார்பாக தேர்தல் நடத்தக்கூடாது என்ற கருத்தும் தமிழகத்தில் உள்ள அறிவ ஜீவிகள் மத்தியில் உருவாகியிருக்கிறது. சட்டமியற்றும் அதிகாரம் இல்லாத உள்ளாட்சிகளுக்கு கட்சி சாயம் தேவையில்லை என்பது அவர்களது கருத்து.

தேர்தலின் போது நடைபெற்ற வன்முறை வாக்குச்சீட்டுகள் எண்ணப்பட்ட போதும் நீடித்தது. தமிழகத்தில் ஏறக்குறைய எல்லா முடிவுகளும் வெளியாகிவிட்ட நிலையில்கூட சென்னை மாநகராட்சித் தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்படுவதில் தாமதம் நிலவியது. திங்கட்கிழமை நள்ளிரவு வரை முடிவுகளை அறிவிக்கவில்லை. திங்கட்கிழமை காலையில் அ.தி.மு.க.வினர், குண்டர்களின் துணையுடன் வாக்குகள் எண்ணப்படும் இடங்களுக்குள் நுழைந்து, தி.மு.க.வுக்குப் பதிவான வாக்குகளை செல்லாத வாக்குகளாக மாற்றும் பணியில் ஈடுபட்டனர். ஆகவே இந்த இடங்களில் எல்லாம் மறுவாக்குப்பதிவு செய்ய வேண்டும் என்று கோரி சென்னை உயர் நீதிமன்றத்தில் ஸ்டாலின் மனுதாக்கல் செய்திருந்தார். ஆனால் இந்த விவகாரத்தில் முடிவு எடுக்க வேண்டியது தேர்தல் ஆணையம்தான் என்று நீதிபதி கூறிவிட்டார். தனக்கு இழைக்கப்பட்டிருக்கும் அநீதியை எதிர்த்து உண்ணாவிரதம் இருக்கப்போவதாக ஸ்டாலின் அறிவித்திருந்தார். தமிழக ஆளுநர் மாளிகையை நோக்கி ஊர்வலம் செல்லப்போவதாகவும் அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் கடைசி நேரத்தில் அதை ரத்து செய்வதாக அறிவிக்கப்பட்டது. இறுதியாக சுமார் 5,013 வாக்குகள் வித்தியாசத்தில் ஸ்டாலின் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டபோது நேரம் நள்ளிரவைக் கடந்து விட்டது. சென்னை மேயர் பதவியேற்பு நிகழ்ச்சியை அ.தி.மு.கவினரும் த.மா.க.வினரும் புறக்கணித்தனர். சில இடங்களில் பதவியேற்பின் போது அ.தி.மு.கவினர் அநாகரீகமாக நடந்து கொண்டனர்.

கடந்த சட்டப் பேரவைத் தேர்தலில் தொடர்ந்து நீடித்த அ.தி.மு.க. கூட்டணி உடையாமல் இருந்திருக்குமேயானால் தி.மு.க.வின் பாடு திண்டாட்டமாக மாறியிருக்கும். ஆனால் அ.இ.அ.தி.மு.க. கூட்டணியில் இருந்து பாட்டாளி மக்கள் கட்சியும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியும் விலகிச் சென்றன. அந்த விலகல் பல இடங்களில் தி.மு.க.வுக்கு ஆதரவாக மாறி விட்டது. நகரப்பகுதிகள், கிராமப் பகுதிகள் என்று தனித்தனியே எடுத்துக் கொள்ளும் போது நகரப்பகுதிகளில் தி.மு.கவுக்கு செல்வாக்கு தொடர்ந்து நீடிப்பதை அறியமுடிகிறது. அ.இ.அ.தி.மு.க., தி.மு.க ஆகிய இரு கட்சிகளும் தலா 34 நகராட்சித் தலைவர் பதவிகளில் வெற்றி பெற்றுள்ளன.

மிகவும் ஆச்சரியத்துக்குரிய அம்சம் என்னவென்றால், இத்தேர்தலில் தனித்துப் போட்டியிட்ட காங்கிரஸ் கட்சி பெற்றிருக்கும் வெற்றிதான். ஒழிந்து போய்விட்டது, தமிழ் மாநில காங்கிரசை மூப்பனார் தொடங்கிய பின்னர் காங்கிரசுக்கு என்ன வேலை என்று எல்லோரும் சாபம் கொடுத்து ஒதுக்கித் தள்ளிய அக்கட்சி மறுபடியும் லேசாக துளிர்விட்டிருக்கிறது. மூன்று நகராட்சிகள் தவிர, 20 நகரப்பஞ்சாயத்துகள், 6 மாநகராட்சி வார்டுகள், 134 ஊராட்சி ஒன்றிய வார்டுகளில் அக்கட்சி வெற்றி பெற்றுள்ளது.

ஆனால் யாருடன் நாங்கள் சேர்ந்தாலும் அக்கூட்டணி வெற்றிக் கூட்டணியாகத் திகழும் என்று மார்தட்டிக் கொண்டிருந்த டாக்டர் ராமதாசின் பாட்டாளி மக்கள் கட்சி படுதோல்வியை அடைந்துள்ளது.

ஐந்து மாதங்களுக்கு முன்பு வரை அ.இ.அ.தி.மு.க. கூட்டணியில் இருந்து கொண்டு சகோதரி ஜெயலலிதா சொல்வதுதான் வேதவாக்கு என்று சான்றிதழ் கொடுத்துக் கொண்டிருந்த ராமதாஸ், இத் தேர்தலில் தி.மு.க கூட்டணிக்கு தாவினார்.

அவருடைய வருகை தி.மு.க கூட்டணியை மிகப்பெரிய அளவில் வலுப்படுத்தும் என்று கூறப்பட்டது. தற்போது 2 நகராட்சி தலைவர் பதவி, 7 நகரப் பஞ்சாயத்துத் தலைவர் பதவி, 296 ஊராட்சி ஒன்றிய வார்டு உறுப்பினர் பதவிகள் ஆகியவை மட்டுமே அக்கட்சிக்குக் கிடைத்துள்ளன. பா.ம.க பலம் வாய்ந்த வட மாவட்டங்களில் கூட அக்கட்சிக்கு பெரிய வெற்றி எதுவும் கிடைக்கவில்லை. சட்டப்பேரவைத் தேர்தலில் கணிசமான இடங்களை வென்ற அக்கட்சிக்கு ஏன் இந்த கதி நேர்ந்தது என்பதைக் குறித்துத்தான் அரசியல் ஆய்வாளர்கள் தலையைப் பிய்த்துக் கொண்டு ஆராய்ந்து வருகிறார்கள்.

தி.மு.க கூட்டணியில் இருந்து வரும் பாரதீய ஜனதா கட்சியும் எதிர்பார்த்த வெற்றிகளை ஈட்ட முடியவில்லை. அது தற்போது பெற்றிருக்கும் வெற்றிகூட தி.மு.க.வின் செல்வாக்குக் காரணமாகத்தான் இருக்கும் என்று கருதப்படுகிறது. ஆனால் ஐந்து ஆண்டுகளுக்கு முன்னால் முகவரி இல்லாமல் தமிழகத்தில் அநாதையாய் இருந்த பா.ஜ.க.வுக்கு, மக்களவைத் தேர்தலில் தொடங்கி, சட்டப்பேரவைத் தேர்தலிலும், உள்ளாட்சி அமைப்புகளிலும் கிடைத்திருக்கும் வெற்றி உண்மையிலேயே கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட வேண்டியதுதான். 108 ஊராட்சி ஒன்றிய வார்டு உறுப்பினர் பதவிகள், 22 நகரப் பஞ்சாயத்துத் தலைவர் பதவிகள், 2 நகராட்சித் தலைவர் பதவி என அக்கட்சி பெற்ற வெற்றிப் பட்டியல் நீள்கிறது.

ஈழ விடுதலைப் புலிகளின் ஆதரவாளரான வை.கோவின் ம.தி.மு.வும் இந்தத் தேர்தலில் மிகவும் மோசமான தோல்வியைச் சந்தித்திருக்கிறது. மத்தியில் ஆளும் பா.ஜ.க கூட்டணி அரசில் அங்கம் வகித்தாலும், தமிழகத்தில் தி.மு.க தலைவர் கருணாநிதியுடன் ஏற்பட்ட கருத்து வேறுபாடு காரணமாக கடந்த சட்டப்பேரவைத் தேர்தலில் தனித்துப் போட்டியிட்ட வை.கோ உள்ளாட்சித் தேர்தலிலும் தனித்தேதான் போட்டியிட்டார். புதியதொரு கூட்டணியை உருவாக்குவதற்கு அவர் மேற்கொண்ட முயற்சிகள் வெற்றிபெறவில்லை. 2 நகராட்சித் தலைவர் பதவிகள், 13 நகரப்பஞ்சாயத்துத் தலைவர் பதவிகள், 130 ஊராட்சி ஒன்றிய வார்டுகள் என அக்கட்சியின் வெற்றிப் பட்டியல் காணப்படுகிறது. எத்தனைக் காலம்தான் இப்படியே தனித்து நின்று எவ்விதத் தாக்கத்தையும் ஏற்படுத்தாமல் இருப்பது என்ற கேள்வி அக்கட்சிக்குள் எழாமல் இல்லை.

ஏற்கெனவே ஏகப்பட்டக் கட்சிகள் உருவாகி விட்ட தமிழக அரசியல் களத்தில் ம.தி.மு.க.வுக்கென்று ஒரு தனிப்பட்ட இடம் என்பது சந்தேகமே. ஒருவேளை தி.மு.க தலைவர் கருணாநிதியின் காலத்துக்குப் பிறகு அக்கட்சியினைக் கைப்பற்ற வை.கோ முயற்சிக்கலாம். அதுகூட வெற்றி பெறுமா என்பது ஐயமே.

கம்யூனிஸ்ட் கட்சிகளில் ஒன்றான மார்க்சிஸ்ட் கட்சிக்கும் ஏறக்குறைய இதே கதிதான் ஏற்பட்டிருக்கிறது. இக்கட்சி கடந்த சட்டப்பேரவைத் தேர்தலில் அ.தி.மு.க.வுடன் கூட்டணி அமைத்து இக்கட்சி போட்டியிட்டது. ஆனால் வெறும் நான்கு சதவீதம் இடங்கள்தான் உள்ளாட்சி மன்றங்களில் ஒதுக்க முடியும் என்று ஜெயலலிதா திட்டவட்டமாக அறிவித்துவிட்டதால் தனித்துப் போட்டியிட வேண்டியச் சூழலுக்கு அக்கட்சித் தள்ளப்பட்டது. பெரிதாக வெற்றி எதையும் அதனால் ஈட்டமுடியவில்லை. ஆனால் அதற்கென்று சிற்சில இடங்களில் வாக்குவங்கிகள் இருக்கின்றன என்பது நிரூபணமாயிருக்கிறது. எதிர்வரும் காலங்களில் கூட்டணி அமைக்கப்படும்போது அதிக இடங்களைக் கோர இந்த முடிவுகள் உதவும்.

சட்டப்பேரவைத் தேர்தலை ஒப்பிடும்போது தி.மு.க. சிறப்பாக வெற்றி பெற்றிருக்கிறது என்று எடுத்துக் கொண்டாலும், அடிதளங்களில் வலுவான கட்சி அமைப்பைக் கொண்டிருக்கும் தி.மு.க.வுக்கு இது பெரிய வெற்றியல்ல. கடந்த உள்ளாட்சித் தேர்தலில் அக்கட்சி பெற்ற வெற்றி அபரிமிதமானது.

ஏன், யாரும் அசைக்க முடியாது என்று கூறப்பட்ட மறைந்த எம்.ஜி. ஆர் காலத்தில் நடைபெற்றத் தேர்தலின் போது கூட உள்ளாட்சித் தேர்தலில் அக்கட்சி சிறப்பான வெற்றியை ஈட்டியிருக்கிறது.

தற்போது அது பெற்றிருக்கும் வெற்றிகூட, அடித்தளங்களில் தி.மு.க உள்ளாட்சிப் பிரதிநிதிகள் ஆற்றிய பணிகளின் காரணமாகத்தான் கிடைத்திருக்கிறது என்பது உண்மை. உள்ளாட்சிகளுக்கு அதிக அதிகாரம் வழங்கப்பட்டுள்ள நிலையில், அதற்கென ஒதுக்கப்பட்ட நிதியைப் பயன்படுத்திக் கொண்டு ஓரளவுக்கு சிறந்த பணியை தி.மு.க ஆற்றி வந்திருக்கிறது. சென்னையைச் சிங்காரச் சென்னையாக ஆக்கிக் காட்டுவேன் என்று ஸ்டாலின் முழக்கமிட்டார். அது இன்னும் தூரத்துக் கனவாகத்தான் இருக்கிறது என்றாலும் சென்னை மாநகரில் ஏராளமான பணிகள் செய்து முடிக்கப்பட்டன.

இந்தியாவின் ஆன்மா கிராமங்களில் இருக்கிறது என்றார் மகாத்மா காந்தி. கிராம முன்னேற்றத்துக்கு அடிப்படை பஞ்சாயத்து ராஜ்யம்தான். நிதி இருக்கிறது. அதிகாரம் இருக்கிறது. ஆனால் அதை நடைமுறையில் செயல்படுத்திக் காட்ட முடியுமா என்ற கேள்வி எழுகிறது. இதற்குக் காரணம் அரசியல் காழ்ப்புணர்ச்சிதான். சென்னையில் ஸ்டாலின் வெற்றி பெற்றாலும் மாநகராட்சியில் அ.தி.மு.க கவன்சிலர்கள் அதிக எண்ணிக்கையில் உள்ளனர். மாநகராட்சி அலுவல்கள் ஒழுங்காக நடைபெறாமல் தடுக்க அவர்களால் முடியும். மேலும் துணை மேயர் பதவியும் அக்கட்சிக்கே சென்று விடும். இதே நிலைதான் திருநெல்வேலியிலும் கோயம்பத்தூரிலும் காணப்படுகிறது. இங்கெல்லாம் மேயர்கள் அ.தி.மு.க.வைச் சேர்ந்தவர்கள். பெரும்பான்மை கவுன்சிலர்கள் தி.மு.க.வினர். கணிசமான அளவில் சுயேச்சைகளும் வெற்றி பெற்றிருப்பதால் பணம் கொடுத்து அவர்களை விலைக்கு வாங்கும் சூழல் ஏற்பட்டிருக்கிறது.

சென்னையில் பிரச்சனைக் கொடுத்தால் அது நெல்லையிலும் கோவையிலும் பிரதிபலிக்கும் என்று கருணாநிதி எச்சரிக்கை விடுத்திருக்கிறார். அதற்கு தேவையில்லாமல் செய்து ஜனநாயகத்தையும் உள்ளாட்சி அமைப்புகளையும் தழைக்கச் செய்ய வேண்டும் என்பதே எல்லோருடைய விருப்பமாகவும் இருக்கிறது. ■

# 'சோறா சுதந்திரமா? என்று கேட்டவர்கள் சோற்றையும் தரவில்லை சுதந்திரத்தையும் தரவில்லை!'

*'மண்ணை மீட்பதற்காக' தமிழ்க்கட்சிகளின் கூட்டமைப்பு தேர்தல் களத்தில் இறங்கியிருக்கிறது. தேர்தலில் போட்டியிட்டு மண்ணை மீட்க முடியும் என்ற நிலைப்பாட்டுக்கு இந்த கட்சிகள் இப்போதாவது வந்திருப்பதையிட்டு மகிழ்ச்சியடையலாம்!*

இம்முறை புலிகளை அவமானப் படுத்தியே தீருவது என்ற முடிவோடுதான் தமிழ்க் கட்சிக் கூட்டணி தேர்தலில் இறங்கியிருக்கிறது என்பதை அதன் ஒவ்வொரு நகர்வில் இருந்து தெளிவாக உணர முடிகின்றது.

பாராளுமன்ற அரசியலை நிராகரித்து ஈழ விடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்லும் புலிகளுக்காகவே தாம் தேர்தலில் நிற்பதாக கூறுவதே மறைமுகமாக புலிகளையும் அதன் தலைவர் பிரபாகரனையும் அவமதிப்பதுதான்! பாராளுமன்றக் கதிரைகளால் தமக்கு எந்தவித பிரயோசனமுமில்லை என்று புலிகள் திரும்பத் திரும்ப கூறிவருகின்றனர். வசதி கிடைக்கும் போதெல்லாம் பாராளுமன்ற உறுப்பினர்களை 'மண்டையில் போட்டு' தமது எதிர்ப்பை வெளிப்படுத்துகின்றனர்.

இப்போது கூட்டணி அமைத்திருக்கும் கட்சிகளைச் சேர்ந்த முன்னாள் உறுப்பினர்கள் பலர் 'துரோகிகள்' என்று முத்திரை குத்தப்பட்டு புலிகளால் கொல்லப்பட்டிருக்கிறார்கள். இன்னும் பலர் அரசாங்கத்திடம் இருந்து பெற்ற குண்டு துளைக்காத கார்களில் வலம் வருகிறார்கள். இப்படியிருக்க தாங்கள் புலிகளின் பிரதிநிதிகள் எனக்கூறி வாக்குக் கேட்பதை அந்த இயக்கத்தின் போராட்டத் தியாகங்களை விற்று பாராளுமன்றக் கதிரை வாங்கும் துரோகத்தனம் என்பதைத் தவிர வேறென்னவென்று சொல்வது?

புலிகளின் பெயரை முதன்மைப் படுத்தினால் வாக்குகளை அள்ளலாம் என்ற சரளமானதொரு தேர்தல் உத்தியைத்தவிர எந்தவித அர்த்தபூர்வமான தர்க்கத்தையும் இந்த தமிழ்க் கட்சிகளிடம் காணமுடியாதுள்ளது. இவற்றிடம் சுயமாக முன்னெடுக்கக் கூடிய அரசியல் பொருளாதர செயற்றிட்டங்கள் என்று எதுவுமில்லை. குறைந்தபட்சம் மக்களை வழிநடத்தக் கூடிய திறன்கூட இல்லை. தமிழ் மக்களின் சுபீட்சத்துக்காக பேரம் பேசும் ஆற்றல் சுத்தமாக இல்லை. இதில் வேடிக்கை என்னவெனில் தமது இந்த பலவீனங்களை இக்கட்சிகள் பகிரங்கமாகவே ஏற்றுக் கொள்கின்றன.

"நாம் மக்களுக்காக எதையும் செய்யப் போவதில்லை. அதற்கான ஆற்றல் எம்மிடமில்லை. புலிகள் ஏதாவது செய்தால்தான் உண்டு. எப்படியிருந்தாலும் நாம் புலிகளுக்கு ஆதரவானவர்கள் என்பதால் எமக்கு வாக்களியுங்கள்" என்பதே இந்த கூட்டணியின் கோரிக்கை.

எம்.பி.யான ஒருவர் ஆளுங்கட்சியில் இருந்தாலும் எதிர்க்கட்சியில் இருந்தாலும் மாதம் 30 ஆயிரத்துக்கு மேல் சம்பளம் கிடைக்கும். 'பஜரோ' வாங்குவதற்கு 'பேர்மிட்' கிடைக்கும் இராஜதந்திரி என்ற அடிப்படையில் இன்னும் ஏராளமான சலுகைகள் கிடைக்கும். எனவே எப்படியாவது எம்.பி.யாகி எதிர்க்கட்சியில் அமர்ந்து 'புலிகளுடன் உடனடியாக பேச்சு வார்த்தைகளை ஆரம்பிக்க வேண்டும்' என்று தினசரி அறிக்கை விட்டுக்கொண்டிருந்தால் தமிழ்க் கட்சித் தலைவர்கள் தமது பூர்வஜென்மப் பலனை அடைந்து விடுவார்கள். அவர்களை நம்பி வாக்களித்த மக்களுக்கு 'அதோ' கதிதான்!

இனப்பிரச்சனை தீர்வு தொடர்பான பேச்சுவார்த்தைகளை புலிகளுடன் மாத்திரம்தான் நடத்த வேண்டும் என இவர்கள் கூறிவருகின்றார். புலிகளை ஏக பிரதிநிதிகளாக ஏற்கும் விடயத்தில் தங்களுக்குள் சண்டையிட்டுக்கொண்டு மக்கள் முன்னிலையில் போலியானதொரு ஒற்றுமையை வெளிப்படுத்தி வாக்குக் கேட்க முனைகிறார்கள்!

இனப்பிரச்சனை தொடர்பாக புலிகளுடன் மாத்திரம்தான் பேசவேண்டும் என்பதை நோர்வே கூட ஏற்றுக்கொள்ளவில்லை. மத்தியஸ்த முயற்சிகளில் பிரபாகரனால் மிகவும் விரும்பப்படும் எரிக் சொல்ஹெய்ம் கூட 'சகல தரப்பினருடனான உடன்பாடு' என்றுதான் கூறுகிறார்.

அதைவிட இனப்பிரச்சனை தீர்வு என்று வரும்போது அதில் மலையக மக்களின் பிரச்சனையும், வடக்கு-கிழக்கில் உள்ள முஸ்லிம்களின் பிரச்சனைகளும் நிச்சயம் உள்ளடக்கப்பட வேண்டும். இந்த இரு பிரிவினரையும் பிரதிநிதித்துவம் செய்யும் அதிகாரமோ, உரிமையோ புலிகளுக்குக் கிடை யாது. இவ்வாறிருக்க புலிகளுடன் மட்டும் தான் பேச வேண்டும் என்பதை இலங்கை அரசாங்கமோ சர்வதேச சமுகமோ ஏற்றுக் கொள்ளப்போவதில்லை.

எவ்வாறெனினும் தேர்தல்கள் என்பது ஒரு வகையில் தேவையற்ற ஆடம்பரம். மக்களுக்குத் தேர்தல்களில் ஆர்வமும் இல்லை அக்கறையும் இல்லை என்ற பிரச்சாரங்கள் எதையும் இம்முறை காண முடியவில்லை. தேர்தல்களில் போட்டியிடுவதே ஒரு வகையில் தேவையற்ற வேலை எனக் கூறிக் கொண்டிருந்த குரல்கள் எதுவும் இந்தத் தடவை வெளிப்பட்டதாக இல்லை. தேர்தல் அறிவிப்பு வெளிவந்த நாள் முதல் இந்தத் தேர்தலை தத்தம் நலன்களுக்காக எவ்வாறு பயன்படுத்திக் கொள்ளலாம் என்பதுவே ஒவ்வொரு தரப்பினரதும் எண்ணமாக இருந்து வருகிறது.

இந்த வகையில் நான்கு தமிழ்க் கட்சிகள் கூட்டாக இணைந்து பொதுப் பட்டியலைத் தாக்கல் செய்திருக்கின்றன. வடக்கு கிழக்கில் மட்டுமன்றி இக் கூட்டமைப்பினர் கொழும்பிலும் வேட்பு மனுவைத் தாக்கல் செய்திருக்கின்றனர். இக் கூட்டமைப்பினர் கூட்டாக வெளியிட்டிருக்கும் அறிக்கையில் தமிழ் வீரம், தமிழர் மானம், தமிழ் உணர்வு என்பனவெல்லாம் தமக்கு மட்டுமே உரிமையானவை என்பது போலவும், இவற்றைக் காப்பாற்றும் வலிமை புலிகளுக்கு மட்டுமே இருப்பதாகவும் புகழாரம் சூட்டியுள்ளனர். 1976ம் ஆண்டின் வட்டுக் கோட்டைத் தீர்மானத்திற்கு புத்துயிர் ஊட்டப் போவதாகவும், பிரிவினைக்கு எதிராகச் சத்தியப்பிரமாணம் செய்து பதவியேற்றுக் கொண்டு பாராளுமன்றத்தில் பதவி வகிக்கப் போவதாகவும் பிரகடனம் செய்திருக்கின்றனர். இனப் பிரச்சனைக்கு தனிநாடு தான் தீர்வு என்றால் வட்டுக் கோட்டைத் தீர்மானத்தை இதய சுத்தியோடு ஆதரிப்பதாக இருந்தால், கொழும்பு பாராளுமன்றத்தில் இருந்து கொண்டு அதற்காகப் போராடப் போவதாகக் கூறிக்கொள்வது அர்த்தமற்றது. தனிநாடு தான் இனப்பிரச்சனைக்கான தீர்வு என உறுதியாக நம்பினால் அதற்காக அவர்கள் போராடுவது நியாயமானதாக இருக்கலாம். அவ்வாறாயின் பிரிவினைக்கு எதிராக சத்தியப் பிரமாணம் செய்யும் நிர்ப்பந்தத்திற்கு தங்களை உள்ளாக்கிக் கொள்வது ஏன்? இந்தக் கூட்டமைப்பின் இந்த இரண்டும் கெட்டான் நிலைப்பாடானது உண்மையில் புலிகளை முட்டாள்களாக்கி அவர்களின் முதுகில் சவாரி செய்ய முயலும் தந்திரோபாயமேயாகும்.

புலிகளின் அரசியற் கொள்கைகளையோ, அதனை அடைவதற்காக அவர்கள் செயற்படும் பாதைகளையோ வெளிப்படையாக அங்கீகரிக்க மறுக்கும் இந்தக் கூட்டமைப்பினர் புலிகள் மறைமுகமாகத் தமது செயற்பாடுகளை ஆதரிப்பதாக மக்களின் காதுகளில் பூச்சுற்றுகின்றனர். புலிகளுடன் மட்டுமே பேச வேண்டும் எனக் கூறுவதன் மூலமாக அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை மேசைக்கு வரும் நிர்ப்பந்தத்தைப் புலிகள் மீது சுமத்த முற்படுகின்றனர். ஏனெனில் புலிகளின் இலட்சியம் பேச்சுவார்த்தை மூலமாக எட்டப்பட முடியாதது என்பது இவர்களுக்கும் நன்கு தெரிந்த விடயமாகும். ஆகவே தத்தமக்கென எந்த விதமான வேலைத் திட்டங்களையும், நிகழ்ச்சி நிரல் களையும், கொண்டிருக்காத பிரமுகர்கள் பதவிகளின் சுகங்களை மட்டும் அனுபவிப்பதை இலக்காகக் கொண்டு தேர்தல் களத்தில் இறங்கியுள்ளனர். தாங்கள் தேர்தலில் இறங்கியிருப்பதை நியாயப்படுத்துவதற்காக ஈ.பி.டி.பியின் மீது வசைபாடுகின்றனர். ஈ.பி. டி.பியை மூர்க்கத்தனமாக எதிர்ப்பதன் மூலமாக புலிகளிடமிருந்து மன்னிப்பைப் பெற்று விடலாம் என்ற நப்பாசையில் முயற்சி எடுக்கின்றனர்.

இதே நபர்கள் பாராளுமன்றத்தில் தமிழர் பிரதிநிதித்துவம் பற்றித் தமக்கு அக்கறை இருப்பதாக காட்டிக் கொள்கின்றனர். ஆனால் குடாநாட்டின் சனத்தொகை பதினொரு இலட்சத்தையும் கடந்த நிலைமையிலிருந்து இன்று ஐந்தரை இலட்சத்துக்குள் குறுகிப் போயுள்ளது பற்றிக் கவலைப்படுவதாக இல்லை. திருமலை, அம்பாறை மாவட்டங்களில் சிங்களக் குடியேற்றங்களால் காணி பறிபோவதாகக் கண்ணீர் விடும் இவர்கள் தமிழர்கள் புலம் பெயர்ந்து செல்வதால் இனப்பிரச்சனை சர்வதேச கவனத்தை ஈர்க்கும் என்கின்றனர். சிங்களப் பொலிஸாரின் பாதுகாப்புடன் வலம் வரும் இவர்கள் தமிழ் மக்களின் பாதுகாப்புக் குறித்து அக்கறைப்படுவதாக இல்லை. பேரினவாதப் பூச்சாண்டிகாட்டும் இவர்கள் சிஹல உறுமயவுடன் கை கோர்த்து நிறகத் தயங்கியதும் இல்லை.

என்ன சொன்ன போதிலும், புலிகள் இவர்களுக்கு ஒத்துழைப்பு வழங்கப்போவதில்லை.

இக் கூட்டமைப்பின் ஒரு முகப்பட்ட செயற்பாடு, அர்ப்பணிப்பு என்பன மக்களின் வாழ்க்கை நிலையைப் பேணுவதாகவும், மேம்படுத்துவதாகவும் இருக்க வேண்டுமே தவிர அழிவுப் பாதைக்கு வழிவகுப்பதாக இருக்கக் கூடாது.

மக்கள் ஆக்க பூர்வமான பாதையில் அபிவிருத்திகளை முன்னெடுத்து ஆறுதல் காண விளைகின்றனர். சோறா? சுதந்திரமா? என்று வீரம் பேசியவர்கள் சோறையும் தரவில்லை. சுதந்திரத்தையும் தரவில்லை என்பது ஒரு புறமிருக்க கிடைக்கின்ற கஞ்சியையும் தட்டிக் கொட்ட முற்பட்டிருப்பது கண்டு கொதிப்புறுகின்றனர். அடி மட்டத்தில் வாழும் மக்களின் இந்த மனோ நிலையைப் புரிந்து கொள்ளாத எந்தக் கூட்டமைப்பும் மக்களின் மனங்களை கவர்வதில் தோல்வியையே சந்திக்க நேரும் என்பது நிச்சயம். ■

# விளம்பரப் பகுதி

## Vella Maxi Credit

**சுவிஸில் உங்கள் பணத்தேவைகளை பூர்த்தி செய்ய இலகுவான கடன் வசதிகளை விரைவாக செய்து கொடுக்கின்றோம்**

- 100,000 SFR வரை கடன் வழங்கப்படும்
- 10,000 SFRற்கு வருட வட்டி 525 SFR
- ஒரு மாதத்திற்கான கட்டுப் பணம் 877 SFR
- வட்டி வீதம் 9.99%
- ஏற்கனவே கடன் பெற்றவர்களுக்கும் வழங்கப்படும்
- B/C காட் உள்ளவர்களுக்கு மட்டும்

மேலதிக தொடர்புகளுக்கு
**கந்தராஜா பிரபு**

**Vella Credit**
Spitalgasse 16 (4th மாடி)
3011 Bern
Tel: 031/3122426 Fax: 031/3119351
Natel: 079/7139509

## மட்டக்களப்பு மாந்திரீகம்

உங்கள் பிரச்சினைகளுக்கு தீர்வுகண்டு எதிர்கால வாழ்வில் மகிழ்ச்சி பெறுவதற்கு, மட்டக்களப்பு மாந்திரீக வசியம் செய்து கொள்வதற்கு பரம்பரை வைத்திய மனோதத்துவ நிபுணர் டாக்டர் 'குட்டி' அவர்களுடன் தொடர்பு கொண்டு வெற்றி பெறுங்கள். இரகசியம் வெளியாகாது.

**DR. A.P.S. KUTTY**
50, THEATRE ROAD, NINTHAVUR-21, SRI LANKA. ☎ 067-50349

## சிங்கப்பூரில் திருமணம்

சிங்கப்பூரில் வந்து திருமணப்பதிவு செய்து, திருமணம் செய்ய வருபவர்களுக்கு சகல வசதியுடன் தங்குமிடவசதியும், திருமணம் இலங்கை முறைப்படியோ அல்லது வீடியோ போட்டோவைப் பார்த்து வசதிக்கேற்பவோ தீர்மானிக்கலாம்.
விபரத்திற்கு:- அப்புலிங்கம் சிங்கப்பூர் கைதொலை பேசி எண்:-
Tel:- 00 65 9 7514941. Tel. Fax:- 0065 2857494.

**LINGAM WEDDING SERVICE**
TELE: (65) 4533308

## சுவிஸ். பேர்ண் மாநகரில் புதிய உதயம்.

**விதுஜா ஏசியன் சொப் வாக் ஹவுஸ்**
**காசே பசாஜ் .8-3011. பேர்ண். சுவிற்சர்லாந்து.**

மைக் டொனால்ட். மணிக்கூட்டுக் கோபுரத்திற்கு அருகில் அமைந்திருக்கும் கட்டிட 1ம் மாடியில்.
எம்மிடம் இந்தியா, சிங்கப்பூர் தாய்லாந்து போன்ற நாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட குழந்தைகளுக்குரிய கோட், சூட், குருத்தா, ரீசேட், சோட்ஸ், கவுன், பஞ்சாபி, வெல்வெட் பஞ்சாபி, பெண்களுக்கான பஞ்சாபி, சுரிதார், சோலி, வெல்வெட் பஞ்சாபி, மற்றும் புடவைகள், பனாரஸ், கோலம், அபூர்வா, காஞ்சிபுரம், மைசூர்சில்க், ரூபிகுயின், சமர்குல்ட், ஆண்களுக்கான ஜீன்ஸ், சேட், பட்டுவேட்டி, மாறுகரை வேட்டி, என பல்வேறுபட்ட தெரிவுகளை பெற்றுக் கொள்ளவும் மற்றும் பழைய புதிய திரைப்பட பிரதிகளையும் நாடகப்பிரதிகளையும் 2 str வாடகைக்கு பெற்றுக் கொள்ளவும். மற்றும் அனைத்து மளிகைச் சாமான்களையும் அன்பளிப்பு பொருட்களைப் பெற்றுக் கொள்ளவும் எம்மை நாடுங்கள். தொலைபேசி அட்டைகள் யாவும் 26 str மட்டுமே. மற்றும் சிங்கப்பூரில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட அசல் 22 காரட். தங்கநகைகள் எங்கள் விற்பனையில்.

தொடர்புகளுக்கு ஆனந்தன் சுவிஸ் T.P 031 311 35 10 or 076 530 67 55 or 031 992 82 67.

## சுவிஸ் பேர்ண் மாநகரில்.

**Suji Jewellery Works**

நங்கையர் மனதை கொள்ளை கொள்ளும் நவீன டிசைன்களில் (22 கரட்) தங்க நகைகள் செய்து கொள்ள சுஜி ஜுவல்லரி வேர்க்ஸ் தொடர்புகட்கு:-

**K. Thurai**
Belpbergstrasse-10
3123. Belp Bern ,
Swiss.
T.P. 0041-31-8191837

*உங்கள் பழைய நகைகளை நீங்கள் விரும்பிய புதிய டிசைன்களில் குறித்த தவணையில் செய்து தரப்படும்.*

## 8வது பிறந்த நாள் வாழ்த்து



**செல்வன் சேயோன் வாகீஸன் 8.11.2001**

கனடா Scabouroughல் வசிக்கும் வாகீஸன்-மாதுமை தம்பதிகளின் அன்பப் புதல்வன் சேயோன் தனது 8வது பிறந்தநாளை தனது இல்லத்தில் சிறப்பாகக் கொண்டாடுகிறார். அவரை அவரது அப்பா, அம்மா அண்ணன் மற்றும் உற்றார், உறவினர் அனைவரும் நல்லூரான் கிருபையால் பல சௌகரியங்களையும் பெற்று பண்பாக பல்லாண்டு வாழவேண்டுமென்று வாழ்த்துகின்றனர். அவருக்கு அன்ப முத்தங்களுடன் நல்லாசிகள்.

தகவல்: அப்பம்மா.

## உங்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்

**எப்பேர்ப்பட்ட வியாதியாயினும் சரி, உடனே என்னை வந்து சந்தியுங்கள்**



K. சிவசுப்பிரமணியம்
M.I.H.Ind- S.M.P

எவ்வளவு நாட்பட்ட வியாதியானாலும் சரி, காலதாமதம் செய்யாமல் கீழ்க்கண்ட வியாதிகளுக்கு நேரில் கண்டு ஆலோசியுங்கள். நேரில் வரமுடியாது போனால் கடிதமூலம் தெரிவித்துக் கொள்ளுங்கள். ஆஸ்மா, க்ஷயம், இளைப்பு, பீனிசம், தலைவலி, மலேரியா, கண்டமாலை, சொறி, சிரங்கு, பாண்டு, சோகை, காக்கைவலிப்பு, வாதம், நீரிழிவு, மூலரோகங்கள், இருதய நோய்கள், இடுப்புவலி, நெஞ்சு எரிவு, குடல் வாய்வு, நரம்புத்தளர்ச்சி, வீரியக்குறைவு, இரத்தமின்மை, சொப்பன ஸ்கலிதம், பெண்களுக்கு ஏற்படும் சூதக வாய்வு, மாசம் முன், பின் காணுதல், சூதகவலி, பிள்ளை இல்லாமலிருத்தல் மற்றும் குழந்தைகளுக்கு ஏற்படும் சகல வியாதிகளுக்கும் உத்தரவாத சிகிச்சை அளிக்கப்படும்.

**RAJA VAJEEKARANA (Rasayana) LEGIUM**
**ராஜ வஜீகரண (ரசாயன) லேகியம்**



(முஸ்லீம் முறைப்படி ஆட்டு மாமிசத்தில் பக்குவமாய் தயாரிக்கப்பட்டது.)
சாலாமிசிரி. பாதாம்பருப்பு போன்ற விலையுயர்ந்த மருந்துகள் சேர்த்து தயாரானது. உல்லாசவாழ்விற்கு உறுதுணையானது. ஸ்திரி புருஷர்களின் பலவீனங்களைப் போக்கி, தளர்ந்த நரம்புகளுக்கு முறுக்கேற்றி, சுறுசுறுப்பையும் தேக காந்தியையும் உண்டாக்கவல்லது. உடல் பூரிக்கும். எலும்பும் தோலுமானவர்களின் சரீரத்தை ஆச்சரியப்படத்தக்க வகையில் புஷ்டியாக்கும். கணைச்சூடு தணியும், மூலச்சூட்டைப்போக்கும்.... இருமல். மார்பு. இடுப்புவலி. கால்கை நடுக்கம் மற்றும் சகல பலவீனங்களுக்கும் சிறந்த ரசாயனம் இதுவே. உடல் பருத்தவர்களுக்கும். நீரிழிவு. பிளட் பிரஷர் உள்ளவர்களுக்கும். சிறுவர் சிறுமியருக்கும் சிறந்தது.

**நாட்பட்ட பீனிசம். இளைப்பு. இருமல். மூலரோகங்கள் உள்ளவர்களும் பயமின்றி பலனடையலாம். பத்தியமில்லை.**

**500gram 300/-, 250gram 150/-**
விபிபி ஆடர்கள் கவனிக்கப்படும்.

TALENT A & M

வார நாட்களில் காலை 9 மணிமுதல் மாலை 6 மணி வரையிலும் விடுமுறை தினங்களில் காலை 9 மணிமுதல் பகல் 12 மணிவரை வைத்தியரை சந்திக்கலாம்

**Ayur Dr.K.Sivasubramaniam முருகானந்தா வைத்தியசாலை**

G/02, கொழும்பு மத்திய சுப்பர் மார்க்கட், மீன்கடை மேல் (நிலமாடி) கொழும்பு -11. Tel : 384645

## 21வது பிறந்தநாள் வாழ்த்து



**உதயனன்**
(வசந்தன்)
**26.10.2001**

கிளிநொச்சியை சேர்ந்த பேரம்பலம்-தங்கலட்சுமி தம்பதிகளின் செல்வப் புதல்வன் உதயனன் (வசந்தன்) 26.10.01 இன்று தனது 21 பிறந்த நாளை (கனடா) Toronto வில் வெகு விமரிசையாகக் கொண்டாடினார். அவரை அன்பு அம்மா கனடா, அக்கா சத்தியபாமா, குணராசா (கனடா), அக்கா சத்தியவதனா, ஆனந்தராசா (கனடா), அக்கா சத்தியரஜனி, ரொகன் (நீர்கொழும்பு), மற்றும் மருமகன்மார் விதுஷன் (கனடா) கிருபாகர், சுமித் (இலங்கை), மருமகள்மார் பிரவீனா (கனடா), கீர்த்தனா (இலங்கை), மாமாமார், மாமிமார், பெரியப்பா, பெரியம்மாமார், சித்தப்பாமார், சித்திமார், உடன் பிறவா சகோதரர்கள், மச்சான்மார், மச்சாள்மார், மற்றும் உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் உதயனனை கோணேஸ்வரப் பெருமானின் அருள் பெற்று பல்லாண்டு காலம் வாழ்க வாழ்கவென வாழ்துகின்றோம்.

தகவல்: சகோதரிகள் வதனா, ஜெயா.

## மலையாள மாந்திரீகம்





மலையாள மாந்திரீகத்தை இலங்கையில் திட்டவட்டமாகக் கற்றவர் டாக்டர் பி.கே.சாமி அவர்களே. இதை ஒட்டி எத்தனை, எத்தனையோ விருதுகள் பெற்றுள்ளார். இச்சேவையில் கெடுதலுக்கு இடமில்லை. நன்மைக்கு மட்டுமே இடமுண்டு எண்ணியவன்-எண்ணியவளைத் திருமணம் முடிப்பதற்குச் சிற்சில தடைகளா, திருமணமே நடக்காதா என்ற ஏக்கமா. காதல் தோல்வியாகிவிட்டதா, கணவன்-மனைவி ஒற்றுமை குறைகிறதா, கையில் பணம் தங்கவில்லையா, பணவருவாய் குறைவா, கொடுத்த கடன் திரும்பி வரவேண்டுமா, குடும்ப வாழ்க்கை இனியவையாக அமையவேண்டுமா, லக்சுமி கடாட்சம் பெறவேண்டுமா, வெளிநாட்டுப் பயணத்தில் தங்கு தடை ஏற்படுகின்றதா, தான் பெற்றபிள்ளை தன் பேச்சைக் கேட்கவில்லையா, பெருவாழ்வு-குபேர வாழ்வு பெறவேண்டுமா, குழந்தைப்பேறு கிட்டவில்லை எனக் கவலையா, கல்வியில் சித்தி பெறவேண்டுமா, கடந்த 33 வருடமாக ஸ்ரீ துர்க்கையின் அருட் கடாட்சத்தால் 100க்கு 100% வெற்றி பெற்றவர்கள் எமது பதிவேடு மூலம் தெரிந்து கொள்ளலாம், வெளிநாட்டவர்களுக்கு கடல் கடந்து செயல்பட கூடிய வண்ணம் அதிவிசேட மாந்திரீக உச்சாட்ட பிரிவு மூலம் உடனுக்குடன் அனுப்புவதால் வெற்றியும் உடனுக்குடன் கிடைக்கிறது. இது ஒரு பிரமாண்டமான அங்கீகாரம் பெற்றதும் வரையறுக்கப்பட்ட நிறுவனத்தில் மாந்திரீகப் பிரிவாக அதி உன்னத சேவையின் நிமித்தம் வெற்றி கிட்டுவது மிக மிகச் சுலபம், மாந்திரீக வேலைகள் வெற்றிக்கு அச்சொட்டான திட்டவட்டமான சரிவரும் திகதியும் கொடுப்பது என்றால் அது எமது திருவருளே, அதுமட்டுமல்ல காண்ட அடிப்படையில் ஜாதகங் களையும் கைரேகைகளையும் தெட்டத் தெளிவாக எழுதி அறிந்து கொள்ளலாம். இன்னும், அனைத்து உலக நாட்டில் வசிக்கும் வெளிநாட்டவர்கள் பிரச்சனைகளை உடனுக்குடன் மாந்திரீக சக்தியால் தீர்வு கண்டமையால், எண்ணற்ற வாடிக்கை யாளர்களின் நற்சாட்சிப் பத்திரங்களை எமது நிருவாக பதிவேட்டில் காணலாம்.

**வெளிநாட்டவர்களுக்கென அதி தொழிநுட்பம் வாய்ந்த 24 மணித்தியால தொலைபேசிச் சேவை உண்டு.**
T.P: 00941 342463 , 00941 470615, **தேவைகளுக்கு:-**

**39 வருட மாந்திரீக துறையில் நிலையான சேவை புரியும் உலக மாந்திரீக சக்கரவர்த்தி கௌரவ பேராசிரியர் கருணாகர பூசணம் சொல்லின் செல்வன் டாக்டர் பி.கே. சாமி (J.D.G.A.N)JP**

**உலக மாந்திரீகச் சக்கரவர்த்தி**
Dr.P.K.Saamy J.D.G.A. NL JP
Hon. Prof. (IUMA)
Sri Durgaadevi Manthirika
Uchchada Peedam.


**கொழும்பில்**
No.162,
Kotahena Street,
Mayfield Road,
Colombo 13,
Sri Lanka.

**நுவரெலியாவில்**
33, Daily Fair Complex,
Kandy Road,
Nuwara-Eliya.
052-22508, 052-35097.

வெளிநாட்டார் தொடர்பு கொள்ளவேண்டிய தொ.பேசி
TEL : 00941 431137
FAX : 00941 344831

**உள்நாட்டார்கள் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண்கள்**
01-342463, 431137,470615- Fax: 344831
E-mail:drpksamy@sltnet.lk
www.imexpolanka. com/drpksami.

## 3ம் ஆண்டு நினைவலைகளில்



தோற்றம் 08 03 1936

மறைவு 04 11 1998

**அமரர். சித்திரவேலு சண்முகராசா J.P**

**திதி: 31-10-2001**

பாசத்தின் திருவுருவே! எம் குடும்பத்தின் ஒளி விளக்கே! பாசத்துடன் எம்மை வளர்த்து ஆளாக்கி எங்கள் இதயங்களில் குடியிருக்கும் அன்புத் தெய்வமே!
வாழ்க்கை எனும் நீண்ட பயணத்தில் எம்மை விட்டுப் பிரிந்து ஆண்டு மூன்றுகள் ஆனாலும் உங்கள் வதனம் எம்மை விட்டு மறையவில்லை. உங்கள் நினைவால் வாடுகிறோம்.
இணையில்லாப் பேரின்பத்தில் நீங்கள் இளைப்பாற இறைவனை இறைஞ்சுகின்றோம்.
உங்கள் நினைவுகளுடன்
மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
தகவல்: இ. மேகலா (மகள்) திருகோணமலை.

# அன்றாடப் பிரச்சனைகளை விலக்கி

# அணுகப்படமுடியாத வடக்கு-கிழக்கு விவகாரம்!

அலசுவது -இராஜதந்திரி

இலங்கையின் பன்னிரெண்டாவது பாராளுமன்றத் தேர்தலுக்கான வேட்புமனுக்கள் தாக்கலாகியுள்ளன. நாடு முழுவதிலும் இந்த வேட்பு மனுக்களை ஏற்றுக் கொள்ளும் பணி கடந்த சனிக்கிழமையன்று (அக்டோபர் 27) நிறை வெய்தியது.

4610 வேட்பாளர்கள் இத்தடவைத் தேர்தலில் போட்டியிடுகின்றனர். பதினெட்டு அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகள் தமது வேட்பாளர்களை நிறுத்தியுள்ளன. சுயேட்சைக் குழுக்களும் வேட்புமனுக்களைத் தாக்கல் செய்துள்ளன. இதுதவிர ஒவ்வொரு அரசியல் கட்சியும் தமது தேசியப் பட்டியல் வேட்பாளர்களையும் அறிவித்துள்ளன.

இலங்கையின் அரசியல் வரலாற்றில் முன்னொரு போதும் இல்லாதவாறு இத்தடவைத் தேர்தலில் அதிகளவு அரசியல் கட்சிகளும், வேட்பாளர்களும் பன்னிரெண்டாவது பாராளுமன்றில் இடம்பிடிக்கத் தம்மைத் தயார் செய்ய ஆரம்பித்துள்ளனர்.

எதிர்க் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி தனது தேர்தல் பிராசரத்தைக் கண்டியில் ஆரம்பித்திருந்தது. ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான இத்தேர்தல் பிரசார ஆரம்பக் கூட்டத்தில் ஐ.தே.க.வின் பழைய உறுப்பினர்கள் மட்டுமல்ல. அண்மையில் ஆளுங்கட்சியான பொதுஜன ஐக்கிய முன்னணியிலிருந்து விலகி வந்தோரும் பங்கு பற்றியிருந்தனர்.

இதேவேளை பொதுஜன ஐக்கிய முன்னணித் தலைவியான ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்ட தினத்தில் லண்டன் பயணமாகியிருந்தார்.

இத்தடவை லண்டன் பயணத்தின் போது பிபிஸி செய்தி நிறுவனம் உட்பட அங்கிருக்கும் பல்வேறு செய்தி ஸ்தாபனங்களுக்கும் ஜனாதிபதி சந்திரிகா இலங்கையின் இன்றைய அரசியல் நிலபரம் பற்றிப் பேட்டிகளை வழங்கியிருந்தார்.

ஜனாதிபதியின் இந்த லண்டன் விஜயத்தையும், அவர் அங்கு வழங்கியுள்ள பேட்டிகளையும் நோக்கும்போது பொதுஜன ஐக்கிய முன்னணியின் தேர்தல் பிரசாரத்தை பிரிட்டனில் ஜனாதிபதி சந்திரிகா ஆரம்பித்து வைத்தாரோவென்றே எண்ணத் தோன்றுகின்றது.

என்றுமில்லாதவாறு பெருமளவிலான கட்சித் தாவல்கள் இடம்பெற்ற நிலையிலேயே இத்தடவைப் பொதுத் தேர்தல் நடைபெறுகின்றது.

இந்நிலையில் புதிய பாராளுமன்றம் கூடும் போது, நாட்டு மக்களின் அரசியல் அபிலாஷைகளைப் பிரதிபலிப்பதாக அப்பாராளுமன்றம் அமையுமா? அல்லது அரசியல் கட்சிகளின் சொந்த நலன்களைப் பிரதிபலிப்பதாக அது அமைந்திருக்குமா? என்பதே கேள்விக்குரியதாக இருக்கின்றது.

இலங்கையை எடுத்து நோக்கும் போது என்றுமில்லாதவாறு பாரிய நெருக்கடிகள் அரசியல், பொருளாதார ரீதியாகத் தோன்றியுள்ளதையே அவதானிக்க முடிகின்றது.

கடந்த காலங்களில் இடம்பெற்ற அனைத்து வித தேர்தல்களிலும் ஏராளமாகவே வாக்குறுதிகள் வழங்கப்பட்டன. ஆனால் அவ்வாக்குறுதிகள் அனைத்துமே காற்றிலே கலந்தனவேயன்றி. மக்களின் எதிர்பார்ப்புகள் எதுவுமே பூர்த்தி செய்யப்படவில்லை.

குறிப்பாக 1994ம் ஆண்டு ஐக்கிய தேசியக் கட்சியின் பதினேழு வருடகால ஆட்சியை முடிவக்குக் கொண்டு வரும் விதத்தில் ஜனாதிபதி சந்திரிக்கா தலைமையிலான பொதுஜன ஐக்கிய முன்னணி முன்வைத்த வாக்குறுதிகள் நிறைவேற்றப்படாமலேயே இருந்துள்ளன.



பொதுஜன ஐக்கிய முன்னணியின் வாக்குறுதிகளில் முதன்மையானதே வடக்கு-கிழக்குப் பிரச்சனைக்கான அரசியல் தீர்வாகும்.

பொதுஜன ஐக்கிய முன்னணி வழங்கிய மற்றைய வாக்குறுதிகள், நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறை நீக்கம் மற்றும் புதிய அரசியலமைப்பைக் கொண்டுவருதல் என்பவையாகும்.

ஆனால் இந்த வாக்குறுதிகளில் எவற்றையேனும் சந்திரிகா அரசு நிறைவேற்றவில்லை. அத்துடன் இனப் பிரச்சனையைத் தீர்ப்பதற்கு நோர்வே வழங்க முன்வந்த உதவிக்கும் சந்திரிகா அரசு உரிய முக்கியத்துவத்தைக் கொடுத்திருக்கவில்லை.

தற்போது மீளவும் பொதுத்தேர்தலுக்கான பிரசாரங்கள் நாடளாவிய ரீதியில் சூடு பிடிக்க ஆரம்பித்துள்ளன.

கடந்த காலங்களில் பெருங்கட்சிகள் என்று ஒரிரு கட்சிகளே இருந்தன. அத்துடன் அவை கூறுபவற்றையே மக்கள் பெரிதும் செவி மடுத்தனர். ஆனால் இத்தடவைத் தேர்தலில் பதினெட்டு பதிவு செய்யப்பட்ட அரசியல் கட்சிகள் பெருங்கட்சிகளோடு கூட்டுச் சேர்ந்தும், தனித்தனியாகவும் தமது பிரசாரங்களை முன்னெடுத்துள்ளன.

இந்நிலையில் பெருங்கட்சிகள் கூறியவற்றையும், அவற்றின் வாக்குறுதிகளையும் மட்டுமே பொது மக்கள் செவிமடுக்கும் காலம் மலையேறி, அனைத்துத் தரப்பு அரசியல் கருத்துக்களையும் அறிய முனைகின்ற ஒரு புதிய சூழல் உருவாகியுள்ளதையே அவதானிக்க முடிகின்றது.

இன்று நாட்டில் நிலவும் முக்கிய பிரச்சனைகள் தொடர்பாக பாராளுமன்றில் எதிர்க்கட்சி, ஆளுங்கட்சி என்றிருந்த பெருங்கட்சிகள் பல்வேறு வாக்குறுதிகளையும் வழங்கலாம்.

ஆனால் பாராளுமன்றில் ஆளுங்கட்சியாகத் தெரிவ செய்யப்படும்போது தமது தனித்துவத்தைப் பேணி உறுதியான முடிவுகளைப் பெருங்கட்சிகளால் எடுக்கமுடியாமலேயே இருந்துவந்துள்ளது. எதிர்காலத்தில்கூட இத்தகைய நெருக்கடிநிலை கூடுதல் அழுத்தம் நிறைந்ததாக இருக்கும். ஏனெனில் சிறியளவில் பேரினவாத சக்திகளாக இருந்த அமைப்புக்கள் பல தற்போது கட்சி அரசியலில் இறங்கி பாராளுமன்ற ஆசனங்களையும் கைப்பற்றுபவையாக இருக்கின்றன.

அத்துடன் எதிர்காலத்தில் பாராளுமன்றில் ஆளுங்கட்சியாக ஆட்சியமைக்கக்கூடிய அரசியல் கட்சி தனது பலத்தைப் பெருக்கிக்கொள்வதற்கு சிறிய கட்சிகளின் ஒத்துழைப்பையும் நாடவேண்டியதாக இருக்கும். இதன் காரணமாக சிறிய கட்சிகளது விருப்பு வெறுப்புக்களுக்கே முக்கிய அரசியல்கட்சிகள் இடமளிக்க வேண்டிய சூழ்நிலைகளும் ஏற்படலாம்.

இத்தடவைத் தேர்தலை அவதானிக்கும் போது வடக்கு-கிழக்கில் கூட்டுச் சேர்ந்துள்ள நான்கு தமிழ்க் கட்சிகள் அரசியல் தீர்வ, நோர்வேயின் மத்தியஸ்தத்துடன் தமிழீழ விடுதலைப் புலிகளுடனான பேச்சு எனக்குரல் கொடுக்கத் தொடங்கியுள்ளன.

நான்கு கட்சிக் கூட்டமைப்பில் சேராத கட்சியான திரு.டக்ளஸ் தேவானந்தா தலைமையிலான ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி, வடக்கு-கிழக்கு மக்களின் அன்றாட வாழ்க்கைப் பிரச்சனைகளை ஆக்கபூர்வமாக அணுகுவதன் மூலமே ஓர் அரசியல் தீர்வுக்கு அடித்தள மிடமுடியமென்ற ரீதியில் தனது பிரசாரங்களை ஆரம்பித்துள்ளது.

அரசியல் தீர்வுக்கான நடவடிக்கைகள் என்ற ரீதியில் வடக்கு-கிழக்கு மக்கள் எதிர்நோக்கி வருகின்ற அன்றாட வாழ்க்கைப் பிரச்சனைகளையும் பாராமுகமாக இருந்துவிட முடியாது.

கடந்த கால் நூற்றாண்டுகால வடக்கு-கிழக்கு யுத்தம் வடக்கு-கிழக்குத் தமிழ் மக்களது அரசியல் அபிலாஷைகளை மட்டும் சிதறடித்துவிடவில்லை. அவர்களது அன்றாட வாழ்க்கையையும் பெரிதும் முடமாக்கிவிட்டுள்ளது.

வடக்கு-கிழக்கில் திரும்பமிடமெல்லாம் இடிபாடுகள், சாம்பர் மேடுகள், சிதைவுகள் என்றே காணப்படுகின்றன.

அகதிகள், அநாதைகள், விதவைகள், ஊனமுற்றோர் என்போரது எண்ணிக்கை வகை, தொகையற்றதாக இருக்கின்றது.

கல்வி, தொழில், போக்குவரத்து, மற்றும் பொருளாதார நடவடிக்கைகள் என்பவை வடக்கு-கிழக்கில் வெகுவாகவே பாதிப்படைந்துள்ளன.

1977ம் ஆண்டு பொதுத் தேர்தல் பிரசாரத்தின் போதுகூட தமிழர் விடுதலைக் கூட்டணியினர் தமது பிரசாரங்களை மேற்கொண்டபோதெல்லாம் தனிநாடு, தமிழர் தாயகம், போராட்டம் என்றெல்லாம் முழக்க மிட்டனர்.

ஆனால் அவர்களே பின்னர் ஆயுதப் போராட்டம் வெடித்த போது செய்வதறியாதவர்களாக இருந்ததுடன் உரிய தலைமைத்துவத்தையும் வடக்கு-கிழக்கு மக்களுக்கு வழங்க முடியாதவர்களாக இருந்தனர்.

கடந்த இருதசாப்த காலத்தில் பெருமளவிலான பாதிப்புக்களுக்கு முகங்கொடுத்துள்ள வடக்கு-கிழக்கு மக்கள் அரசியல் தீர்வொன்றை எதிர்நோக்குகின்ற அதேசமயம் தமது அன்றாடப் பிரச்சனைகளுக்கும் தீர்வுகள் கிடைக்கவேண்டுமென்றே எதிர்பார்க்கின்றனர்.

இதேவேளை தென்னிலங்கைக் கட்சிகள் தேர்தல் பிரசாரங்களை முடுக்கிவிட்டுள்ள இத்தருணத்தில் மீண்டும் 'புலிப் புராணத்தை'யும் பாட ஆரம்பித்துள்ளன.

ஐக்கிய தேசியக் கட்சிக்கு தமிழீழ விடுதலைப் புலிகளுடன் தொடர்புகள் இருப்பதாக பொதுஜன ஐக்கிய முன்னணி சாடியுள்ளது.

ஆனால் இதே பொது ஜன ஐக்கிய முன்னணியே 1994ம் ஆண்டில் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேசி இனப்பிரச்சனைக்குத் தீர்வொன்றை எட்டப் போவதாகத் தெரிவித்து ஆட்சி பீடமேறியிருந்ததென்பது குறிப்பிடத்தக்கது.

பொதுஜன ஐக்கிய முன்னணி 1994ம் ஆண்டு பொதுத் தேர்தலில் தமிழீழ விடுதலைப் புலிகளுடனான பேச்சுக்கள் பற்றிப் பிரசாரம் செய்த போது, ஐக்கிய தேசியக் கட்சியின் நிலைப்பாடு அதற்கு எதிரானதாகவே இருந்தது.

ஆனால் தற்போது ஐக்கிய தேசியக் கட்சி தமிழீழ விடுதலைப் புலிகளுடனான பேச்சுக்கள் பற்றிப் பிரஸ்தாபித்துள்ள தருணத்தில், பொதுஜன ஐக்கிய முன்னணி அது குறித்துக் குற்றஞ்சாட்ட ஆரம்பித்துள்ளது.

இலங்கையின் இன்றைய முக்கிய பிரச்சனையாக வடக்கு-கிழக்கு விவகாரமே இருந்து வருகின்றது. இவ்விவகாரத்தைத் தீர்ப்பது தொடர்பாக தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச வேண்டியதே அவசியமானதாக இருக்கின்றது.

தேர்தல் பிரசாரங்கள் சூடு பிடிக்க ஆரம்பித்துள்ள நிலையில் ஜனாதிபதி சந்திரிகா லண்டனுக்கு சுற்றுப் பயணம்மேற்கொண்டுள்ளார். இலங்கையின் இன்றைய அரசியல் நிலபரம் குறித்தும் அவர் அங்கே பேட்டிகளையும் வழங்கி வருகின்றார்.

ஜனாதிபதி லண்டனில் தங்கியுள்ள இத்தருணத்திலேயே பிரிட்டனில் வட அயர்லாந்துப் பிரச்சனையைக் கையாளும் விடயத்தில் பல முன்னேற்றகரமான நடவடிக்கைகளும் இடம் பெற்று வருகின்றன.

வட அயர்லாந்தின் ஐரிஷ் கெரில்லாக்கள் தமது ஆயுதங்களை களைவது குறித்து சாதகமான முறையில் நடந்துகொள்ள ஆரம்பித்துள்ள அதேசமயம், வட அயர்லாந்தில் நிலை கொண்டிருந்த பிரிட்டிஷ் இராணுவமும் தனது முகாம்கள், காவலரண்கள் என்பவற்றை அப்புறப்படுத்தி வருகின்றது.

வட அயர்லாந்துப் பிரச்சனைத் தீர்வு விடயத்தில் முன்னேற்றகரமான நிலையை ஏற்படுத்துவதாகவே இம்மாறுதல்கள் காணப்படுகின்றன.

எனவே லண்டன் பயணத்தை மேற்கொண்டுள்ள ஜனாதிபதி சந்திரிக்கா வட அயர்லாந்துப் பிரச்சனை விடயத்தில் பிரிட்டிஷ் அரசு கையாளும் நடைமுறைகளையும் உன்னிப்பாகக் கவனிக்க வேண்டியவராகின்றார்.

ஏனெனில் பிரிட்டனிலும் வட அயர்லாந்துக் குடியரசு இராணுவம் ஒரு பயங்கரவாத அமைப்பாகத் தடை செய்யப்பட்டுள்ளது. ஆயினும் அந்த அமைப்புடனான அரசியல் ரீதியான தொடர்புகளை பிரிட்டிஷ் அரசு துண்டித்து விடாது ஒரு நிரந்தரத் தீர்வுக்காகவே முயன்று வருகின்றது.

## அதிரடி அய்யாத்துரை



***மண்ணை மீட்கத்தான்*** தேர்தலில நிக்கிற அடித்துச் சொல்லிப் போட்டார் சம்பந்தர். கால சுழற்சி தமிழ் மக்களை எந்த அளவுல கொண்டு வந்து நிறுத்தியிருக்கிதென்று பார்த்தியளே. கூட்டணிக்காரரின்ர உந்த மாதிரி வீர வசனங்களைக் கேட்கேக்க பழைய ஞாபகங்கள் வந்துபோகுது! முன்னரும் உப்பிடித்தான். 'தனித் தமிழீழம்' என்று இளசுகளை ஏவிவிட்டுட்டு தங்களின்ர பிள்ளைகுட்டிகளை கனடாவுக்கும் லண்டனுக்கும் அனுப்பி படிப்பிச்சவை. இப்போ ரெண்டாவது ரவுண்டு! உந்த 'பொடியன்களின்ர' முதுகுல சவாரி செய்த தங்களின்ர அந்திம காலத்துக்காக சொத்து சேர்க்கிற பணியில குதிச்சியிருக்கினம். 'புலி' புலி,யென்று சொல்லி வாக்குக் கேட்டு 'இன்டகூலர்' சவாரிக்கு வழிதேடுகினம். அது இல்லாமல் தேர்தல் களம் அப்படியொன்றும் மண்ணை மீட்கவோ மண்ணாங்கட்டியை மீட்கவோ அல்ல!

***விருப்பு வாக்கைப்பற்றி*** கதைக்காமல் கட்சிக்கு மட்டுமே வாக்குக் கேட்கிறதெண்டு பிரசாரம் செய்யத் தொடங்கியிருக்குது ஆளுந்தரப்பு. கட்சி என்று பார்க்கேக்க உது இலாபமான ஐடியாதான். ஆனாலும் உதுல மற்றொரு பக்கமும் இருக்கு பார்த்தியளோ.. ஆளுந்தரப்பு முக்கியஸ்தர்களை விட பட்டியலில் கீழே உள்ளவர்கள் அதிகப்படியா விருப்பு வாக்கு எடுத்துட்டால் பெரியவர்களுக்கு சங்கடமா போயிடுமல்லே... அதை சமாளிக்கவும் உந்த வழிமுறை பயன்படலாம்!

***மலையகத்தில ஊர்*** ஊராய் அடிக்கல் முளைக்கத் தொடங்கியிருக்கிறது. பெயர் மறந்து போன தோட்டங்களில யெல்லாம் கோயில், பள்ளிக்கூடம் என்று கட்டித்தர... மன்னிக்கவும் அடிக்கல் நாட்டி அழகு பார்க்க ஒவ்வொருத்தரும் முண்டியடிக் கினம். சில இடங்களில கடந்த தேர்தலில நாட்டின அடிக்கற் களைச் சுற்றி செடி கொடி வளர்ந்து நாட்டியவையின்ற பெயர் படிகத்துக்கு நிழல் கொடுக்குது! சில இடங்களில் சொல்லால் வாக்குறுதி. சில இடங்களில் கல்லால் வாக்குறுதி. தேர்தலுக்குப் பின்னர் முன்னையது காற்றில், பின்னையது காட்டில்!

***தேர்தல் நடக்கும்*** முன்னரே 'புதிய அரசாங்கத்துக்கு' எச்சரிக்கை விடுக்கிற தமிழ்க்கட்சிக்காரரின்ர 'தூர நோக்கு' சிந்தனையை பாத்தியளே... 6 மாதகாலத்துக்குள்ள புலிகளுடன் பேசாவிட்டால் அஹிம்சை போராட்டம் நடத்தப் போறதா உரைத்திருக்கிறார் சேனாதிராஜா். அஹிம்சை போராட்டம் எதுக்கு ஆயுதப் போராட்டமே நடத்த வேண்டியதுதானே... (தங்கட பிள்ளைகளா சாகப் போகினம்?!) அறிக்கை அரசியல் கெட்டித் தனத்தை மக்களுக்கு ஞாபகப்படுத்திக் கொண்டே இருக்கவும்!

***இவ்வாரம்*** ஒரு வித்தியாசனமான குட்டிக் கவிதை

***வங்கிகள்***

***நமக்கு பணம் தேவை இல்லை என்பதை***
***நிரூபித்தால் கடன் வழங்கக்***
***காத்திருப்பவர்கள்!***

# உண்மைத் தொடர் 30

# உலகை உலுக்கிய சர்வாதிகாரி அடோல்ஃப் ஹிட்லர்

**போ**லந்து ஊடான வீதி ஒன்றை அமைக்கும் உரிமையை தருமாறு. 1939ம் ஆண்டு மார்ச் மாதம் 21ம் திகதி ஜெர்மனி உத்தியோகபூர்வ கோரிக்கை விடுத்தது. உடனடியாகவே இதனை போலந்து நிராகரித்தது.

ஏப்ரல் 3ம் நாள் தொடக்கம் போலந்து மீதான தாக்குதல் திட்டத்தை வகுக்கும் பணிகளை நாஜி படைகள் ஆரம்பித்திருந்தன. 'வெள்ளைத் திட்டம்' என்றழைக்கப்பட்ட இந்த வரைவில் ஏப்ரல் 11ம் திகதி ஹிட்லர் கைச்சாத்திட்டான். ஒருவரை ஒருவர் பரஸ்பரம் தாக்குவதில்லை என 1934ம் ஆண்டு ஜெர்மனியும், போலந்தும் செய்து கொண்ட ஒப்பந்தத்தை முறித்துக் கொள்வதாக அதே மாதம் 28ம் திகதி ஹிட்லர் அறிவித்தான். இதனையடுத்து ஆக்கிரமிப்புக்கான நேரடி வேலைகளில் ஜெர்மனியப் படைகள் ஈடுபடலாயின.

மிகவும் பலவீனமான எதிர்த்தாக்குதல் திட்டங்களை போலந்தும் வகுத்துக் கொண்டிருந்தது. ஆனால் போதிய தற்காப்பு ஏற்பாடுகளை போலந்தினால் மேற்கொள்ள முடியவில்லை. சகல அணிகளையும் ஒன்று திரட்டும் கட்டளை ஆகஸ்ட் 31ம் திகதிதான் போலந்து அரசாங்கத்தினால் பிறப்பிக்கப்பட்டது. ஆனால் மறுநாள் போலந்து இராணுவ உடையில் காணப்பட்டனர். வானொலியில் மிகவும் பிரபலமான இசை நிகழ்ச்சி ஒன்று ஒலிபரப்பாகிக் கொண்டிருந்தது. மூடியிருந்த ஒலிப்பதிவு அறைக்குள் திடீரெனப் புகுந்த இரண்டு படை வீரர்கள் தமது கைகளில் இருந்த துப்பாக்கியால் மைக்கின் முன்னாள் பல தடவை சுட்டார்கள். இந்த வெடிச் சத்தங்கள் நாடு முழுவதுக்கும் கேட்கும்படி வானொலி நிலையம் இயங்கிக் கொண்டிருந்தது. அதன் பின்னர் ஏற்கனவே தயாரித்து வைத்திருந்த வாசகங்களை மைக்கின் முன்னால் போலந்து நாட்டில் பேசப்படும் பொலிஷ் மொழியில் வாசித்தார்கள் அந்த படை வீரர்கள். "ஜெர்மனுக்கு எதிராக போலந்து யுத்தத்தில் இறங்க வேண்டிய நேரம் வந்து விட்டது. ஜெர்மன் ஒழிக போலந்து வாழ்க" என கூறப்பட்டது.

ஜெர்மனிய எல்லையில் போலாந்துதான் சண்டையை துவக்கியது என்பதை காட்ட ஹிட்லர் வகுத்த திட்டம்தான் இது. இதன் இரண்டாவது கட்டம் அன்றிரவே அரங்கேறியது.

ஜெர்மனியில் சிறைத்தண்டனை அனுபவித்து வந்த நூற்றுக்கணக்கான குற்றவாளிகள் சிறைச்சாலை வாகனத்தில் ஏற்றப்பட்டனர். தாம் எங்கு செல்லப் போகிறோம் என்பது அவர்களுக்குத் தெரியாது. தனியானதொரு இடத்தில் இறக்கப்பட்ட அவர்களுக்கு போலந்து இராணுவம் அணியும் சீருடை அணிவிக்கப்பட்டது. இரவோடு இரவாக கிளேய்விட்ஸ்ஸுக்கு அவர்களை அழைத்து வந்து வீதியில் ஓடவிட்டு சுட்டுத் தள்ளினார்கள். ஜெர்மன் இராணுவத்தை தாக்க வந்து செத்துப்போன போலந்து வீரர்களின் உடல்கள் என அவை மக்களுக்கு காண்பிக்கப்பட்டன.

இதற்கு சில நாட்களுக்கு முன்னர் "போருக்கான ஏற்பாடுகளை முழுமையாக செய்யுங்கள். யுத்தத்தை ஆரம்பிப்பதற்கான பிரசார சாக்கை நான் தருகிறேன். இது உண்மையாக இருக்குமா என்பது முக்கியமல்ல. வென்றவனை அவன் சொன்னது உண்மையா பொய்யா என்று கேட்கப்போவதில்லை" என்று கூறினான்.

இதன்படியே போர் ஆரம்பமானது. 1939ம் ஆண்டு செப்டம்பர் மாதம் முதலாம் நாள் அதிகாலை 4.45 மணிக்கு முதலாவது ஜெர்மனியப் போர் விமானம் போலந்து நிலைகள் மீது குண்டுகளை போட்டது. தாக்குதல் ஆரம்பித்த செய்தி வரும்வரை ஹிட்லர் தூங்காமல் விழித்துக்கொண்டே காத்திருந்தான்.

போலந்தின் கேந்திர நிலையங்களும், அடிப்படை கட்டமைப்புகளும் குண்டு வீச்சில் சின்னாபின்னமாகிக் கொண்டிருப்பதாக ஒரு சில நிமிடங்களிலேயே ஹிட்லருக்கு அறிவிக்கப்பட்டது.

அந்த செய்தி கிடைத்த பின்னர்தான் தன் அருகில் இருந்த ஈவாவின் நினைவே அவனுக்கு வந்தது. முன்னெப்போதும் இல்லாத மகிழ்ச்சி ஹிட்லரின் முகத்தில் தெரிந்தது. பெருவிரலை உயர்த்திக் காண்பித்தவாறே அவன் அவளை நெருங்கினான். ஹிட்லருக்குள் இனம் புரியாத மகிழ்ச்சி பெருக்கிட்டுக் கொண்டிருந்தது. தனது அழிவு ஆரம்பித்துவிட்டதை அறியாத அவன் தன் கனவு பலிக்கப்போவதாக எண்ணி மகிழ்ந்தான். அந்த சந்தோஷத்துடனேயே அவனது இரு கரங்களும் ஈவா பிரவுனை இறுக்கமாக அணைத்தன. அதிகாலை குளிரில் அவள் நடுங்கிக் கொண்டிருந்தாள். அந்த அணைப்பு அவளுக்கும் மிக அவசியமாகப்பட்டது. ஹிட்லருக்கு தன் இஷ்டப்படி விட்டுவிட்டு அமைதியாக அவனது செயல்களை பாதி மயங்கிய கண்களால் ஆமோதித்துக் கொண்டிருந்தாள். ஏனைய நாட்களை விட அவனது செயற்பாடு உற்சாகமாக இருந்தது. ஈவாவின் ஆடைகளை ரசனையோடு களைந்தான். குளிர் காற்றில் உறைந்துபோய் இருந்த அவளது மார்புகளை மென்மையாகக் கையாள ஆரம்பித்தான். ஈவாவுக்குள் உஷ்ணக் காற்று வீச ஆரம்பித்தது. அவளது கைகள் மேலெழுந்து ஹிட்லரின் தோள்களை அழுத்தத் தொடங்கின. உதடுகள் முணுமுணுக்க ஆரம்பித்தன. அவளுக்குள் இருந்து வெப்பமான மூச்சுக்காற்று அங்குலம் அங்குலமாக வெளியேறியது. இருவருக்கும் இடையில் ஒருவரும் தோற்றுப் போகாத யுத்தம் ஆரம்பமானது.

முத்தமிட்ட வேகத்தில் ஈவாவின் பற்கள் ஹிட்லரின் உடலின் பல பகுதிகளை பதம் பார்த்தன. அந்த வலியும் அவனுக்கு இனிப்பாகவே இருந்தது. **வருவான்...**



அதாவது செப்டம்பர் முதல் நாள் போர் ஆரம்பமானது.

போலந்து மீதான தாக்குதல்களை திடீரென தொடங்கும் விதத்தில் ஹிட்லர் பல இரகசியத் திட்டங்களுக்கு உத்தரவிட்டான். அதன்படி கிழக்கு ரஷ்யாவில் நடந்த போரின் 25 ஆவது ஆண்டு நிறைவு கொண்டாட்டங்களுக்காக என்ற சாக்கில் தயார் நிலையில் இருந்த ஜெர்மனியப் படையணிகள் போலந்து வடக்கு எல்லைக்கு நகர்த்தப்பட்டன. 'இலையுதிர்கால ஒத்திகை' என்ற பெயரில் மற்றொரு படையணியும் ஆக்கிரமிப்பு இலக்கை நோக்கி நகர்த்தப்பட்டது.

போரை ஆரம்பிக்க முன்னர் அதற்கான காரணத்தைத் தேடும் நாடகம் ஒன்றை கச்சிதமாக அரங்கேற்றினான் ஹிட்லர்.

ஆகஸ்ட் 31ம் திகதி போலந்துக்கு அருகில் உள்ள ஜெர்மனிய நகரமாகிய கிலேவிட்ஸ்ஸில் வைத்து ஹிட்லரின் கபட நாடகம் மேடையேற்றப்பட்டது.

இந்த நகரத்தில் உள்ள வானொலி நிலையத்தை சிலர் பலாத்காரமாக கைப்பற்றினர். ஆயுதங்களுடன் வந்த அவர்கள்

## ஷானு

# மூண்டது போர் 4

## தருவது ~ தண்டாயுதன்



அமெரிக்க விசேட படையணி வீரர்

● ஆப்கானிஸ்தானில் சரமாரியான குண்டு வீச்சு இடம் பெறுகிறது. அமெரிக்கா, பிரிட்டன் ஆகிய நாடுகள் தம்மிடமுள்ள அதிநவீன குண்டு வீச்சு விமானங்களை இத்தாக்குதல்களில் பயன்படுத்துகின்றன. விமானப்படை விமானிகள் இரவுபகலாக பறந்து சென்று தமது இலக்குகளைத் தாக்குகின்றனர். இந்த விமானிகளில் ஆண்கள் மட்டும் அடங்கவில்லை. பெண்களும் இருக்கிறார்கள். அமெரிக்க கடற்படையின் விமானத்தாக்குதல் பிரிவில் பெண் விமானிகள் பலர் பணிபுரிகின்றனர். இப்பெண் விமானிகளும் ஆண்களுக்கு நிகராக அதிவேக போர் விமானங்களில் சென்று குண்டு வீசுகின்றனர். இப்பெண்களில் மணமாகாதவர்கள் மட்டுமல்ல, குழந்தைகளோடு குடும்பம் நடத்தும் தாய்மாரும் அடங்குகின்றனர். பெண்களது சுதந்திரத்தை மறுத்த ஆப்கானின் தலிபான்களுக்கெதிராக பெண் விமானிகளே குண்டு வீச்சை நடத்துவது வியப்பாகவே இருக்கிறது.

● அமெரிக்க, பிரிட்டிஷ் போர் விமானங்கள் தற்போது ஆப்கானிஸ்தானின் குகைகள், குன்றுகள், மலைப்பாங்கான பகுதிகளில் குண்டுவீச்சை ஆரம்பித்துள்ளன. இப்பகுதிகளில் அமெரிக்கா தேடிவரும் ஒசாமா பின் லாடன் ஒளிந்திருக்கலாம் என்று கருதியே இக்குண்டு வீச்சுக்கள் நடத்தப்படுகின்றன. ஆப்கானிஸ்தானின் குகைகள் இலகுவில் எவருமே கண்டறியவோ அல்லது போய்ச் சேர்ந்துவிடவோ முடியாதவை. கரடுமுரடான, பள்ளத்தாக்கான பகுதிகளிலேயே இக்குகைகள் இருக்கின்றன. இவற்றின் மீது கடும் குண்டு வீச்சை நடத்தி ஒளித்திருப்போரை எதிர்கொள்ளலாமென்றே அமெரிக்கா எதிர்பார்க்கிறது.


காயமடைந்த அப்பாவி ஆப்கான் சிறுவர்கள்

● அமெரிக்கா ஆப்கானிஸ்தானில் ஓர் இராணுவத் தளத்தை அமைக்கத் திட்டமிடுகிறது. இத்தளத்தை அமைத்து தலிபான் போராளிகளுடன் சண்டையிடுவதோடு, வட ஆப்கானிஸ்தான் கூட்டணிப் படையினருக்கும் உதவ அமெரிக்கா உத்தேசித்துள்ளது. அமெரிக்கா ஆப்கானிஸ்தானில் நிலை கொள்ளும் விதத்தில் முதல் தடவையாக அமைக்கவிருக்கும் இத்தளம் 600 அமெரிக்க இராணுவ வீரர்களைக் கொண்டிருக்கக் கூடியதெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.


● அப்பாவிப் பொதுமக்களின் மரணம் நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்கின்றது. காத்திரமற்ற மண்குடிசைகளில் பதுங்கியிருக்கும் அப்பாவி ஆப்கானிஸ்தான் மக்களின்மீதும் அமெரிக்க விமானங்கள் வீசுகின்ற குண்டுகள் வீழ்ந்துள்ளன. சிறுவர்கள், முதியோர் எனப் பலதரப்பட்டோரும் கொல்லப்பட்டுள்ளனர். காபுல் நகரை அண்டியுள்ள வைத்தியசாலைகளில் மரண ஓலம் எழுகின்றது. ஆபத்தானவர்களுக்கு அவசர சிகிச்சைகள் வழங்கக்கூடிய வசதிகளும் குறைவாகவே இருக்கின்றது.

● ஆப்கானிஸ்தானிலிருந்து இலட்சக் கணக்கானோர் அகதிகளாகப் பாகிஸ்தானுக்குள் அடைக்கலம் தேடியுள்ளனர். இந்த அகதிகளில் குறிப்பாகப் பெண்கள் எவ்வித கல்வியறிவற்றோராகவுமிருக்கின்றனர். தலிபான் ஆட்சியாளர்கள் இப்பெண்களை கல்வி கற்கவோ, உலக விடயங்களில் நாட்டஞ் செலுத்தவோ அனுமதிக்கவில்லை. பாகிஸ்தானுக்கு வந்துள்ள இப் பாமரப் பெண் அகதிகளுக்குச் சில இடங்களில் வயிற்றுப் பசிக்கு மட்டுமல்ல. அறிவுப் பசிக்கும் உணவு வழங்கப்படுகிறது. பெண்களுக்கு எழுத, வாசிக்கக் கற்றுக் கொடுக்கும் நடவடிக்கைகளும் பாகிஸ்தான் அகதி முகாம்கள் சிலவற்றில் நடக்கிறது.

● யுத்தம் மும்முரமாக நடைபெற்றுக் கொண்டிருக்கும் இத்தருணத்தில் அடுத்த மாதத்தில் ஆப்கானிஸ்தானில் குளிர்காலம் ஆரம்பமாகிவிடும். இந்த குளிருக்குத் தாக்குப் பிடிக்கக்கூடிய நிலையில் ஆப்கானிஸ்தான் குழந்தைகள் இல்லை. ஏற்கனவே போஷாக்கின்றி பல வீனமடைந்துள்ளார்கள். குளிர்காலம் ஆரம்பித்ததும் உணவுப் பொருட்கள் கிடைக்காவிடில் பசி, பட்டினி காரணமாகவே இவ் வருட முடிவுக்குள் பல்லாயிரம் அப்பாவி ஆப்கானிஸ்தான் சிறுவர்கள் உயிரிழக்க நேரிடும் என்று உதவி ஸ்தாபனங்கள் தெரிவித்துள்ளன.



● ஆகாயத்திலிருந்து உணவுப் பொட்டலங்கள் மக்களுக்காக அமெரிக்க விமானங்களால் போடப்பட்டன. அதேசமயம் அமெரிக்க குண்டு வீச்சு விமானங்கள் போட்ட குண்டுகளில் அநேகமானவையும் தரையில் வீழ்ந்து வெடிக்காதிருக்கின்றன (Cluster bombs) உணவுப் பொட்டலங்களைப் பொறுக்குவோர் இக்குண்டுகளிலும் கைவைத்து ஆபத்தைத் தேட வேண்டாமென்று ஆப்கானிஸ்தானில் வானொலி மூலமாக பிரசாரங்களும் செய்யப்படுகிறது. **(தொடரும்)**



# மலைகள் மோதல்

சுமோ எனப்படும் மல்யுத்தப் போட்டிகள் ஜப்பான் நாட்டில் வெகு பிரபலம். மனித மலைகள் இதில் மோதிக்கொள்ளுவார்கள். அண்மையில் ஜப்பானின் டோக்கியோ நகரில் 'முதல் பேரரசர் கோப்பை' மல்யுத்தப் போட்டிகள் நடைபெற்றன.


இதில் சுமோ தரவரிசையில் இரண்டாம் இடம் வகிக்கும் கோட்டோ மிட்சுகி கோப்பையை வென்றார். இவர் இறுதிப் போட்டியில் மூத்த சுமோ வீரரான கைஹோவை வீழ்த்திய காட்சிதான் இது.

ஜப்பான் நாட்டின் அகிட்டா பகுதியில் உள்ள மியூசியம் (அருங்காட்சியகம்) கோடைகாலத்தில் குளுகுளு என்று இருப்பதற்காக, குளிர் காலத்தில் பெரிய பனிக்கட்டிகளை எடுத்துப் பத்திரப்படுத்தி வருகிறார்கள்.

இதற்காக பெரிய பனிக்கட்டிகளை 50 சென்டிமீட்டர் நீளமும் 50 சென்டிமீட்டர் உயரமும் 50 சென்டிமீட்டர் அகலமும் கொண்ட அளவில் வெட்டி பெரிய குளிர்பதனப் பெட்டியில் வைத்துப் பாதுகாக்கிறார்கள்.

பின்னர் கோடை காலத்தில் 10 முதல் 15 பனிக்கட்டிகளை எடுத்துப் பயன்படுத்தி குளிர்ச்சியான காற்றை அருங்காட்சியகத்தில் பரவ விடுகிறார்கள்.

# குளுகுளு மியூசியம்





# பெரிய குர்-ஆன்

உலகிலேயே மிகப்பெரிய திருக்குர்-ஆனை தனது கைப்பட எழுதிச் சாதனை படைத்துள்ளார் ஈரான் நாட்டு இளைஞர் ஒருவர். 25 வயதான இந்த இளைஞரின் பெயர் ஹுஸைன்.

இரண்டு மீட்டர் நீளமும் மூன்றரை மீட்டர் அகலமும் கொண்ட 604 பக்கங்களை தனது கையினால் அரபு மொழியில் எழுதிச் சாதனை படைத்துள்ளார் ஹுஸைன்.

# ஆப்கான் அகதிகள்

சொந்த மண்ணை விட்டு அகதிகளாக வெளியேறுவது எத்தனை கொடுமை.

ஆப்கானிஸ்தானிலிருந்து பாகிஸ்தானுக்கு வந்த அகதிகள் தான் இவர்கள். வேதனையை வெளிக்காட்ட முடியாமல் புழுங்கிக் கொண்டிருந்தாலும் சற்றுக் காலாற நடந்து வெளிக்காற்றைச் சுவாசிக்கிறார்கள் இவர்கள்.

பாகிஸ்தானின் பெஷாவரில்தான் இவர்கள் தங்க வைக்கப்பட்டிருக்கிறார்கள்.



# தகவல் பெட்டி



கமல்-ரவீனா
படம்: ஆளவந்தான்

திரையுலக மறுபக்கம் 217 தமிழ்நாட்டிலிருந்து மயன்

# வாய்ப்புத் தருவதாகக் கூறி இளம்பெண்ணை ஏமாற்றிய இயக்குநர்

மணம் வீசும் மானின் பெயரைத் தன் பெயரின் முன்பாதியாகக் கொண்ட இயக்குநர் அவர். படத்தில் நடிப்பவர்களில் இருந்து பணியாற்றும் ஏனைய கலைஞர்கள் வரைப் பணம் கொடுக்காமல் படமெடுப்பதில் கில்லாடி. பெண்கள் விஷயத்திலும் அப்படித்தான்.

சில மாதங்களுக்கு முன் தனது வழக்கமான மண்வாசனை கமழும் கிராமத்துக் காதல் கதை ஒன்றை வடிவமைத்துப் படமொன்றைத் தொடங்கினார்.

காதலையும் சாதியையும் இணைத்துப் பெயரைச் சூட்டிய அவர், படத்திற்கான நடிக, நடிகையரைத் தேர்வு செய்து விட்டார். அந்நேரம் பார்த்து இளம் பெண்ணொருத்தி வாய்ப்புக்கேட்டு அவரை நாடி வந்தார்.

படத்திற்கு தேவையான நடிக, நடிகையரைத் தேர்வு செய்தாகி விட்டதே. அடுத்த படத்தில் பார்க்கலாம் என்று கைவிரிக்கவில்லை.

அந்த இளம் பெண்ணைப் பார்த்ததும் அவர் மனதிற்குள் வேறொரு திட்டம் விரிய, எடுத்த எடுப்பிலேயே,

'இந்தப்படத்தில் 'பிரபல' வில்லன் நடிகருக்கு நீதான் ஜோடி,' என்று கூறியிருக்கிறார்.

இதைக் கேட்டதும் அந்தப்பெண், இயக்குநர் சொன்னதற்கெல்லாம் தலையாட்டினாள்.

'கதையைப் பற்றி விவாதிக்க வேண்டும். நீ தங்கியிருக்கும் இடத்திற்கு என்னால் வர முடியாது. எனவே நகரின் ஒதுக்குப்புறத்தில் எனக்குச் சொந்தமான வீடு இருக்கிறது. இந்த மாதிரிக் கதை விவாதங்களுக்காகத்தான் அந்த வீட்டையே கட்டி வைத்திருக்கிறேன். அங்கே தங்கிவிடு' என்று சொன்னார்.

அந்தப் பெண்ணும் நீண்ட நாட்களாக வாய்ப்புத் தேடி அலைந்திருப்பாள் போலிருக்கிறது. இயக்குநர் சுற்றிவளைத்துப்பேசிய விஷயத்தைச் சட்டெனப் புரிந்து கொண்டாள்.

உடனே தனது காரில் ஏற்றிக்கொண்டு போய் அந்தப்பெண்ணைத் தன் ஒதுக்குப்புற நகர் வீட்டில் குடி வைத்தார்.

தினமும் அந்த வீட்டில் அப்பெண்ணுடன் 'கதை விவாதம்' செய்தார். சில நாட்களோ சில வாரங்களோ அல்ல, சில மாதங்கள்.

அந்தப் பெண்ணும் பிரபல நடிகருக்கு ஜோடி என்றதும் திரையுலகில் நல்லதொரு இடத்தைப் பிடிக்கலாம் என்ற எண்ணத்துடன் இயக்குநரது விருப்பப்படி மனங்கோணாமல் நடந்து கொண்டாள்.

அப்பெண் ஆசை ஆசையாய் நம்பிக்கொண்டிருந்த அப்படப்பிடிப்பு நாள் வந்தது. படப்பிடிப்புக் குழுவினருடன் அந்தப் பெண்ணை வரச்சொல்லி விட்டு, இயக்குநர் முதலில் சென்றுவிட்டார்.

அங்கு சென்ற பிறகுதான் தெரிந்தது படத்தில் தனக்கு டம்மி வேடம் என்று. அதுவும் சற்று வயதான வேடம். வேண்டா வெறுப்பாக நடித்து விட்டு கோடம்பாக்கத்திற்குத் திரும்பினார் அந்தப் பெண்.

இயக்குநரால் தான் ஏமாற்றப்பட்ட கதையை எல்லாரிடமும் சொல்லி அந்த இயக்குநரைத் திட்டித் தீர்த்து வருகிறார்.



அனில் கபூர்-ராணி முகர்ஜி
படம்: நாயக் (இந்தி)

## சத்யராஜின் 'விவரமான ஆளு'

'என்னம்மா கண்ணு', 'லூட்டி', 'வல்லி' ஆகிய படங்களைத் தயாரித்த விதுரை அடுத்து 'விவரமான ஆளு' என்ற படத்தைத் தயாரிக்கவுள்ளார். இந்தப் படப் பெயரை ஏற்கனவே பாரதிபன் தனது படமொன்றிற்குப் பதிவு செய்து வைத்திருந்தார்.

விதுரை தயாரித்த முதலிரு படங்களில் நடித்த சத்யராஜ்தான் 'விவரமான ஆளு' படத்திலும் நாயகன். இதில் இவருக்கு இரண்டு ஜோடிகள். ஒருவர் பெண்களின் மனதை வருடும் தேவயானி. மற்றையவர் இளைஞர்களின் இதயத்தைத் திருடும் மும்தாஜ்.

இவர்களுடன் விவேக், பிரதாப் போத்தன், விஜுச்சக்கரவர்த்தி, செந்தில், பொன்னம்பலம், வையாபுரி, மயில்சாமி உட்பட பலர் நடிக்கின்றனர்.

இப்படத்தின் கதை-திரைக்கதை-வசனத்தை எழுதி இயக்குகிறார் செல்வபாரதி. இவர் விஜய் நடித்த 'நினைத்தேன் வந்தாய்', 'பிரியமானவளே' ஆகிய படங்களை இயக்கியவர்.


இசை: தேவா, ஒளிப்பதிவு: விஜய் மில்டன்.

## ரம்பா தொடைக்கு எதிர்ப்பு

பிரபுதேவா-காயத்ரி ஜெயராம் நடிக்கும் 'மனதைத் திருடிவிட்டாய்' படம் முடிவடைந்து தணிக்கைக்குப்போனது.

படத்தில் பயில்வான் ரங்கநாதன் தன் தொடை தட்டி விவேக்கிடம் சவால் விடுகிறார். 'இது என்ன ரம்பா தொடையா?' என பதிலுக்குக் கேட்கிறார் விவேக்.

இந்தக் காட்சிக்கு தணிக்கைக் குழுவினர் எதிர்ப்புத் தெரிவித்தனர். படத்தின் தயாரிப்பாளர் கே.ஆர்.ஜி. தணிக்கைக் குழுவினருடன் சண்டை போட்டு, அந்த வசனத்தைப் படத்தில் இடம்பெறச் செய்துள்ளார்.



ஆகாஷ்-கவேதா
படம்: சேலஞ்ச்

## இரண்டு வில்லன்கள்

அசோகச் சக்கரவர்த்தியின் கதையை ஒளிப்பதிவாளரும் இயக்குநருமான சந்தோஷ் சிவன் 'அசோகா' என்ற பெயரில் இயக்கி முடித்து விட்டார். இதில் அசோகனாக ஷாருக்கானும் அவரது காதலி கௌரகியாக கரீனா கபூரும் அசோகனின் தம்பி சுசிமாவாக அஜித்குமாரும் நடித்துள்ளனர்.

வரும் தீபாவளி தினத்தன்று வெளியிடும் நோக்கோடு தமிழில் மொழிமாற்றி வருகிறார்கள். 'அசோகா'வில் ஷாருக்கான்-அஜித் இருவருமே அரியணை மீது கண் வைத்திருக்கும் கபடத்தனம் கொண்டவர்களாக கிட்டத்தட்ட வில்லன்களாக வருகிறார்கள்.

## இந்தியில் 'காசி'

விக்ரம் வித்தியாச வேடத்தில் நடிக்கும் 'காசி' படத்தின் கதையைக் கேள்விப்பட்ட இந்தி நடிகர் அமீர்கான், உடனடியாக விக்ரமைத் தொடர்பு கொண்டு, 'காசி' படத்தை இந்தியில் தயாரிக்கும் உரிமையை இயக்குநர் வினயனிடம் வாங்கித் தரும்படி கேட்டிருக்கிறார்.

இதை விக்ரம், வினயனிடம் கூற, உடனே 'ஆம்' சொல்லிவிட்டார். விரைவில் இந்தியில் தயாராகவுள்ள 'காசி'யில் அமீர்கான் நடிக்கவுள்ளார்.

## 'நாயக்' குமார்

'ஜென்டில்மன்', 'காதலன்', 'இந்தியன்', 'ஜீன்ஸ்', 'முதல்வன்' ஆகிய பிரமாண்டமான வெற்றிப்படங்களை இயக்கியிருக்கும் ஷோமேன் ஷங்கர் முதல் முறையாக இந்தியில் இயக்கிய 'நாயக்' சரிவரப் போகாத காரணத்தால் வருத்தத்தில் இருக்கிறார்.

தமிழில் வெற்றி பெற்ற 'முதல்வன்' தான் இந்தியில் 'நாயக்' என எடுக்கப்பட்டது. அனில் கபூர்-ராணிமுகர்ஜி நடித்திருக்கும் இப்படத்தை ஏ.எம்.ரத்னம் 25 கோடி ரூபா செலவில் படமாக்கியுள்ளார். இந்தப்படத்தை இயக்கியதற்காக ஷங்கருக்கு 5 கோடி ரூபாய் சம்பளம் கொடுக்கப்பட்டது.

இந்தத் தோல்வியைச் சமாளிக்க, தமிழில் பெரும் வெற்றிப் படத்தைக் கொடுப்பதற்காக, ரஜினி காந்தை நடிக்க வைத்துப் படத்தை இயக்கும் திட்டத்தில் இருக்கிறார் ஷங்கர்.

## ஜொள்ளர்களிடம் மாட்டிய பெப்ஸி உமா

கலை நிகழ்ச்சி ஒன்றைத் தொகுத்து வழங்க, மலேசியாவுக்குச் சென்றார் பெப்ஸி உமா. நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்கள் உமாவை வைத்து விளம்பரம் செய்தார்களே தவிர, உமாவுக்குரிய சம்பளத்தைக் கொடுக்கவில்லை.

மலேசியா சென்ற உமா, தனது உறவினர் வீட்டில் தங்கினார். நிகழ்ச்சி ஒத்திகைக்காகச் சென்றபோது சில ஜொள்ளர்களின் 'கழுகுப்' பார்வையில் மாட்டினார்.

இவர்களின் அத்துமீறல்களில் இருந்து தப்பித்து நாடு திரும்பிவிட்டார்.

## ராதிகாவின் புது பிஸ்னஸ்

கதாநாயகி கனவோடு வந்த ராதிகா சௌத்ரிக்குக் கனவு நனவாகவில்லை. இரண்டாவது நாயகியாக நடித்தார். ஒரு பாடலுக்கு ஆட்டம் போட்டார். எதுவுமே பயனளிக்கவில்லை.

இதனால் புது வியாபாரத்தில் இறங்கி விட்டார். தமிழில் கதாநாயகியாக நடித்து தற்போது வாய்ப்புகளின்றி இருக்கும் இளம் நடிகை ஒருவருடன் இணைந்து கெஸ்ட்ஹவுஸ் விடுதி ஒன்று நடத்துகிறார்.

சென்னையில் வெளிநாட்டு உல்லாசப் பிரயாணிகள் அதிகம் நடமாடும் இடத்திற்கு அருகே இந்த விடுதி அமைக்கப்பட்டுள்ளது.

## மார்தட்டும் மும்தாஜ்

பிரசாந்த்-மும்தாஜ் நடித்திருக்கும் 'சாக்லெட்' படம் இளைஞர் கூட்டத்தின் வருகையால் வசூலில் வெற்றிநடை போட்டுவருகிறது.

மும்தாஜ் அண்மையில் பேட்டி ஒன்றில் 'சாக்லெட்' படம் தன்னால்தான் ஓடுகிறது என்று மார்தட்டிக் கூறியுள்ளார்.

தான் ஆடிய 'மல மல மலே மலே' பாட்டைப் பார்க்கத்தான் இளைஞர் கூட்டம் முண்டியடிப்பதாக அந்தப் பேட்டியில் தெரிவித்துள்ளார்.

## அக்கா தங்கை சண்டை

சிம்ரானுக்கும் அவர் தங்கை மோனலுக்கும் இப்போது பேச்சுவார்த்தை இல்லை, என்ன காரணமோ தெரியவில்லை. சிம்ரானுடன் இருந்த மோனல் தனியாக வீடு பார்த்துக் கொண்டு போய்விட்டார்.

மோனலுக்குத் துணையாக இருக்கவென்று தன்னுடன் இருந்த தாயாரை அனுப்பி வைத்தார் சிம்ரான். ஆனால் அம்மா வேண்டாம் என்று சிம்ரானிடமே திருப்பி அனுப்பிவிட்டார் மோனல்.

முகப்பில்
மாதவன்
காயத்ரி ஜெயராம்



...ஞ்சீவ் குமார்-அபிநயஸ்ரீ
படம்: பிருட்டி

...சிட் காதோடு சொல்லுகிறோம்

...டனப் புயல்' ஜோடியாக 'மனதைத் திருடும்' படத்தில் அறிமுகமாகும் மந்திரம் ...ன் பெயர் கொண்ட நடிகை தமிழ்ப்பெண்ணாக இருந்தாலும் மேற்கத்திய பாணியிலேயே ...கிறாராம். படப்பிடிப்புக்குழுவினருக்கு முன்னாலேயே சிகரெட்டை ஊதித் தள்ளும் ... இரவு நேரங்களில் உற்சாக பானம் இல்லாமல் உறங்கமாட்டாராம்.

...நட்சத்திர இயக்குநர்' என்ற அந்தஸ்தைப் பெற்றிருக்கும் அந்தத் தாடிக்கார இயக்குநர் ...டிகைகளுடன் நெருங்கிப் பழகி, காரியம் முடிந்தவுடன் அவர்களைக் கழற்றி விட்டவர். ... சில வருடங்களுக்கு முன் ஏற்பட்ட 'ரம்ய' நடிகையுடனான நட்பை மட்டும் வெட்ட ...மல் இருக்கிறாராம். அண்மையில் நட்புக்கு 'அடையாளம்' உருவாகியதாக வயிற்றைத் தொட்டுக் ... நடிகை, அந்த இயக்குநரிடமிருந்து சுமார் 85 லகரங்களைக் கறந்து விட்டாராம்.

...மிழுக்கு வரும்போதே பெரிய சைசில் இருந்த 'பிரகாச' நடிகை அதன் பின் ஏற்பட்ட ...ற்றிகள், சினிமாப் புள்ளிகளோடு 'சகவாசம்' போன்றவற்றினால் மேலும் குண்டானார். ...க்கு தொப்பையைக் 'குறைக்காவிட்டால் தொப்பை அழகிப் பட்டம் கொடுத்து விடுவார்கள்' ... சிலர் எச்சரிக்க, எக்ஸ்ட்ரா சதைகளைக் குறைக்கும் அறுவைச் சிகிச்சை செய்ய ... மண்ணுக்குச் சென்றுள்ளாராம்.

...தொடையழகி' தயாரிக்கும் 'மூன்று ரோஜாக்கள்' படத்தில் மூன்று நாயகிகளில் ஒருவ...டிக்கும் சிந்துபாத்தின் காதலி பெயர் கொண்ட இரண்டெழுத்து நடிகைக்குத் திரைப்பயம் ...ளதாம். படத்தில் எங்கே தன்னை ஓரங்கட்டிவிட்டு மற்ற இருவரும் தூக்கி நிறுத்தும் ...களில் நடிக்கவுள்ளார்களோ என்று பயந்து சம்பளத்தை அதிகம் கேட்கிறாராம்.

## ...மலின் நகைச்சுவை

...பாலச்சந்தர் இயக்கும் 100வது படமான ...தாலே பரவசம்' படத்தில் கமல் கௌரவ ...தில் நடிப்பது தெரியும். அவர் நடிப்பது ...சுவை வேடம் என்பது தெரியாத சங்கதி. ...படத்தில் கல்லூரி விழாவொன்றில் அழ...ட்டி ஒன்று நடக்கிறது. இதற்குப் பரிசளிக் ...கிறார் கமல். அழகிப் பட்டம் வென்ற ...ளுக்கு கமல் பரிசளிக்கும்போது, கமலின் ...ரான மதன்பாப் மேடையில் இருந்த ...ரியைக் கமல் பக்கம் திருப்புகிறார். ... வேண்டாம் என்று சொல்வதற்குள் ...ப் விசிறியைத் திருப்பிவிட, கமலின் ...ல் உள்ள விக் பறந்து விடுகிறது. ...டைத் தலையுடன் அசடு வழியும் கமல். ... காட்சி முழுவதும் வயிறு குலுங்கச் சிரிக்க ...கிறார்.

## லாரன்ஸ் நடிக்கும் 'ஸ்டைல்'

அஜித் நடித்த 'அமர்க்களம்' படத்தில் 'மகாகணபதி...' பாடலுக்கு நடனமாடிய லாரன்ஸ், இப்போது 'பார்த்தாலே பரவசம்', 'அற்புதம்' ஆகிய படங்களில் நடித்து வருகிறார்.

இதையடுத்து இவர், 'ஸ்டைல்' என்ற படத்தில் நடிக்கவுள்ளார். இதில் லாரன்ஸுக்கு ஜோடியாக காயத்ரி ரகுராம் நடிக்கிறார். மற்றும் வடிவேலு, ராதாரவி, ராஜன் பி.தேவ், தாமு, மயில்சாமி, கோவை சரளா, பாத்திமா பாபு ஆகியோர் நடிக்கின்றனர்.

முக்கிய வேடமொன்றில் குஷ்பு நடிக்கிறார்.

இப்படத்தின் கதை-திரைக்கதை அமைத்து இயக்குகிறார் புதியவரான சக்கரவர்த்தி.

## ...ளியான படங்களில் ஏற்பட்ட மாற்றங்கள்

... வெளியான பின், இரசிகர்கள் மற்றும் வேறு சிலரது வேண்டுகோளுக்கிணங்க ...கள் செய்யப்படுவதுண்டு. அந்த வகையில் அண்மையில் 3 புதிய படங்களில் மாற் ... செய்யப்பட்டன.

...லாவது 'சமுத்திரம்'. இப்படம் வெளியாகி சில வாரங்களுக்குப் பின் முடிவு சுபமாக ...ப்பட்டுள்ளது. சரத்-முரளி-மனோஜ் ஆகியோரின் தங்கையின் கணவர் மனந்திருந்தி ...சேரும்படி முடிவு மாற்றப்பட்டுள்ளது.

...ண்டாவது, 'பாண்டவர் பூமி'. இப்படம் மிக மெதுவாக நகர்வதாகக் கூறப்பட, சூப்பர் ... ரஜினியின் ஆலோசனையின் பேரில் சில காட்சிகளுக்குக் கத்தரி வைக்கப்பட்டது.

...த்து '12பி'. படம் குழப்பமாக இருக்கிறது என்று சிலர் அபிப்பிராயப்பட, படத்தின் ...ல் இயக்குநர் கதிர் கதையைப் பற்றி விளக்கமாக கூறியுள்ளதைச் சேர்த்துள்ளனர். ...படத்தின் இயக்குநர் ஜீவா என்றாலும் படத்துவக்கத்தில் பார்த்திபனும் இறுதியில் ... குரல் கொடுத்திருக்கின்றனர்.

## மினி சினி

- சிறிய இடைவெளிக்குப்பின் ஜீ.வி. தயாரிக்க விஜய்-முன்னாள் பிரபஞ்ச அழகி பிரியங்கா சோப்ரா இணைந்து நடிக்கும் படத்திற்கு 'தமிழன்' என்று பெயரிடப்பட்டுள்ளது.
- மம்முட்டி-அம்சவிர்தன் இணைந்து நடிக்கும் 'ஜூனியர் சீனியர்' படத்தில் சாருலதா-தேஜாஸ்ரீ ஆகிய இரு புதுமுகங்கள் கதாநாயகிகளாக அறிமுகமாகிறார்கள்.
- ஏ.ஆர்.ரஹ்மான் இசையில் பார்த்திபன் இயக்கி நடிக்கும் 'ஏலேலோ' படம் சற்றுத் தாமதமாவதால், குறுகிய காலத் தயாரிப்பாக 'சொன்னா கேக்குதா மனசு' என்ற படத்தைத் தயாரிக்கவுள்ளார் பார்த்திபன்.
- தெலுங்கில் தயாரான 'மாலி' படத்தில் தமிழ் மந்த்ரா ஆடிய கவர்ச்சி ஆட்டத்தை ஆடியிருக்கிறார், தமிழ்ப் படங்களில் நடிக்க வாய்ப்பின்றி இருக்கும் வித்தியா.
- தற்போது பட வாய்ப்புகளின்றி இருக்கும் நகைச்சுவை நடிகர் செந்தில், இளம் முன்னணி நடிகர் ஒருவரை வைத்துச் சொந்தப் படம் தயாரிக்கும் முயற்சியில் இறங்கியுள்ளார்.
- மீனாவுக்குத் தமிழில் புதிய படவாய்ப்புக்கள் இல்லையென்றாலும் அவர் நடித்த வேற்றுமொழிப் படங்கள் சில தமிழில் மொழிமாற்றப்பட்டு வெளியாகவுள்ளன.
- இந்தியில் 'மின்னலே' படத்தை இயக்கி முடித்து விட்டுத் தமிழுக்குத் திரும்பியிருக்கும் கௌதம் அடுத்து '12பி' பட நாயகன் ஷாம் நடிக்கும் படமொன்றை இயக்கவுள்ளார்.
- ரஞ்சித்-பிரியாராமன் இணைந்து நடித்த 'நேசம் புதுசு' படத்தை இயக்கிய பிரபு அடுத்து 'அரசு' என்ற படத்தை இயக்கவுள்ளார். இதில் அப்பாஸ்-லைலா ஜோடியாக நடிக்கிறார்கள்.

## மாதவனின் புதிய காதல்

தமிழில் 'பார்த்தாலே பரவசம்' மணிரத்னத்தின் 'மஞ்சள் குடை' ஆகிய படங்களில் நடித்து முடித்திருக்கும் மாதவன், இந்திக்குச் சென்றுள்ளார்.

'மின்னலே' படம் இந்தியில் 'ரெஹ்னா ஹை தேரே தில்மே' என்ற பெயரில் தயாராகியுள்ளது. தமிழில் நடித்த மாதவனே இந்தியிலும் ஹீரோ. தமிழில் ரீமா சென்-அப்பாஸ் நடித்த வேடங்களில் முன்னாள் உலக அழகி தியா மிர்ஸா-சைப் அலிகான் நடித்துள்ளனர்.

கௌதமே இந்தி 'மின்னலே' படத்தையும் இயக்கியுள்ளார். அண்மையில் முடிவடைந்திருக்கும் இப்படத்தை அடுத்து மாதவன் மேலும் 3 இந்திப் படங்களில் நடிக்க ஒப்பந்தமாகியுள்ளார். இவற்றை முடித்து விட்டுத்தான் தமிழுக்கு நடிக்க வரவிருக்கிறார் மாதவன்.

இந்திப் படங்கள் முடிவடைய நாட்கள் அதிகமாகும் என்பதால் மாதவனை வைத்து தமிழில் படங்களைத் தயாரிக்கும் தயாரிப்பாளர்கள் மாதவனின் 'இந்திப் படக்காதலால்' கையைப் பிசைந்து கொண்டிருக்கிறார்கள்.

## தெலுங்கு வரவு

விக்ரமனிடம் உதவியாளராக இருந்த ரவிசங்கர் தனியாக வந்து இயக்கும் 'வருஷமெல்லாம் வசந்தம்' படத்தில் அனிதா என்ற புதுமுகத்தை நாயகியாக அறிமுகப்படுத்துகிறார்.

அனிதா தமிழுக்குத்தான் புதியவரே தவிர ஒரு தெலுங்குப் படத்தில் நடித்துள்ளார். 'நுவ்வே நேனு' என்ற அந்தத் தெலுங்குப் படம் வெள்ளிவிழாக் கொண்டாட, தெலுங்கில் 5 படங்களில் நடிக்க ஒப்பந்தமாகியிருக்கிறார்.

கவர்ச்சி மற்றும் முத்தக்காட்சிகளில் நடிக்கவும் பச்சைக் கொடி காட்டியுள்ளாராம் அனிதா.

## 4 வடிவேலுகள்


சரத்குமார் கதாநாயகனாக நடிக்கும் 'மாணஸ்தன்' படப்பிடிப்பின்போது காலில் அடிபட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் வடிவேலு. இவர் நடித்து அடுத்து வரவிருக்கும் படம் 'மனதைத் திருடி விட்டாய்'.

இதில் இவர் அண்ணன், தம்பி, அம்மா (கரகாட்டக்காரி), அப்பா என 4 வேடங்களில் நடித்துள்ளார்.

## அல்பம் தயாரிக்கும் நடிகைகள்

தலைப்பைப் பார்த்ததும் இசை அல்பம் தயாரிப்பதாக நினைத்து விட வேண்டாம். படவாய்ப்புக்கள் இல்லாமல் இருக்கும் நடிகைகளும் புதிய வாய்ப்புத் தேடும் ஓரளவு புதிய நடிகைகளும் தான் தம்மைக் கவர்ச்சிகரமான போஸ்களில் படம்பிடித்து அல்பம் தயாரித்து வருகின்றனர்.

இந்த அல்பங்களைப் பட இயக்குநர்கள், தயாரிப்பாளர்கள் பார்வைக்கு அனுப்புகிறார்கள். சங்கவி, ரேஷ்மா, அபிநயாஸ்ரீ என்று அல்பம் தயாரிப்பவர்கள் பட்டியல் நீளுகிறது.



மம்முட்டி-அம்சவிர்தன்
படம்: ஜூனியர் சீனியர்



பாடகர் ஹரிகரன்-குஷ்பு
படம்: பவர் ஆஃப் விமன்

# யார் இந்தக் குழந்தை



மெல்லிய புன்னகையுடன் இருக்கும் இந்தக் குழந்தையை எங்கோ பார்த்த மாதிரி இருக்கிறதா? இந்தப் பிஞ்சு இன்று அழகு தேவதையாக வளர்ந்து விட்டாள். உருகும் பெயரைக் கொண்ட இந்த அழகி, தான் உருகாமல் பார்ப்போரை உருக வைத்துவிடுவாள்.

யாரென்று கண்டுபிடிக்காதவர்களுக்கு இருக்கவே இருக்கிறது 18ம் பக்கம்.

## பேனா நண்பர்கள்







| | | |
|---|---|---|
| பெயர்: பி. வசந்தகுமார், | பெயர்: கே. ராஜி, | பெயர்: பி. ரிஹான், |
| வயது: 17 | வயது: 22 | வயது: 19 |
| முகவரி: முதலியார் குளம், செட்டிகுளம், வவுனியா. | முகவரி: 2ம் வட்டாரம், நெடுந்தீவு மேற்கு, நெடுந்தீவு. | முகவரி: ஹிஜ்ரா வீதி, சின்ன உல்லை, பொத்துவில்-03. |
| பொழுது போக்கு: வழமையானவை. | பொழுது போக்கு: வானொலி, பத்திரிகை. | பொழுது போக்கு: வழமையானவை. |

## நாளைய வாழ்வுக்காக

நட்டநடு இரவு
பூமியில்-
நாய்களும் பேய்களும்
கூட-
உறங்கிடும் வேளை
குளிர்-
வாட்டி வதைக்கும்
ஆழ்கடலின்
நடுவில்-
அலைகளின் ஆட்டத்திற்கு
ஆடுகின்ற-
தோணியில்
நானும் என்
நண்பனும் மட்டும்.
வெட்டவெளி வான்பரப்பில்
இருள்-
கொட்டிக் கிடக்கிறது.
அரிக்கன் விளக்கின்
கண்ணாடிக் கூட்டுக்குள்
சுடர்-
கண்ணா மூச்சுக்
காட்டுகிறது.
கடலன்னையின் பரந்த
வயிற்றுக்குள்-
வலையை வீசிவிட்டு
நானும் என்-
நண்பனும்
கொட்டுக் கொட்டென்று
ஊசிபோல் குத்துகிற
குளிரையும்-
பொருட்படுத்தாமல்
விழித்திருக்கிறோம்
நாளைய-
வாழ்வுக்காக.

பரட்சிபாலன்-
திருகோணமலை.

## தேன் கிண்ணம்

## சில்லறைத் தனங்கள்

கண்ணே! இதோ
நீ சிரித்துக் கொள்
நான் அழுதுகொள்கின்றேன்
சிரிப்பதும் அழுவதும்
எங்கள் கைகளிலா
இருக்கிறது?
***
பெண்ணே!
நான் தேயிலையாகவும்,
நீ சீனியாகவும்
இல்லறத்தில் இணைந்து
தேனீராக நினைத்தேன்
ஆனால்
நீயோ எண்ணெய்யாகவும்
நான் தண்ணீராகவும்
ஒட்டாமலே போய்விட்டோம்.
***
எங்கள் உறவு
ரன்வே பிளேனாக
இருக்குமென நினைத்தேன்
ஆனால்...
கல் ஒழுங்கையில் ஒரு
மண்ணெண்ணை வண்டிலாக
போய்விட்டதே!
***
குறைந்தது
கோயில் மாடாக நானும்
தர்மகர்த்தாவாக நீயும்
இருந்திருக்கலாம்
ஆனால்...
நீ வட்டக்கச்சி நாம்பனாகவும்
நான்வாய்க்கால் புல்லாகவும்
இருந்து தொலைத்துவிட்டோமே!
***
உன் பாதத்தில்
முள்குத்தாமல் நான்
செருப்பாகிக் கொண்டு
இருந்தேன்.
நீயோ மீன்கறியை உண்டு
உன்வாயையே
தைத்துக் கொண்டாய்!
***
நீ அங்குல அங்குலமாக
சிரிக்கும் போதெல்லாம்
என்னைப் பார்த்து (என்று)
கொலரை தூக்கிகொள்வேன்.
ஆனால்...
பின்னால் யாராவது
நிற்கின்றார்களோ? என்று
பார்க்கத்தோன்றவே இல்லை.
***
என்கனவில் நீ
வசந்தமாளிகையில்
வாணி சிறீயைப் போல
பறந்து வருகின்றாய்.
ஆனால்..
உன்கனவில் நான்
நான்கு காலில்தான்
வருகின்றேனோ தெரியவில்லை.
***
கடவுள் புத்திசாலிதான்
எப்பொழுதுமே
முழங்காலுக்கும்
தலைக்கும்
முடிச்சுபோடவே மாட்டான்.
***

இணுவில் உத்திரன்.

## வரம் வேண்டும்

கொட்டும் அருவியாய்
புன்னகைக்கையில்-நீ
நானதிலே
புதைந்து
தொலைந்து
போகவேண்டும்
***
முந்தானைச் சோலையை
முகர்ந்து வரும்
காற்றினை
நான் மட்டுமே
சுவாசிக்கின்ற
பாக்கியம் வேண்டும்.
***
விரல்கள்
கோதுமுந்தன்
தலையாய்
கூந்தலேந்தும்
மல்லிகையாய்
நான் மாறுமந்த
நாள் வர வேண்டும்
***
விடியலில்
பூபாளத்திற்கு பதிலாய்
குயிலேவுன்
குரல்
வேண்டுமெனக்கு
***
மெல்லினங்களுருளும்
உன்னதரங்களிலே
வார்த்தையாகின்ற
வரமொன்று
வேண்டுமெனக்கு!!

கலையன்பன் நிலாம்-
தாராபுரம்.

## என் வெண்ணிலா பதில் சொல்லுமா

கண்ணிமைக்கும் நேரத்திற்குள்
உணர்வுகளையும் உருவத்தினையும்
நிலை குலைத்துச் சென்ற
அவளது வார்த்தைகள்
"கனவாகிப் போகாதா" என்ற
தவத்தினிலிதயம்
தோற்றுப் போனது.
***
உள்ளத்தில்
பலகோடிக் கனவுகளை
விதைத்து விட்டு,
தவத்தினை
கலைத்துச் சென்றதனால்
கருமையுடைக்குள்
உணர்வுகள்
கட்டுண்டு போயின.
***
கவிதைக்கே கருவாகி
ஆன்மாவோடு
இரண்டரக் கலந்த
இதயத்தில்
ஒளிர்ந்த தீபத்தை
தூர்த்து விட்டுப்போன
அவளிடம்
மீண்டும் தீபத்தை
நானெங்ஙனும்
ஏற்றச் சொல்வேன்?
***
என்னுணர்வுகளையெல்லாம்
அவளிதயத்தோடு
வாரிச் சுருட்டிக் கொண்டு
முகவரி அறியா
தேசத்திற்குப் போன பின்னர்
விடியலை
நானெப்படி வரவேற்பேன்?
***
துயரங்களினால்
ஆறுதலில்லாமல்
கந்தலாகி-கருமையாகி
சிதைந்த இதயத்தில்
வசந்த காலத்தின்
புதிய வாசலுக்கு
நானெங்ஙனும்
தன்ந்தனியே பயணிப்பேன்?
***
எட்டியும் போட்டியும்
மீதமாகிப் போன
தீவொன்றில்
தன்னந் தனியே
தவிப்போடு விட்டுப் போன-என்னை
ஆத்மார்த்தமான அன்பும்
பசுமை நினைவுகளையும் தவிர
எதுவுமென்னை
சூழ்ந்திருப்பதாகத் தெரியவில்லை.

முகம்மது ஹாரீத்-அட்டாளைச்சேனை-11.




உலகப் புகழ் பெற்ற எழுத்தாளர் கார்லைல் 'பிரஞ்சுப் புரட்சி' என்ற ஒப்பற்ற சரித்திர நூலை எழுதினார். இந்த நூலின் மூலமே அவர் பெரும் புகழ் பெற்றார். ஒப்பற்ற எழுத்தாளர் வரிசையில் அவர் இடம்பெற்றார்.

இந்த நூல்தான் மாபெரும் இலக்கியமாக இன்றும் திகழ்ந்து கொண்டிருக்கிறது. உலக இலக்கிய வரிசையில் இடம்பெற்றது.

கையெழுத்துப் பிரதியை பொறுப்பற்ற நண்பனிடம் தந்தது தன்னுடைய குறைபாடுதானே தவிர நண்பனின் தவறு இல்லை என்று தன்னையே சமாதானப் படுத்திக் கொண்டார். குற்றத்தைப் பிறர் மேல் சுமத்தும்போதுதானே கோபம் வருகிறது.

தன் மேலே குற்றத்தைச் சுமத்திக் கொள்ளும் போது எங்கிருந்து கோபம் வரமுடியும்? நண்பரை முற்றிலும் மறந்து விட்டு நூலை எப்படி எழுதுவது என்று தொடர்ந்து யோசனை செய்து கொண்டிருந்தபடியினால் தான் அவருக்கு கோபம் ஏற்படவில்லை.

நூற்றுக்கணக்கான பக்கங்களை

## ஆக்கபூர்வமான உணர்வு

இந்த நூலை முதலில் கையெழுத்துப் பிரதியாக எழுதி முடித்தார். தன்னுடைய அன்பு நண்பனிடம் படிக்க கொடுத்தார். நூலின் தன்மையைப் பற்றி நண்பரின் கருத்தை கேட்க விரும்பினார்.'

அதனால் தான் நண்பனிடம் கொடுத்தார். பல மாதங்கள் சென்றன. நண்பர் படிக்கவே இல்லை. கார்லைல் நண்பரிடம் கையெழுத்துப் பிரதியைப் பற்றி குறிப்பிட்டார்.

படித்து முடித்திருந்தால் அதனைத் தரும்படி கேட்டார். அப்பொழுதுதான் நண்பருக்கு அதைப் பற்றிய ஞாபகம் வந்தது. காரணம் அந்தப் பிரதியை மேஜைமேல் வைக்காமல் கீழே வைத்து விட்டார்.

வீட்டு வேலையாள் அது குப்பை கடதாசி என்று நினைத்து நெருப்பில் எரித்து விட்டார். இதனை நண்பர் கார்லைலிடம் கூறியதும். கார்லைல் ஒரு நிமிடம் அதிர்ச்சியில் நின்று விட்டார்.

இப்படிப்பட்ட பொறுப்பற்ற முறையில் நடந்து கொண்ட நண்பரிடம் அவர் எப்படி நடந்துகொண்டார் தெரியுமா?

கார்லைல் வருத்தப்பட்டாரே தவிர கோபப்படவில்லை. அமைதியாக நண்பரிடம் விடைபெற்றார்.

வீட்டிற்கு வந்தார். அமைதியாகச் சிந்திக்க ஆரம்பித்தார். தன்னால் மீண்டும் எழுத முடியுமா என்று யோசனை செய்தார்.

தன்னுடைய நினைவுகளிலிருந்து மீண்டும் எழுதத் தொடங்கினார். இரண்டாவது தடவையாக எழுதினார்.



மறுபடியும் எழுதியே ஆகவேண்டும் என்ற நிர்ப்பந்தம் ஏற்பட்டது. நிதானமாகச் செயல்பட ஆரம்பித்தபடியினால் கோபம் அவருக்கு உண்டாகவில்லை.

எழுதியே ஆகவேண்டும் என்ற ஒரே நோக்கம் தான் அவரிடம் இருந்தது. வேறு எது பற்றியும் நினைத்துப் பார்க்க வில்லை. இந்த ஆக்கபூர்வமான உணர்வு தான் அவரிடம் அதிகமாக இருந்தபடியினால் அற்புதமான நூலை எழுதினார்.

இவருடைய வாழ்க்கையின் மூலம் நாம் தெரிந்து கொண்டது என்னவென்றால் நடந்து முடிந்த காரியத்தைப் பற்றியே நினைத்துக்கொண்டிருந்தால் ஆத்திரமும் கோபமும் தான் பொங்கும். எதுவும் செய்யாமல் சோம்பேறியாகத் தான் உட்கார்ந்து இருக்க வேண்டிய நிலை உருவாகும் என்பதுதான்.

## இந்தவாரம் உங்கள் பலன்

04.11.2001 தொடங்கி 10.11.2001வரை

### மேடம்:

(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்,) தொழில் நிலை உயர்வுடன் பணவரவும் சேரும். குடும்ப நிலையில் முன்னேற்றம் உண்டாகும். வெளியூர் பிரயாணங்களில் அவதானம் தேவை. உத்தியோகஸ்தர்கள் மேலதிகாரிகளுடன் இணைந்து நடப்பது நல்லது. மாணவர்களுக்கு கல்விச் சிறப்புண்டாகும். விவசாயிகள், வியாபாரிகள் உரிய இலாபம் பெறுவர்.

அதிஷ்ட நாள்: புதன்.
அதிஷ்ட இலக்கம்: 01.

### இடபம்:

(கார்த்திகை பின்முக்கால், ரோகிணி, மிருகசீரிடத்து முன்னரை,) எதிர்பார்த்த கருமங்களில் சிறுதடை ஏற்பட்டு மறையும். பொருள்வரவில் மந்தநிலை தோன்றும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். உத்தியோக ரீதியாக சிலருக்கு மாற்றங்கள் உருவாகும். மாணவர்களுக்கு கல்வியில் ஏற்பட்டிருந்த தடைகள் விலகும். விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம் பெறுவர்.

அதிஷ்ட நாள்: திங்கள்.
அதிஷ்ட இலக்கம்: 03.

### மிதுனம்:

(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன்முக்கால்) தொழிலிலும், குடும்பத்திலும், இருந்து வந்த பிரச்சனைகள் மறையும். பொருளாதாரம் ஓரளவு சிறந்து விளங்கும். உத்தியோகத்தில் மேலதிகாரிகளின் ஒத்துழைப்பு கிடைக்கும். மாணவர்களுக்கு கல்விச் சிறப்பளிக்கும். விவசாயிகள் வியாபாரிகள் மத்திம இலாபம் அடைவர்.

அதிஷ்ட நாள்: செவ்வாய்.
அதிஷ்ட இலக்கம்: 04.

### கர்க்கடகம்:

(புனர்பூசத்து நாலாங்கால், பூசம் ஆயிலியம்) தொழில் கஷ்டங்கள் தீரும். குடும்பத்தில் சந்தோஷம் நிலவும். வீண் பிரச்சனைகளை தவிர்த்துக் கொள்வது நல்லது. உத்தியோகஸ்தர்கள் எதிர்பார்த்த நன்மைகள் வந்து சேரும். மாணவர்களுக்கு கல்விச்சிறப்பளிக்கும். விவசாயிகள், வியாபாரிகள் இலாபமடைவர்.

அதிஷ்ட நாள்: திங்கள்.
அதிஷ்ட இலக்கம்: 07.

### சிங்கம்:

(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்) மனக்குறைநீங்கி, மகிழ்வு ஏற்படும். தொழில் கஷ்டங்களால் சிலர் அவதியுறுவர். பணவரவு சுமாராக இருக்கும். உத்தியோகஸ்தர்கள் எதையும் திட்டமிட்டுச் செய்வது நன்மைதரும். மாணவர்களுக்கு கல்வியில் உயர்வு கிடைக்கும். விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம் பெறுவர்.

அதிஷ்ட நாள்: வெள்ளி.
அதிஷ்ட இலக்கம்: 02.

### கன்னி:

(உத்தரத்து பின்முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை,) வீண் கவலைகள் மறையும். எதிர்பார்த்த கருமங்கள் வெற்றிகரமாக முடிவுறும். பொருளாதாரம் சிறந்து விளங்கும். உத்தியோகத்தில் மேலதிகாரிகளின் ஆதரவு கிடைக்கும். மாணவர்களுக்கு கல்வியில் உயர்வுநிலை தோன்றும். விவசாயிகள், வியாபாரிகள், இலாபமடைவர்.

அதிஷ்ட நாள்: வெள்ளி.
அதிஷ்ட இலக்கம்: 04.

## சோதிட மாமணி தில்லை

### துலாம்:

(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன்முக்கால்) குடும்பத்தில் மகிழ்ச்சியும், சந்தோஷமும் நிலவும். பணவரவு சிறந்து விளங்கும். உத்தியோகஸ்தர்கள் நன்மை பெறுவர். ஒரு சிலர் பதவி உயர்வுகளை பெறுவர். மாணவர்களுக்கு கல்வித் தடைகள் விலகும். விவசாயிகள், வியாபாரிகள் உரிய இலாபம் பெறுவர்.

அதிஷ்ட நாள்: திங்கள்.
அதிஷ்ட இலக்கம்: 03.

### விருட்சிகம்:

(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை) குடும்பத்தில் சிறு பிரச்சனைகள் தோன்றி மறையும். பணவரவு சிறிது தடைப்படும். வெளியிட பிரயாணங்களில் கவனம் தேவை. உத்தியோகஸ்தர்களுக்கு மறைமுக எதிர்ப்புக்கள் தோன்றும். மாணவர்களுக்கு கல்விச் சிறப்பளிக்கும். விவசாயிகள் வியாபாரிகள் மத்திம இலாபமடைவர்.

அதிஷ்ட நாள்: செவ்வாய்.
அதிஷ்ட இலக்கம்: 05.

## கிரக நிலை

| | |
|---|---|
| துலாம் | - சூரியன், புதன் |
| தனு | - கேது |
| மகரம் | - செவ்வாய் |
| இடபம் | - சனி |
| மிதுனம் | - வியாழன், இராகு |
| கன்னி | - வெள்ளி |

சந்திரன், இடபம், மிதுனம், கர்க்கடகம் சிங்கம் இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார்.

### தனு:

(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்) மனக்கவலைகள் மறையும். பெரியோர் உதவியும், பொருள் வரவும் உண்டு. உத்தியோகஸ்தர்கள் எதிர்பார்த்த பதவி உயர்வுகள் வந்து சேரும். மாணவர்களுக்கு கல்வியில் உயர்ச்சியுண்டாகும். விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபமடைவர்.

அதிஷ்ட நாள்: புதன்.
அதிஷ்ட இலக்கம்: 04.

### மகரம்:

(உத்தராடத்து பின்முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை) தொழிலிலும், குடும்பத்திலும் ஏற்பட்டிருந்த பிரச்சனைகள் மறையும். பொருள்வரவு சிறந்து விளங்கும். உத்தியோகஸ்தர்கள் மேலதிகாரிகளுடன் இணைந்து நடப்பது நல்லது. மாணவர்களுக்கு கல்வியில் ஏற்பட்டிருந்த தடைகள் மறையும். விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபமடைவர்.

அதிஷ்ட நாள்: வெள்ளி.
அதிஷ்ட இலக்கம்: 06.

### கும்பம்:

(அவிட்டத்து பின்னரை, சதயம், பூரட்டாதி முன்முக்கால்,) தொழிலில் சிறிது பிரச்சனை உண்டாகும். பொருள் வரவில் முடங்கல் உண்டாகும். உத்தியோகத்தில் மேலதிகாரிகளின் ஆதரவுடன் சிலர் உயர்வுகளைப் பெறுவர். மாணவர்களுக்கு கல்வியில் உயர்ச்சியுண்டாகும். விவசாயிகள், வியாபாரிகள் உரிய இலாபமடைவர்.

அதிஷ்ட நாள்: திங்கள்.
அதிஷ்ட இலக்கம்: 01.

### மீனம்:

(பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி) மனக்கஷ்டங்கள் படிப்படியாக குறையும். பொருள்வரவு சுமாராக அமையும். உத்தியோகத்தில் இருந்து வந்த பிரச்சனைகள் மறையும். மாணவர்கள் கல்வியில் உயர்ச்சி பெறுவர். விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபமடைவர்.

அதிஷ்ட நாள்: வியாழன்.
அதிஷ்ட இலக்கம்: 05.

# இளமையாகத் தோன்றிட

## சில வழி முறைகள்



எப்போதும் இளமையாகத் தோன்ற வேண்டும் என்ற ஆசை பொதுவாக எல்லோருக்கும் உண்டு. அதிலும் அழகுணர்ச்சி அதிகமாக இருப்பதால் அந்த உணர்வு பெண்களுக்குச் சற்று அதிகமாகவே உண்டு.

இதற்குப் பயனளிக்கும் சில முறைகளைப் பின்பற்றுவது பலனளிக்கும் என்று மருத்துவ நிபுணர்கள் கூறுகின்றனர்.

⋆ உடலின் அழகுக்கு மனமே முதல் அடிப்படை. எனவே முதலில் மனதைக் கவனிக்க வேண்டும். எப்போதும் மகிழ்ச்சியாக இருப்பவர்கள் இளமையோடு காட்சியளிக்கிறார்கள். எனவே கவலைப்படுவதை விடுத்து மகிழ்ச்சியாக இருக்க வேண்டும்.

⋆ இளமையாக இருப்பதற்கு உடல் கட்டுக்கோப்பு அவசியம். இதற்கு உடற் பயிற்சிகள் அவசியம். வாரத்தில் 5 நாட்களாவது குறைந்தபட்சம் 15 நிமிடங்கள் உடற் பயிற்சி செய்ய வேண்டும்.

⋆ தினமும் குளிர்ந்த நீரில் குளிக்க வேண்டும்.

⋆ கொழுப்புக் குறைவான உணவுகளை உண்ண வேண்டும்.

⋆ கூடுமானவரை இயற்கையான பொருட்களைப் பயன்படுத்தி ஒப்பனை செய்து கொள்ள வேண்டும்.

⋆ தினமும் நிறையத் தண்ணீர் குடிக்க வேண்டும். கோப்பி, தேனீர் போன்றவற்றைத் தவிர்த்து இளநீர், பழச்சாறு வகைகளைப் பருக வேண்டும்.

⋆ உடல் அமைப்புக்கேற்ப உடை அணிய வேண்டும். இறுக்கமான உடைகளைத் தவிர்ப்பது நல்லது.

⋆ கடும் உழைப்புக்குப் பின் கட்டாயம் ஓய்வு தேவை. அது களைப்பைப் போக்கும்.

⋆ தினமும் அமைதியாக உறங்க வேண்டும். இயலுமானவரை இரவில் நீண்டநேரம் கண்விழிப்பதைத் தவிர்க்க வேண்டும்.

⋆ எப்போதும் கோபப்படவோ, உணர்ச்சிவசப்படவோ செய்யாதீர்கள். அது உங்கள் மனதை மட்டுமல்ல, உடலையும் பாதிக்கும்.

# சமையல் குறிப்புக்கள்

⋆ நறுக்கிய அப்பிள் நிறம் மாறிப் போகாமல் இருக்க சிறிது உப்புக் கலந்த நீரில் போட்டு வைத்தால் சுவையுடனும் அழகிய நிறத்துடனும் இருக்கும்.

⋆ தக்காளி சூப் செய்யப்போகிறீர்களா? தக்காளி சூப் செய்வதற்குரிய சாமான்களுடன் தோல் சீவி நறுக்கிய நான்கு துண்டு பீட்ரூட், நான்கு துண்டு காரட் ஆகியவற்றையும் போட்டுக் குழைய வேகவிட்டு மசித்து விட்டால் சூப் 'திக்'காக இருப்பதுடன் சுவையும் சத்தும் பல மடங்கு இருக்கும்.

⋆ கீரை வேகும்போது ஒரு சில துளிகள் எலுமிச்சம் பழச்சாற்றை அதில் விட்டால் கீரை பச்சை நிறத்துடன் இருக்கும்.

⋆ ரவைத் தோசை செய்வதற்கு முன், ரவையை வறுத்துக் கொண்டால், தோசை வார்க்கும்போது, கல்லில் ஒட்டிக் கோணல் மாணலாக ஆகாமல் அழகாக வரும்.

⋆ தயிர் புளிக்காமல் இருக்க வேண்டுமா? ஒரு தேங்காய்த்துண்டை நறுக்கி அதில் போட்டு வைத்தால் போதும்.

# பட்டுச் சேலை பரிசுப் போட்டி

**மகளிர் மட்டும் ● மகளிர் மட்டும்**



☆ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே பட்டுச்சேலை பரிசு வழங்கப்படும்.

☆ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.
(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

☆ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

**வாரம் ஒரு பட்டுச் சேலை** KI

பெயர்:..............................

முகவரி:..............................

..............................

தொழில்:..............................

கையொப்பம்:..............................

**உண்மை – நேர்மை – வெளிப்படைத் தன்மை**

பி.கு:
அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப்படுகிறவர்கள் தமது புகைப் படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

**கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 10-11-2001**

அனுப்பவேண்டிய முகவரி:- 'வாரம் ஒரு பட்டுச்சேலை', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.

## இந்த வாரம் யாருக்கு பட்டுச்சேலை? தலவாக்கல்ல வாசகிக்கு அதிஷ்டம்!

**இவ்வாரம் பட்டுச்சேலை பரிசுபெறும் வாசகி இவர்தான்** ☞ **ஜே.கிரிஸ்டினா**
லோகி தோட்டம், தலவாக்கல்ல.

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக, வாசகியர் சார்பில் வாழ்த்துவோம்.
அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?!
இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.

---

# அனிதாவின் காதல்கள் 17



## நவீன எழுத்துலக வேந்தன் சுஜாதா

“உங்க அம்மாவா! அக்கா போல இருக்காங்க” என்றாள் மது.

வைரவன் அவர்கள் எதிரே உட்கார்ந்து “சொல்லுங்க, எப்படி இருக்கீங்க?” என்றான்.

“நாங்க கம்ப்ளெயிண்ட் பண்ண வந்தோம்.”

“என்ன கம்ப்ளெயிண்ட்?”

“மறந்து போச்சு!”

“போஸ்டர்” என்றாள் அனிதா.

“எங்க காலேஜ் காம்பௌண்ட்டுக்கு வெளியில 'அனிதா ஐ லவ் யூ'ன்னு பெரிய போஸ்டர். நீங்கதான் ஒட்ட வெச்சீங்களா?”

“போஸ்டரா?” என்றான். மிகுந்த அறியாமையுடன். அப்போது அபி உள்ளே வர, வைரவன் “மது நீங்க எம்.டி.வி. பார்க்கறீங்களா? அபி, மது ஆன்ட்டியைக் கூட்டிட்டுப் போய் எம்.டி.வி. காட்டு” என்றான்.

மது “ஒரு கோடிட்டுக் காட்டினா போதும்... நான் புரிஞ்சுக்குவேன்...” என்று அபியின் பின் செல்ல, அனிதாவும் வைரவனும் தனியாக இருந்தார்கள்.

“அப்பாடா! உன்னைத் தனியா சிக்க வைக்க அரும்பாடு! போஸ்டர் ஒட்டினது நான்தான். வேளச்சேரில் ஆப்செட் பிரஸ் இருக்குது எங்களுக்கு. சும்மா தமாஷுக்கு...”

அனிதா மௌனமாக இருக்க..

“பிடிச்சிருந்ததா?”

“என்ன இந்த மாதிரியெல்லாம் பண்றீங்க?”

“எந்த மாதிரி?”

“சுரேஷ் 'கல்யாணம் வேண்டாம்'னு சொல்லிட்டார். நீங்கதான் அந்த மாதிரி சொல்ல வெச்சீங்களா?”

“சுரேஷ் யாரு?”

“அதான், என்னைப் பெண் பார்க்க வந்தவர்!”

“ஓ எஸ். சுரேஷ்! இப்ப ஞாபகம் வருது. பயோடேட்டா கெடைச்சுது. அமெரிக்காவில் எங்க ஸாஃப்ட்வேர் கம்பெனியில் ஒரு ஸ்வீடிஷ் காண்ட்ராக்ட் கெடைச்சிருக்கு. அதை எடுத்துப்பியான்னு கேட்டோம். சந்தோஷமா வந்துட்டான். அந்த சுரேஷா?”

அனிதா அவனை நிமிர்ந்து பார்த்தாள். “உங்களுக்கு என்ன வேணும்?”

“நீ! இப்ப, இந்த செகண்ட் உன்னைக் கல்யாணம் பண்ணிக்கத் தயாரா இருக்கேன். ரிஜிஸ்ட்ரார் ஆபீஸ் திறக்காட்டாலும் சரி... கார் அனுப்பிச்சு...”

“நான் இப்ப கல்யாணம் பண்ணிக்கறதாவே இல்லை.”

“மேல படிக்கணும், அவ்வளவுதானே! செய்யி... என்ன வேணா செய்யி. அனிதா ஐ நீட் யு...ஐ வாண்ட் யு. உன்னை நான் கல்யாணம் செய்யணும் அவ்வளவுதான். மேற்கொண்டு பேச்சு கிடையாது..”

“எங்க அப்பா அம்மா சம்மதிக்கவே மாட்டாங்க.”

“அதெல்லாம் நான் பார்த்துக்கறேன். உங்கப்பாவைச் சந்திச்சேன். ரிமார்கபிள் மேன் மகாதேவன். அவர் ஒத்துப்பாரு. அது என் ப்ராப்ளம்... நீ சொல் அனிதா.”

“எதுக்காக என்னை இப்படி விடாப்பிடியா துரத்தறீங்க?”

“சொன்னனே... நீதான் என் மனைவி. இதைவிட க்ளியரா சொல்ல முடியுமா?”

“அதுக்கு நான் இஷ்டப்பட வேண்டாமா?”

“கட்டாயம். இஷ்டமா... சொல்லு!”

“என்னால இப்ப சொல்ல முடியாது.”

“பத்து நிமிஷம் கழிச்சு சொல்லு. அய், கொஞ்சம் சிரிச்சாச்சு! அனிதா. நான் ஏன் உன்னை இத்தனை தூரம் விரும்பறேன்னு கல்யாணம் ஆனப்புறம் விவரமா சொல்றேன். என்னை நீ கல்யாணம் பண்ணிப்பியா?”

“உங்களை எனக்குத் தெரியவே தெரியாதே... நீங்க எப்படிப்பட்டவர்னு?”

“மைகாட்! இத்தனை நாள்ல நான் எப்படிப்பட்டவன்னு தெரியலை... தெரியலை?”

“தெரியறது, பயமா இருக்கு!”

“என்ன பயம்?”

“எல்லாத்தையும் விலைக்கு வாங்கிடுவீங்கன்னு.”

அவன் இயல்பாகச் சிரித்து, “கரெக்ட்! ஆனா, ஒண்ணை மட்டும் விலை கொடுத்து வாங்க முடியாது... அன்பு! அனிதா, நான் உன்னை மோட்டார் சைக்கிள் விபத்துல சந்திச்சது என் வாழ்க்கையில மகத்தான திருப்பம். ஏதோ குருட்டு அதிர்ஷ்டமோ விதியோ எனக்கு எது கேட்டாலும் கிடைக்கறது. நான் நினைச்சா...” என்றவன், மேஜை மேல் இருந்த பம்பாய் சினிமா பத்திரிகையின் அட்டைப்படத்தைக் காட்டி, “இவளைக் கல்யாணம் பண்ணிக்க முடியும். காத்துக்கிட்டிருக்கா” என்றான்.

“அதான் எனக்கும் ஆச்சரியமா இருக்கு!”

“இத்தனை உள்ள நான் உன்னை ஏன் துரத்தறேன்னு ஆச்சரியம், அதானே?”

“ஆமாம்” என்றாள்.

“காரணம் இருக்கு அனிதா. ஆனா, அது உனக்குச் சொன்னா புரியாது” என்றான் வைரவன்.

★★★

திரும்பச் செல்லும்போது மது, அனிதாவைக் கேள்விகளால் துளைத்தாள்:

“என்னடி, கல்யாணத்துக்கு ப்ரொபோஸ் பண்ணிட்டாரா..?”

“நீ என்ன சொல்றே?”

“அய்... தெரியாத மாதிரி! ரொம்ப டீப்பான பொண்ணும்மா நீ! எங்க எல்லாரையும் முட்டாளடிச்சிருக்கே...”

“மது- நீ என்ன சொல்றேன்னே-”

“ஆல்ரைட்... எதுக்கு அந்தப் பேச்செல்லாம்? கேட்ட கேள்விக்கும் பதில் சொல்லு. வைரவன் என்ன சொன்னார்... 'நான் உன்னை லவ் பண்றேன்'னு சொன்னாரா?”

“அந்த மாதிரிதான் ஏதோ சொன்னார்...”

“கல்யாணம் பண்ணிக்கிறியா?'ன்னு கேட்டாரா?”

“நான் படிக்கணும்னேன்-”

“'படியேன்... அதுக்கும் இதுக்கும் என்ன சம்பந்தம்?'னார் இல்லையா..?”

“யோசிச்சு சொல்லணும்னேன். எத்தனை நிமிஷம்னு கேட்டார். அவருக்கு லைஃப்ல எல்லாமே நிமிஷக்கணக்குலதான் போலிருக்கு.. எனக்கு ரொம்பப் பயமா இருக்கு மது..”

“என்ன பயம்?”

“என்னவோ உள்ளுக்குள்ள... நாம ஒரு கவிதை படிச்சோமே.. அது போல... 'அந்தப் பறவை சூரியனுக்கு ஆசைப்பட்டு அதை நோக்கிப் பறந்து இறக்கையை எரிச்சுக்கறதா...”

“இந்த கேஸ்ல சூரியன் தானே பறவைக்கு ஆசைப்படுது?”

“ரெண்டும் ஒண்ணுதானே?”

“அப்படில்லாம் நினைக்காதே அனி.. நீ ரொம்ப லக்கி. அவ்வளவுதான். என்னவோ உன்னைப் பார்த்തதுமே அவருக்குப் பிடிச்சுப் போயிருச்சு. அவருக்காக பாம்பே ஃபிலிம்ஸ் ஸ்டார்ங்கள்லாம் காத்துக்கிட்டிருக்காங்க. உங்க ஜாதியில பெரிய பெரிய குடும்பங்கள்லாம் இருக்கு பாரு... அவங்ககூட பெண் கொடுக்கத் தயாரா இருக்கறப்ப ஒரு சாதாரண குடும்பத்தில வந்த உன்னை அத்தனை விரும்பறார்னா... ரியலி கிர்ர்ரேட்”

அனிதா மௌனமாக வந்தாள்.

“நீ என்ன சொன்னே கடைசியா?”

“அப்பா அம்மா சம்மதிக்க மாட்டாங்கன்னேன். அதற்கு அவர் அதெல்லாம் நான் பார்த்துக்கறேன்... நோ ப்ராப்ளம்.. நோ ப்ராப்ளம். எதை எடுத்தாலும் அவருக்கு 'நோ ப்ராப்ளம்' தான்! அப்பறம் அவர் பார்க்கிற பார்வை... அதான் ஒரு மாதிரி, 'உன்னை அப்படியே கொண்டா, கொண்டா. உன் மனசுக்குள்ள இருக்கறதையெல்லாம் வெளியக் கொண்டா'ன்னு துழாவற பாதாளக் கரண்டி மாதிரி பார்வை.. ஏதோ அகழ்வாராய்ச்சி மாதிரி...”

“துழாவறது... அகழ்வாராச்சி... நீ தமிழ் பேச ஆரம்பிச்சுட்டே! ஆளை விடு சகோதரி... மத்தபடி நீ வேண்டாம்னு சொல்லிராதே... உம் பேர் சொல்லிக் கிட்டுத்தான் அவர் மாருதியை நான் ஒட்டிக்கிட்டிருக்கேன். ஒரு ஏ.ஸி. இருந்தா நல்லா இருக்கும்!”

“மது, அவர் எங்கப்பாக்கிட்ட வந்து என்னைப் பெண் கேட்கப் போறார்... அப்பதான் இருக்கு வெடி விபத்து...”

“பார்த்துக்கிட்டே இரு.. ஏதும் ஆகாது. கப்சிப்புன்னு உங்கப்பாவை ஒப்புக்க வைப்பாரு அந்தாளு. அப்படிப் பட்ட ஆளு! பனிக்கரடிக்கிட்டயே ரெஃப்ரிஜிரேட்டர் வித்துருவார். ஆவின் புத்காரருக்கே பால் பாக்கெட் வித்துவாரு” என்று மது சிரித்தாள்.



ஒரு வாரம் 'கம்பைன் ஸ்டடி' பண்ண மதுவுடன் ஹாஸ்டலிலேயே தங்கினாள். வாசலில் எப்போதும் கார் காத்திருந்தது. இதுவே சக மாணவிகளுக்கு ஒரு கேலியாகி விட்டது.

“அனிதா, தேர் வந்துருச்சு.. ராஜகுமாரன் அனுப்பிச்சிருக்கார். பச்சை யூனிஃபார்ம் பாகனோட!”

“அனிதா கல்யாணத்துக்கு வேளச்சேரி முழுக்க பந்தல் போட்டிடுவார் பாரு வைரவன்” என்றெல்லாம் அந்த மாணவிகள் பேசும்போது கோபம்தான் வந்தது.

அந்த வாரம் வீட்டில் புதிய காலண்டர்கள் தோன்றின. பளபளவென்று வி.வி.எல்.இண்டஸ்ட்ரீஸ், ஸ்ரீலதா இண்டர்நேஷனல், வைரவன் க்ரானைட்ஸ் என்று.

“ஜிம்ப.. இதெல்லாம் யார் கொடுத்தா?”

“ஏன்.. எங்க ஆபீஸ்லதான்!”

“என்னது, இப்ப நீ ஆபீஸ் போறியா?”

“ஆமா. வி.வி.எல்.இண்டஸ்ரீஸ்ல மானேஜ்மெண்ட் ட்ரெய்னியா எடுத்துண்டிருக்கா. க்ரானைட்ல போடலாமா... ஒட்டல்ல போடலாமான்னு இன்னும் போஸ்டிங் ஆகலை எனக்கு”

“ஜிம்பு... நீ இன்னும் படிச்சு முடிக்கலை.”

“படிச்சது போதும்னு சொல்லிட்டா.. இன்டர்வியூல அப்ஜெக்டிவ் டெஸ்ட்டா இருந்தது. சீதாகூட எழுதிருக்கான்.”

அம்மா பெருமையுடன் “அவாவா டபுள் எம்.ஏ.எல்லாம் படிச்சு வேலை கிடைக்காம தவிக்கிறப்ப, நம்ம ஜிம்ப பாரு... ஒரே ஒரு இண்டர்வியுதான் போனான்.. அதிர்ஷ்டம்!”

“ஐயோ அம்மா!” என்றாள் அனிதா.

“என்ன இருந்தாலும் வைரவன் வைரவன்தான்” என்றான் ஜிம்ப.

“அனி... எத்தனை கார் இருக்கு தெரியுமா எங்க எம்.டி.கிட்ட?”

“தெரியும்” என்றாள்.

அப்பாகூட அந்த காலண்டரைத் தாள் தாளாக ஆராய்ந்தபடி, “என்ன பெரிய மனுஷன் தெரியுமா அவன்?” என்று பேசிக்கொண்டிருந்தார்.

[அனிதா வருவாள்...]

பாப்பா முரசு சிறுகதை

# யூதர்களின் விடுமுறை நாள்

**ச**ர்வாதிகாரி என்றாலே உடனே நம் நினைவிற்கு வருபவர் ஜெர்மனியை ஆண்ட அடோல்ப் ஹிட்லர் தான்.

'ஐந்து லட்சத்திற்கும் மேற்பட்ட அப்பாவி யூதர்களைக் கொன்ற கொலைகாரன்', என்று ஹிட்லரை வர்ணிக்கிறது உலக வரலாறு.

இந்த ஹிட்லருக்கு, ஒரு சமயம், தன் ஆயுள் பற்றி தெரிந்து கொள்ள வேண்டும் என்ற எண்ணம் பிறந்தது.

தனது லட்சியத்தை அடைவதற்கு முன், தான் இறந்து விட்டால் என்ன செய்வது என்ற பயம் தான் அவரது எண்ணத்திற்குக் காரணமாக இருந்தது.

ஆகவே, தன் ஆயுள் பற்றி தெரிந்து கொள்ளும் பொருட்டு, நகரின் தலைசிறந்த சோதிடர் ஒருவரைத் தன் இருப்பிடத்திற்கு வரவழைத்தார்.

"சோதிடரே நான் எப்போது இறப்பேன் என்று தெரிய வேண்டும்!" என்று கேட்டார்.

புருவத்தைச் சுருக்கி அவரை வினோதமாகப் பார்த்த சோதிடர், அவரது பிறந்த நாள் குறிப்பு, ஜாதகம், நாள், நட்சத்திரம் போன்றவற்றை வரவழைத்து தீவிரமாக ஆராய்ந்தார்.



நீண்ட நேரம் ஆராய்ந்து விட்டு நிமிர்ந்த சோதிடர், "யூதர்களின் விடுமுறை நாளன்று நீங்கள் இறந்து போவீர்கள்!" என்றார்.

அதைக் கேட்டதும் ஹிட்லரின் கண்கள் சிவந்தன. மூக்கு விடைத்தது. காதுகள் 'ஜிவ்வ்வ்வ்வ்'வென்று விரிந்து சுருங்கின. குட்டி மீசை கூடத் துடித்தது.

வெட்டு ஒன்று, துண்டு இரண்டு என்கிற ரீதியில் சோதிடரைப் பார்த்த ஹிட்லர், "அந்த நாள் எப்போது வரும்?" என்று கேட்டார்.

அந்த சிம்ம கர்ஜனையைக் கேட்டு ஒரு கணம் ஆடிப்போன சோதிடருக்கு, உடனே புரிந்து விட்டது.


உண்மையைச் சொன்னால், அடுத்த கணமே தன் தலை, தன் உடம்பில் இருக்காது என்று திட்டவட்டமாய்த் தெரிந்து கொண்ட சோதிடர், தன் தலையைக் காத்துக்கொள்ள, என்ன பதிலைச் சொல்லலாம் என்று யோசித்தார்.


'சட்'டென்று அவருக்கு ஒரு யோசனை தோன்றியது.

"நீங்கள் என்று இறப்பீர்களோ, அன்று தான் யூதர்களின் விடுமுறை நாள் வரும்!" என்றார் சோதிடர் திடுக்.. திடுக்.. இதயத்தோடு.

"ஆ! அதுதானே பார்த்தேன். இந்த இரும்பு மனிதனான என்னையாவது, யூதர்களின் அழிவிற்கு முன்மரணம் நெருங்குவதாவது!" என்று சொல்லி தனது குட்டி மீசையை ஹிட்லர் தடவிய போது-


சொன்ன பதிலையே, மிகவும் சமயோசிதமாக வேறுவிதமாகச் சொல்லி, ஹிட்லரிடமிருந்து தன் தலையைக் காப்பற்றிக் கொண்ட சோதிடர், விட்டால் போதுமென்று ஓட்டம் எடுத்தார்.





1முதல் 40 வரையான புள்ளிகளை இணைத்து மறைந்திருப்பது என்னவென்று கண்டுபிடியுங்கள்.

## சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறநத வாணம ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி **10.11.2001**.


வர்ணம் தீட்டும் போட்டி இல: **419**
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

### வர்ணம் தீட்டும் போட்டி இல: 417

பரிசுக்குரியவர்:
மதுரன் சிவராஜா,
றோயல் கல்லூரி, கொழும்பு.

பாராட்டுக்குரியவர்கள்:

| | |
|---|---|
| ச.காயத்திரி, நல்லாயன் அரசினர் தமிழ் ம.வி., கொழு.-13. | கிறிஸ்டோ பெர்னான்டோ, சகிரா மகா வித்தியாலயம், அநுராதபுரம். |
| எம். யுவணி, றோயல் ஆங்கில பாடசாலை,மாத்தளை. | என். சமீனா, இரஜவல தமிழ் தேசிய கல்லூரி,திகன. |
| பி.சனுஜா, ஐலன்ஸ் மத்திய கல்லூரி, அட்டன். | ஏ. சேம்போல், கதிரேசன் கனிஸ்ட வித்.,நாவலப்பிட்டி. |
| எம். அர்ஜுன், சித்துல்முல்லை தமிழ் வித்தியாலயம்,கலகா. | சு. சத்தியதர்ஷன், சரஸ்வதி கனிஷ்ட வித்தியாலயம், பதுளை. |
| சனோஜ் ஸ்ரீநாத், திருத்துவ கல்லூரி, கண்டி. | செல்லையா கண்ணபிரான், சென்.ஜோசப் தமிழ் மகா வித்.,மஸ்கெலியா. |



## விலங்குகளின் பாசம்



**ப**றவைகளுக்கும் விலங்குகளுக்கும் பற்றுப்பாசம் அதிகம். பறவைகளில் குறிப்பாக புறா, கீஸ் வாத்து, நாரை, ஹோர்ன்பில் பறவைகள் தங்களது ஜோடியின் மீது மிகுந்த பாசம் கொண்டவை. ஹோர்ன்பில் பறவையில் ஆண்பறவை செத்துவிட்டால், பெண்பறவை உடனே தற்கொலை செய்து கொள்கிறது. அதே போல் பெண்பறவை செத்தால், ஆண்பறவையும் தன்னைப் பலியிட்டுக் கொள்கிறது.



**யா**னைக் கூட்டத்திலும் பாசத்திற்குக் குறைவில்லை. ஒரு குட்டி யானை தன் தாயை இழந்துவிட்டால், அந்தக்குட்டியை யானைக் கூட்டத்தில் இருக்கும் இன்னொரு பெண்யானை தத்து எடுத்துக் கொள்கிறது. அதன்பிறகு குட்டியானையை முழுவதுமாகப் பராமரிக்கும் பொறுப்பு வளர்ப்புத் தாய் யானைக்கே.



**த**னக்கு ஏதாவது ஓர் ஆபத்து என்றால் டொல்பின் உடனடியாக, விசில் அடிப்பதுபோல், தண்ணீருக்குள் குரல் எழுப்பித் தன் சக மீன்களை உதவிக்கு அழைக்கும். காயமடைந்த மீனையோ ஆபத்தில் சிக்கிக் கொண்ட மீனையோ, மற்ற டொல்பின் மீன்கள் பத்திரமாக மீட்டு பாதுகாப்பான பகுதிக்கு அழைத்துச் சென்றுவிடுகின்றது. காயமடைந்த டொல்பின் மீனை மற்ற டொல்பின்கள் பல நாட்கள் பாதுகாப்புடனும் பரிவுடனும் கவனித்துக் கொள்கின்றன.

## புத்திசாலிப் பறவை

'**கூட்**' என்றழைக்கப்படும் ஒருவகை நீர்ப்பறவை மிகவும் புத்திசாலியானது. இப்பறவை ஆறு, குளம், ஏரி, போன்ற நீர் நிலைகளின் கரையோரத்தில் கூடு கட்டி வாழும். நீர்த்தாவரமான நாணல் போன்ற ஒருவகைப் புல்லினால் தான் தன் கூட்டை அமைக்கும்.

கோடைகாலத்தில் இத்தாவரம் அவ்வளவாக வளராது. அந்த சமயத்தில் புதிய கூடு கட்ட முடியாமல் தவிக்க நேரிடுமே என்று நீர்த்தாவரம் நிறைய வளர்ந்திருக்கும் அந்த இடத்தைச் சுற்றி 3.6 கிலோ மீட்டர் சுற்றளவுக்கு 90 சென்டி மீட்டர் உயரத்திற்குச் சிறு கற்களை முக்கோண அமைப்பில் பிரமிட் போல் அமைத்துக்கொள்ளும்.

கோடை காலத்தில் அத்தாவரம் காய்ந்து போனாலும் அரண் போன்ற அந்த கற்கூட்டைக் கூடாகப் பயன்படுத்திக்கொள்ளும்.

# ரசிகன்

இன்றோடு எட்டு நாட்கள் கடந்துவிட்டன நான் இந்த அறைக்குள் குடிவந்து. எட்டு நாட்களுக்கு முன்பு எனது ஊரில்... எனது சொந்த வீட்டில்.. எனக்கேயுரிய அறையில்... ஆனாலும் காலத்தின் கட்டாயத்தால் இலிகிதராகக் கடமையாற்றிக்கொண்டிருக்கும் நான் இடமாற்றம் பெற்று இங்கு வந்து, இப்போது ஒன்பதாவது நாளாக எனது இந்த அறைவாசம் தொடர்கிறது.

சன நெருக்கடி குறைந்த, ஆனால் சுத்தமான... சுகந்தமான... காற்றினைத் தந்துகொண்டிருக்கும் பகுதியாக அது இருந்தது. எனது அறையின் ஜன்னலினைத் திறந்துவிட்டால் கண்களுக்குத் தெரிவதெல்லாம் பசுமைதான். ஒரு கவிஞன் அல்லது கலைஞன் இந்த அறைக்குள் இருந்திருந்தால் நிலையே வேறு.

அன்று... அது அந்திசாய்ந்த பொழுதாக இருக்கவே அறை ஜன்னலினைத் திறந்துவிட்டு பசுமையின் பேரெழிலை எனக்கேயுரிய பாணியில் அனுபவித்துக் கொண்டிருந்தேன். திடீரென சுகந்தத்தோடு சுகந்தமாய் ஒரு பெண்குரல் பாடல் எனது காதுகளுக்குள் ஆர்ப்பாட்டமாய் வந்து இறங்கியது. அமைதியாக, அனுபவித்துப் பாடும் பாடல் அது. நிச்சயமாக அது இசைக்கச்சேரியில் பாடப்பட்டுக் கொண்டிருப்பதாகவோ அல்லது வானொலியிலிருந்து வரும் பாடலாகவோ எனக்குத் தெரியவில்லை. ஒரு பெண் சாதாரணமாகப் பாடிக்கொண்டிருப்பதாகவே எனக்குப்பட்டது.

அந்தக் குரலின் அதீத இனிமையும், பாடப்படும் விதமும் என்னைக் கவர்ந்திழுக்கவே அவசரமாக எழுந்து ஜன்னல் அருகில் சென்று அதன் கம்பிகளிலே முகத்தைப் புதைத்துக்கொண்டு பாடல் வரும் திசையை நோட்டமிட்டேன். எனக்கு இன்னும் இந்த இடம் பரிச்சயப்படாத காரணத்தினாலும், கடந்த எட்டு நாட்களிலும் இப்படியொரு பாட்டுச் சத்தம் கேட்காத காரணத்தினாலும் என்னால் எதையும் சரியாக அனுமானித்துக்கொள்ள முடியவில்லை. இருந்தாலும் உற்று அவதானித்ததில் எனது அறைக்குச் சாய்வான பக்கமிருந்த வீட்டின் கண்ணாடி ஜன்னல் பொருத்தப்பட்ட அறைக்குள் எரிந்து கொண்டிருந்த மின்குமிழ் வெளிச்சத்தில் ஒரு நிழலுருவம் தெரிந்தது. அது ஒரு பெண்ணின் உருவம் என்பதும், அதன் அசைவுகளைப் பார்ப்பின் பாடிக்கொண்டிருப்பது அவள்தான் என்பதாகவும் நான் உணர்ந்தேன்.

இந்த நேரத்தில் எனது மனதுக்குள் ஒரு ஆசை. அது சரியா? தவறா? முறையா? என்பதைப் பற்றியெல்லாம் சிந்திக்காமல் வந்த ஆசை. என்னவென்றால் இவ் அதீத இனிமையான குரல்கொண்ட அப்பெண்ணைச் சந்தித்து நேரடியாக எனது பாராட்டைத் தெரிவிக்க வேண்டும். முடிந்தால் அப்பெண்ணை எனது வாழ்க்கைத் துணையாக ஆக்கிக்கொள்ள வேண்டும். குரலின் இனிமையே இவ்வாறிருந்தால்... அப்பப்பா... அவள் அழகைப்



பற்றிக் கேட்கவா வேண்டும்? ஆகவே முடிந்தால்.. ஐயய்யோ...!! என்ன... முடிந்தால்...? எப்படியாவது அவளை எனது பக்கம் ஈர்த்து எனது மனைவி ஆக்கியே தீருவது... என்ற உறுதியான எண்ணம் கொண்டுவிட்டேன். இது சிலவேளைகளில் உங்களுக்கு பைத்தியக்காரத்தனமாகவும் தோன்றலாம். ஆனாலும் அதுதான் யதார்த்தம்.

உடனடியாகவே நான் காரியத்தில் இறங்கினேன். அறையை விட்டு வெளியே வந்த நான் மெல்ல மெல்ல வெளிச்சம் தெரிந்த அவ்வீட்டை நோக்கி நடக்கலானேன். அதற்கு அப்பகுதி வெளிப்புற இருள் எனக்கு உதவி செய்தது. ஆனாலும் மனம் அமைதிகொள்ளாமல் அங்கும் இங்கும் திரும்பிப் பார்க்க வைத்தது. எப்படியோ அந்த வீட்டை அடைந்துவிட்டேன். நிஜமாகவே பாடல் அவ்வீட்டிலிருந்துதான் வந்துகொண்டிருந்தது. வீட்டை நெருங்கிய நான், கதவினைத் தட்டுவதற்குக் கையை எடுத்தேன்.

"அதுசரி கதவினைத் தட்டிவிட்டு அப்பெண் வந்தால் என்ன சொல்வது?" கூடவே அதற்கான பதிலும் மனதிலிருந்து உதித்தது. எனது அறையில் ஃபியூஸ் போய்விட்டது போலவும், அதற்காக விளக்கு ஒன்றைப் பெற்றுக்கொள்வதற்காக வந்தது போலவும் சொல்லிச் சமாளித்துக்கொள்ளலாம். அவ்வெண்ணம் சரியெனப் படவே கதவை இரண்டு தடவைகள் தட்டினேன். அதுவரை கேட்டுக்கொண்டிருந்த பாடல் நின்றது; சில விநாடிகளில் மெல்லத் திறந்தது கதவு. யாரும் வெளியே வரவில்லை; ஆனால் குரல் மட்டும் வந்தது.

"யாரது...?" ஆஹா... என்ன இனிமை..! என்ன இனிமை...!!

"அ... அது... நான்தான்" என்னைப் பற்றிய சிறு அறிமுகத்தை அந்த அறியா முகத்திற்குச் செய்தேன்.

"என்ன... வேணும்..?" ஏற்கனவே எனது எண்ணத்தில் சேமித்து வைத்திருந்த பொய்யைச் சொன்னேன். சற்றுநேர இடைவெளி... கதவு முன்னதைவிடச் சற்று அகல விரிந்தது. ஆனாலும் கைமட்டுமே வெளியே வந்து ஒரு டோர்ச்சை நீட்டியது. அப்பா..!! என்ன வெண்மையான கை.. நடுங்கும் கரத்துடன் வாங்கிக் கொண்டே... "ரொம்ப நல்லா இருந்திச்சி" என்றேன்.

"எது?"

"ஒங்க பாட்டு"

"கேட்டீங்களா...?"

"பொதுவா சொல்லப்போனா என்னை இங்க கூட்டிகிட்டு வந்ததே ஒங்க பாட்டுத்தான்"

"அப்ப விளக்கு..?"

"ஐயோ...!! விளக்கும்தான்... அத்தோட ஒங்க பாட்டும்..."

"சரி போய் ஒங்கட வேலையை முடிங்க" சொல்லியவாறே கதவினை மூட முயற்சித்தபோது... "அ...கொஞ்சம் பொறுங்க.." தொண்டையைச் செருமிக் கொண்டு சற்றே தைரியத்தையும் வரவழைத்துக்கொண்டு எனது மனதில் எழுந்திருந்த உண்மையான நிலையினை எடுத்துக்கூறத் தொடங்கினேன்.

"மிஸ்... உண்மையிலேயே நான் இங்கு வந்தது ஒங்க பாட்டைக் கேட்டுவிட்டு ஒங்கள நேரடியாப் பார்க்கத்தான். இந்த விளக்குச் சமாச்சாரம் எல்லாமே பொய். ஒங்கட பாட்டோட இனிமையை நான் மனம்விட்டு ரொம்பவே ரசிச்சேன். அத்தோட இந்த இனிமையான குரல் எப்பவும் என்னோட இருக்கவேணும் எண்டு மிச்சம் ஆசைப்படுறேன். அதனால நீ..நீங்க விரும்பினா... ஒங்கள நான் கலியாணம் செஞ்சுக்க நினைக்கிறேன். என்னடா நேத்து வந்தவன் இப்படிக் கேக்கிறானே எண்டு நினைக்காதீங்க. என் உள்மனசில் பட்டதைத்தான் சொல்றேன். நீங்க என்ன சொல்றீங்க..?" அதற்குமேல் எதுவும் சொல்ல முடியாமல் பயத்தினால் தொண்டை வரண்டது.

"சரி.. நான் ஒங்கள கலியாணம் செஞ்சுக்க சம்மதிக்கிறேன். நீங்க சொல்றத நான் எப்படி நம்புவது..?" கதவு மறைவிலிருந்து வந்த பதில் பழம் நழுவிப் பாலில் விழுந்து அதுவும் நழுவி வாயில் விழுந்த கதைபோல் இருந்தது எனக்கு.

"நி..நிச்சயமா நீங்க நம்பலாம். உங்களோட ரசிகனா ஆயுள் முழுதும் இருக்கும் பாக்கியம் இதனாலே எனக்குக் கிடைக்குமல்லவா?"

கதவு முற்றுமுழுதும் திறந்தது. ஆவலாய் நிமிர்ந்து பார்த்த நான் ஏகமாய் அதிர்ந்தேன். அந்த நிமிடம்வரை கட்டியிருந்த எனது மணல்கோட்டை தரைமட்டமானது. அப்பெண்ணின் முகத்தில் ஒரு பகுதி தீச்சுட்டுக் கருகியதுபோல,

## அமானுல்லாஹ் ஏ.மஜீத்-மருதமுனை-03

பார்ப்பதற்கு மிகவும் விகாரமாய்க் காட்சியளித்தது. "ஆண்டவனே..! இப்பெண்ணுக்குக் குரலில் அழகைக் கொடுத்து உருவ அழகைப் பறித்துக்கொண்டாயே..!" எனது உள்மனம் அவளுக்காக அழுதது. அவள் இவ்வளவு நேரமும் மறைந்திருந்தே பேசிய தன் அர்த்தமும் எனக்குப் புரிந்தது.

ஆடிப்போய் நின்ற என்னை மீண்டும் அவள் குரலே நிலைக்குவரச் செய்தது. "என்னடா.. அநியாயமா வாயைக் கொடுத்து இப்படி மாட்டிக்கொண்டோமே.. எண்டு யோசிக்கிறீங்களா..? பரவாயில்லை எனக்கு இது புதிசுமில்லே குரலில் இனிமையைத் தந்த ஆண்டவன் எனக்கு அழகைத் தரலியே எண்டு நீங்க நினைக்கலாம். ஆனா.. பெரிய அழகியா இல்லாட்டியும் ஓரளவு அழகாகத்தான் நான் இருந்தேன். விதி.. ஒரு தீ விபத்திலே இப்படியாகிப் போச்சு. அதுக்குப் பிறகு என் வாழ்க்கையே இப்படி மறைவிலதான் போகுது.

என் குரலை மட்டும் கேட்டு... என்னை கலியாணம் செஞ்சுக்க ஆசைப்பட்டு, உருவத்தக் கண்டு குரல் மட்டும் நல்லாயிருந்தாப் போதாது, ஆளும் அழகாக இருக்கவேணும் எண்டு விலகிப்போனவங்க நிறையப்பேர்.. இ..இப்போ... நீங்ககூட என் குரலை ரசிச்சுத்தான் என்கிட்ட வந்திருக்கிறதாச் சொல்றீங்க.. தயவுசெஞ்சு நீங்களாவது கொடுத்த வாக்கைக் காப்பாத்துவீங்களா...? என்னைக் கலியாணம் செஞ்சுக்குவீங்களா..?" கேட்டவாறே நான் எதிர்பார்க்காத வகையில் என் கையைப் பிடித்து கொண்டே தலைகுனிந்து நின்றிருந்த அப்பெண்ணின் கையை நல்லதொரு தீர்மானத்தோடு எனது கை சற்று அழுத்தமாகப் பிடிக்கவே... அதனுடைய முழு அர்த்தத்தையும் புரிந்து கொண்ட அப்பெண் என்னை நிமிர்ந்து பார்த்தாள். அவள் மனம் நிறைந்திருந்த சந்தோஷத்தின் வெளிப்பாடு கண்களிலிருந்து ஆனந்தக் கண்ணீராய் வழிந்து கொண்டிருந்தது. ■

# உண்மைக் காதல் தோற்பதில்லை!

வழக்கமாக அவள் பயணம் செய்யும் பேருந்தில் நானும் பயணம் செய்வேன், அவளுடைய கண்கள் என்னைப் பார்த்து ஆயிரம் கதைபேசும், அவள் யார் எங்கிருக்கின்றாள் எங்கு செல்கின்றாள் என்பதெல்லாம் எனக்குத் தெரியாது, காரணம் எனது வீட்டிற்கும் அலுவலகத்திற்கும் இடைப்பட்ட தூரம் ஐந்து கிலோ மீட்டர்தான், நான் வீட்டிலிருந்து பஸ்சில் ஏறும்போது அவள் எங்கோ ஒரு தொலை தூரத்திலிருந்து வந்துகொண்டிருப்பாள், நான் எனது அலுவலகத்தில் இறங்கிவிடுவேன். ஆனால் அவள் எனது அலுவலகத்திற்கும் அப்பால் பயணித்துக் கொண்டிருப்பாள், மீண்டும் மாலைவேளை நான் பஸ்சில் ஏறும்போது அவள் அந்த பஸ்வண்டிக்குள் இருப்பாள், எனது வீட்டு வாசலில் நான் இறங்கிவிடுவேன் எனது விழிகள் அவள் செல்லும்



பேருந்து மறையும்வரை பார்க்கும்.

பார்த்து என்ன பயன் அவளாக ஏதாவது பேசுவாள் என்று எத்தனையோ முறை எதிர்பார்த்தேன். ஆனால் அவள் பேசவேயில்லை. அவளது நீண்ட விழிகள் மட்டும் ஆயிரம் கதை பேசும் அப்போதெல்லாம் எனக்குள் "காதல் சொல்வது உதடுகள் அல்ல கண்கள்தான் தலைவா" என்ற பாடல்தான் ஞாபகத்தில் வரும்.

எனக்கும் அவளுடன் பேசமுடியாத ஒரு கோழைத்தனம், நாட்கள்தான் நகர்ந்தன. எனது காதல் துளி அளவுகூட நிறைவேறவில்லை.

ஒரு நாள் அவளைக் காணவில்லை எனக்கு எதையோ இழந்துவிட்டதுபோல் இருந்தது. மீண்டும் மறுநாள் அவளைக் கண்டபின்தான் அப்பாட என்றிருந்தது. இப்படியே காலங்கள் காற்றாகப் பறக்க ஐந்து ஆண்டுகள் பூர்த்தியாகிவிட்டது.

அன்று ஒரு நாள் வீட்டில் எனக்கு திருமணம் பேசுவதாக அம்மா கூறுவதைக் கேட்டதும் எனக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. ஒருவாறு தைரியத்தை வரவழைத்துக்கொண்டு அம்மாவிடம் எனது காதலை பற்றி கூறினேன். அம்மா எதுவித பதிலும் கூறவில்லை. படுக்கைக்குச் சென்ற எனக்குத் தூக்கமே வரவில்லை. அவளைப்பற்றிய சிந்தனைகள் சிதறியபடியே இருந்தது. நிச்சயமாக அவளும் என்னை விரும்புகின்றாள் என்பது அவளது ஒவ்வொரு அசைவிலும் என்னால் புரிந்து கொள்ளக்கூடியதாக இருந்தது. அவளுடைய நடை, உடை, பாவனை யாவும் அவள் எங்கோ ஒரு அலுவலகத்தில் பணிபுரிகின்றாள் என்பதைப் பச்சை குத்தி நின்றது, எது எப்ப டியோ நாளை இவளிடம் எனது காதலை தெரிவிப்பதாக மனதில் உறுதி பூண்டு தூக்கத்தை வரவழைத்துக்கொண்டேன்.

காலை விடிந்ததும் அம்மா அப்பாவுடன் பேசி அவரும் எனது காதலுக்குப் பச்சைக் கொடி காட்டியதாக அம்மா கூறியதைக் கேட்டு மனதில் இனம் புரியாத குதூகலத்துடன் பஸ் தரிப்பிடத்தில் காத்திருந்தேன். வழக்கமாக நான் பயணம் செய்யும் பஸ் என்பதால் என்னவோ நான் கை அசைக்காமலே அருகில் வந்து நிற்கவும் நான் ஏறிக் கொண்டேன்...

என்ன ஆச்சரியம் அவளுக்கருகில் ஒரு ஆசனம் எனக்காகவே ஒதுக்கி வைத்தது போல் வெறுமையாக இருந்தது. ஒருவாறு தயங்கித் தயங்கி அவள் அருகில் சென்று அமர்ந்து விட்டேன். பேசத்தான் நா எழவில்லை இருந்தும் தட்டுத் தடுமாறி "நீங்க யாரையாவது விரும்பிறிங்களா" என்று கேட்டேன், ஓம் இந்த ஐந்து வருசமா ஒருத்தர மானசீகமா காதலிச்சேன் ஆனா அவரிட்ட என்ட காதலை சொல்ல முடியாத கோழையா நான் இருந்ததால என்னவோ என்னோட காதலில நான் தோத்திட்டன். இப்ப எனக்கு வீட்டில கலியாணம் நிச்சயிச்சிட்டாங்க" என்றவளின் கண்களிலிருந்து கண்ணீர் கசியத் தொடங்கியது.

எனக்கு மாறி மாறி யாரோ சாட்டையால் அடிப்பதுபோல் இருக்க நான் சிலையானேன். அவளாகத்தான் பேசினாள்" நீங்க இறங்க வேண்டிய இடம் வந்துட்டுது நீங்க இறங்கயில்லையா?" என்றபோதுதான் நான் சுய உணர்வு பெற்று இறங்கிக் கொண்டேன்.

மீண்டும் அவளைச் சந்திக்கக்கூடாது என்று மனதில் ஒரு திடமான முடிவுடன் அரை நாள் விடுப்புப் பெற்றுக் கொண்டு வீடு வந்தேன், மனது ஒரு நிலையில் இல்லை எனவே நிச்சயம் நான் அவளை மறப்பதாக இருந்தால் வீட்டில் பேசும் திருமணத்தைச் செய்து மனதை மாற்ற வேண்டும் இல்லையேல் அவள் நினைவேதான் வந்து கொண்டிருக்கும். இன்னொரு

## பற்குணன் அம்பிகாபதி-மன்னார்

வனுக்காக நிச்சயிக்கப்பட்டவளை நினைப்பது தவறு அல்லவா என்றெண்ணி அம்மாவிடம் விடயத்தைக் கூறினேன். மறுகணமே திருமண ஏற்பாடு தடல் புடலாக நடந்தேறியது.

என்னைப் பெண்பார்க்க வருமாறு வீட்டில் எவ்வளவோ வற்புறுத்தியும் நான் போக மறுத்துவிட்டேன். நீங்கள் பார்த்துத் தீர்மானித்தால் சரியென்று இருந்துவிட்டேன். பெற்றோரின் சம்மதத்துடன் மணக்கப்போகும் பெண்ணுக்கு மாலையிட தயாராக மணவறையில் காத்திருந்தேன். என்ன அதிசயம் அவளேதான் என்னவளேதான் சந்தேகமேயில்லை, என்னை அசட்டையாகப் பார்த்த அவள் விழிகூட ஆச்சரியத்தில் பூத்திருக்க, அன்போடு அவள் கழுத்தில் மாலையிட்டேன்.

"உண்மைக்காதல் தோற்பதில்லை இல்லையா?" என்று வெட்கத்தோடு என் காதருகே கிசுகிசுத்தவளிடம் மெதுவாகத் தலையசைத்து ஆமோதித்துக் கொண்டேன். ■

# நாய் தேடும் வேலை!

சமீபத்திய வரட்சியின் புரட்சியால் மிகவும் பாதிக்கப்பட்டிருந்தான் மயில்வாகனம். தேயிலைத் தோட்டத்தில் வாரத்திற்கு இரண்டு நாள் வேலைக் கிடைப்பதே குதிரைக் கொம்பாக இருந்தது. மூன்று பிள்ளைகளுடன் மொத்தம் ஐந்து பேரைக் கொண்ட அவனது குடும்பம் மிகவும் வறுமையில் வாடியதால் தோட்டத்து வேலை தவிர்த்து கிடைக்கும் எந்த வேலையையும் செய்து வந்தான். சமீப காலமாக அவனைச் சூழ உள்ள அனைவரையுமே வரட்சி வாட்டி எடுத்துக் கொண்டிருந்ததால், அவனைப் போல எல்லோரும் தோட்டத்து வேலையை விட்டு விட்டு வேறு வேலை தேடி அலைந்தார்கள். இதனால் ஊரில் வேறு வேலை பலருக்கு பகிர்ந்து போயிற்று. நிரந்தரமாய் ஒரு வேலை இல்லாமல் தினம் ஒரு வேலை என்று எங்காவது ஏதாவது கூலி வேலை செய்த மயில்வாகனத்திற்கு இப்படிப்பட்ட வேலை கிடைப்பதுவுங்கூட கஸ்டமாக இருந்தது.



## பூண்டுலோயா மெய்யன் நட்ராஜ்-தோஹா கட்டார்

இந்நிலையில் மயில் வாகனத்தின் பக்கத்து வீட்டுக்கு ஒருவர் வந்திருந்தார். வந்தவர் கொழும்பில் ஒரு பணக்காரர் வீட்டில் தோட்ட வேலை செய்பவர். அவர் வேலை செய்யும் வீட்டிற்கு இன்னும் ஒரு ஆள் தேவை என்பதால் யாரையாவது அழைத்துச் செல்லும் நோக்கோடு வந்திருந்தார். மெல்ல மயில் வாகனத்திடம் "இங்க பாருங்க மயில்வாகனம் மாதம் இரண்டாயிரம் சம்பளம் தருவாங்க. நீங்க எனக்கு ஒத்தாசையா இருந்தாபோதும். மாசா மாசம் சம்பளத்தை வாங்கி வீட்டுக்கு அனுப்பிடலாம். இங்கே மழை பெய்து தேயிலை வளர்ந்து நீங்க வேலை செய்து குடும்பத்தைக் காப்பாற்ற வேண்டும் என்பது கடல் வற்றி கருவாடு தின்கிற கதை மாதிரிதான்" என்று ஆசைக் காட்டினார்.

"ஆமா இங்கே தினம் கொஞ்ச கொஞ்சமாய் சாவதை விட அங்கே போய் சம்பாதித்து பிள்ளைகளுக்கு நல்ல சாப்பாடாவது போடலாம்தான். ஆனா என்னிடம் இப்போ கொழும்புக்கு வருவதற்கு கூட காசு இல்லைங்களே!"

"அதைப்பற்றி நீங்க ஏன் கவலைப்படுறீங்க. அதெல்லாம் நான் பார்த்துக்கிறேன். நீங்க வாரேன்னு சொன்னதே போதும். நாளைக்கு காலையிலே ரெடியா இருங்க." சுப்ரமணியம் சொன்னதைக் கேட்ட சந்தோசத்தில் அடுத்த நாள் அவரோடு கொழும்பில் ஒரு மாடமாளிகைக்கு வேலையாளாக பின் புறமாய் நுழைந்தான்.

சுப்ரமணியம் அவன் முதலாளியிடம் மயில்வானத்தை அறிமுகப்படுத்தியபோது, "இதோ பார் மயில்வானம். உனக்கு இங்கே வேறு வேலை ஒன்னுமே கிடையாது. அதோபார் அந்த கூட்டுக்குள்ளே என்னுடைய லைக்கா இருக்கான். அவனை பார்த்துக்கிறது தான் உன்வேலை. சரி சரி போய் வேலையை பார். சுப்ரமணியம் எல்லாத்தையும் சொல்லித் தருவான்."

முதலாளி போனதும் சுப்ரமணியத்தைப் பார்த்தான் மயில் வாகனம். நாய் பார்த்துக் கொள்ள என்று சொல்லிக் கூப்பிட்டால் வரமாட்டான் என்பதற்காக சொன்ன பொய்யை மறைப்பதற்காக." லைக்கா ரொம்ப நல்ல நாய். சைஸ்தான் ரொம்ப பெரிதா இருக்கே தவிர சாப்பாடு போடுறவனோடு ரொம்ப நல்லா பழகும். கடிக்காது நீ பயப்படாதே நான் பழக்கப் படுத்தித் தருகிறேன்" என்றவாறு கூட்டருகே அழைத்துப் போனான்.

மயில் வாகனத்தைக் கண்டதும் "வவ் வவ்" என்று குரைக்க ஆரம்பித்தது. ஆள் உயரம் இருக்கும். நன்றாக தின்று வளர்ந்து கொழுத்திருந்தது. கடித்தால் குறைந்தது இரண்டு கிலோ இறைச்சியையாவது கவ்வாமல் விடாது. பார்க்கவே பயங்கரமாக இருந்தது.

சுப்ரமணியம் கூட்டை திறந்து சங்கிலியால் கட்டி வெளியே கொண்டு வந்தான். மயில்வாகனம் அது கடித்து விடலாம் என்ற அச்சத்தில் ஒரு ஓரமாய் போய் நின்று விட்டான். பிறகு அவனுக்கு தைரியம் சொல்லி ஒரு கிழமைக்குள் லைக்காவை அவனுக்குப் பழக்கப்படுத்தி தினசரி காலையில் லைக்காவை கடற்கரைக்கு கூட்டிச் செல்லவும்கூட பழக்கிவிட்டு விட்டான்.

ஒரு இரண்டு வாரம் சென்றிருக்கும். ஒருநாள் வழமைபோல் லைக்காவைக் கூட்டிக் கொண்டு கடற்கரைக்குச் சென்று கொண்டிருந்தபோது அந்த தெருவழியே வந்த ஒரு தெருநாயைக் கண்டு விட்ட லைக்கா சங்கிலியையும் அறுத்துக் கொண்டு மயில்வாகனத்தை தள்ளிவிட்டு அதை துரத்திக் கொண்டு ஓடியது. அதன் பின்னாலே மயில்வாகனமும் ஓடிப்பார்த்த போது அது ஏதோ ஒரு வீதியில் புகுந்து எங்கோ ஓடிப்போய் விட்டிருந்தது. காலை முதல் நண்பகல் பன்னிரண்டு மணிவரை தேடிப் பார்த்தும் அகப்படாமல் வீட்டுக்குத் திரும்பினான்.

முதலாளி நாயைக் காணாத கோபத்தில் நாயாய் கடித்துக் குதறினார். "எனக்கு என் லைக்கா வேணும். அது இல்லாமல் நீ இங்கே வரக்கூடாது. போ.. இப்பவே போ" என்று அந்த உச்சி வெய்யிலில் துரத்திவிட்டார். "ச்சே என்ன மனிதர்கள். நாய்க்கு கொடுக்கும் மரியாதையில் மனிதனுக்கு கொஞ்சம்கூட கொடுக்காமல் இப்படி விரட்டுகிறார்களே!" என்று மனதுக்குள் புளுங்கிக் கொண்டு நாயைத் தேடி நடந்த மயில்வானத்தின் மனது இப்படிச் சொல்லிக் கொண்டது.

"ஊரில் வேலை இல்லாமல் நாயாய் அலைந்தேன். இங்கே நாயைத் தேடுவதே வேலையாய் ஆகிப்போச்சே!" ■

## அசத்தல் தொடர் 09

# ஓடாதே! ஒளியாதே!

### கிரைம் சக்கரவர்த்தி ராஜேஷ்குமார்

"அண்ணன் இந்த ஆயிரம் ரூபாய்க் காசை தராம ஏமாத்திட்டு எங்கேயும் போயிட மாட்டார்."

"வாஸ்தவம்தான். அப்ஸ்கேன்ட் ஆன மாதிரி திடீர்னு முரளி காணாமப் போயிட்டான். ரிசிக்னேஷன் லெட்டர் மட்டும் வந்தது. அதனால ஆபீஸ்ல பார்த்துட்டு வரச் சொல்லி அனுப்பினாங்க. முரளி எப்ப வருவான். என்னன்னு தெரிஞ்சிகிட்டு வரச் சொன்னாங்க."

"அண்ணன் இன்னும் ஒரு வருஷத்துக்கு இங்கே வரமாட்டார்."

நிமிர்ந்தான் நிவாஸ்.

"என்ன ஒரு வருஷம் கழிச்சித்தான் வருவானா?"

"ஆமா..."

"ஏன் அப்படி?!"

"ஃபாரின் போயிருக்கார்."

"ஃபாரினா? லெட்டர் போட்டிருந்தானா?"

"ஊஹூம். சொல்லி அனுப்பியிருந்தார்" என்று துவங்கி புவன்யா வந்து சென்ற விபரத்தை முழுவதுமாய் அவனுக்குச் சொன்னாள் காயத்ரி.

பொறுமையாய் அவள் சொன்ன விபரங்களைக் கேட்டுக் கொண்ட நிவாஸ் பலத்த மௌனத்துக்கு போனான்.

காயத்ரி கேட்டாள். "என்ன மவுனம் ஆயிட்டீங்க? உங்களுக்கு இதில் சந்தோஷமில்லையா?"

"இல்லை. கவலையா இருக்கு."

"ஏன்..?"

"என்னவோ தப்பு இருக்குன்னு என்னோட உள்மனசு சொல்லுது."

"என்ன தப்பு?"

"முரளி நேரில் வராமல் இருக்கிறது என் மனசை உறுத்துது."

"பொறுப்பான வேலையாம். விட்டுட்டு எப்படி வர முடியும்?"

"எவ்வளவு பொறுப்பான வேலையா இருந்தாலும் குடும்பப் பொறுப்புக்குன்னு கொஞ்ச நேரம் ஒதுக்க முடியாமப் போயிருமா?"

"ஃபாரின் போயிட்டார்ன்னு சொல்றாங்களே..."

"அதையும் என்னால நம்ப முடியலை."

"ஏன்?"

"ஃபாரின் போற விஷயம் ஃப்ளைட் டிக்கெட்டை வாங்கினோம். போறோங்கற மாதிரி சுலபமான வேலையில்லை. நிறைய சம்பிரதாயங்கள் இருக்கு. பாஸ்போர்ட் வாங்கி வெக்கணும். போகப் போற தேசத்தின் விசா வேணும்."

"கம்பெனி சார்பாகத்தானே அண்ணன் போனார். அவங்க பாஸ்போர்ட், விசா எல்லாம் ஏற்பாடு செஞ்சு தந்திருக்கலாமே! ஃபாரின் கொலாபரேஷன் கம்பெனி அது."

"எவ்வளவு பெரிய கம்பெனியாகவே இருந்தாலும் நினைச்ச உடனே அதெல்லாம் வாங்கிட முடியாது. முரளி அந்த இன்டர்வியுவுக்குப் போய் இன்னும் முழுசாப் பத்து நாள்கூட ஆகலை. பத்து நாளுக்குள்ளே இதெல்லாம் ஏற்பாடு பண்ண முடியாது."

அவன் சொன்னது காயத்ரியை யோசிக்க வைத்தது.

நிவாஸ் தொடர்ந்து கேட்டான், "ஃபாரின்னா... எந்த நாட்டுக்குப் போனதா சொன்னாங்க? போற இடத்தின் அட்ரசைக் கேட்டீங்களா?"

"கேட்டேன். ஆனா, அந்தப் பொண்ணு அதெல்லாம் சொல்லலை. அண்ணனுக்கு லெட்டரைப் படிச்சு பதில் எழுத நேரமிருக்காதுன்னு சொல்லி மழுப்பிருச்சு."

"பார்த்திங்களா என் சந்தேகம் சரியாகத்தான் இருக்கு. முரளியும் நம்மைத் தொடர்பு கொள்ள மாட்டான். நாமும் முரளியைத் தொடர்பு கொள்ள முடியாது. அப்படியென்ன வேலை? யோசிக்க வேண்டாமா?"

முகத்தில் கவலையைப் பூசிக் கொண்டாள் காயத்ரி. அந்தக் கவலை அவள் குரலிலும் தெறித்தது.

"நீங்க சொல்றது சரிதான். இதையெல்லாம் எனக்கு யோசிக்கத் தோணலை! இப்ப அண்ணன் எங்கிருக்கார்ன்னு தெரியலையே!"

"அவன் நிச்சயமா வெளிநாடு போயிருக்க சான்சே இல்லை. இன்டர்வியூக்கு போன இடத்தில் எங்கேயோ வசமா மாட்டியிருக்கான்."

"எனக்கு பயமா இருக்குங்க."

"இப்போ பயப்படறதிலோ, கவலைப்படறதிலோ அர்த்தமில்லை."

"தன்னந்தனியா இருக்கிற எனக்கு ஒரே ஆதரவு அண்ணன்தான். நான் கவலைப்படாமே இருக்க முடியுமா?"

"கவலைப்பட்டா சிக்கல் தீர்ந்துடுமா?"

"என்ன செய்யச் சொல்றீங்க..?"

"முரளி எங்கிருக்கான்னு கண்டுபிடிக்கணும். முரளியை நேரில் பார்த்துப் பேசி நிஜமாவே ஒரு நல்ல கம்பெனிலதான் அவன் போய்ச் சேர்ந்திருக்கானான்னு உறுதி பண்ணிக்கணும்."

"நான் தன்னந்தனியா என்ன செய்ய முடியும்?"

"நான் உங்களுக்கு ஹெல்ப் பண்ண மாட்டேனா?"

"எனக்கு கலக்கமா இருக்கு. என்ன பண்றதுன்னே புரியலை."

"அவன் இன்டர்வியூவுக்குப் போன கம்பெனி எதுன்னு உங்களுக்குத் தெரியுமா?"

"மெட்ராசில் இன்டர்வியூன்னு தெரியும். கம்பெனி பேர் தெரியலையே..."

"இன்டர்வியூக்கு வரச் சொன்ன கார்டு இருக்கா?"

"கார்டை அண்ணன் எடுத்துட்டுத் தானே போனார்."

"அப்ளிகேஷன் காப்பி வெச்சிருப்பானா?"

"டிகிரி சர்டிபிகேட் முதற்கொண்டு அண்ணனோட அத்தனை சர்டிபிகேட்ஸும் அந்த மர பீரோவில்தான் இருக்கும்."

"அந்த பீரோவை நான் பார்க்கலாமா? உங்களுக்கொன்றும் ஆட்சேபனை இல்லையே?"

"தாராளமா பாருங்க..."

பீரோவைத் திறந்து விட்டாள் காயத்ரி. துவைத்து மடித்த துணிகள் இரண்டு அறைகளை நிறைந்திருந்தன. அதற்கும் கீழே வயர்கள், ஸ்க்ரூ டிரைவர்கள், கழற்றிப் போட்ட எலும்புக்கூடு டிரான்சிஸ்டர்.

"அந்த டிராயரைத் திறந்து பாருங்க."

பீரோவின் இழுப்பறையை இழுத்தான் நிவாஸ். பிளாஸ்டிக் கையில் சர்டிபிகேட் ஜெராக்ஸ் காப்பிகள் இருந்தன. பழுப்படைந்த வெற்றுக் காகிதங்கள். சில கவிதைகள். கரண்ட் பில். போட்டோ காப்பிகள்.

பதினைந்து நிமிஷத் தேடலின் முடிவில் அந்த பேப்பர் கட்டிங் நிவாஸின் பார்வையில் அகப்பட்டது.

'ஒரு மருத்துவ நிறுவனத்தில் லேப் அசிஸ்டென்ட்டாகப் பணிபுரிய ஆரோக்கியமான இளைஞர்கள்...'

"விளம்பரக் கட்டிங் கிடைச்சிருக்கு."

"அதில் அட்ரஸ் இருக்குமே..?"

"ஊஹூம். வெறும் போஸ்ட் பாக்ஸ் நெம்பர்தான் இருக்கு."

சொல்லிக்கொண்டே மேலும் அந்த பேப்பர் கத்தைகளைக் கிளற நிவாஸின் முகம் சட்டென மலர்ச்சிக்குப் போனது.

✪✪

முரளி நீள மேஜையில் வைக்கப்பட்டிருந்தான்.

அவனுடைய முன் மண்டையிலும், பின்மண்டையிலும் நாலைந்து தேர்ந்தெடுத்த இடங்களில் சன்னமான மின் கம்பிகள் சொருகப்பட்டிருந்தன.

அந்த வயர்கள் ஈ ஈ ஜி கருவிக்குப் போய் அந்தக் கருவி மானிட்டரில் வரிப் படங்களாய்க் கொடுத்துக் கொண்டிருந்தது.

முரளி ஆழமான மயக்கத்தில் இருக்க, சந்திரமோகன் தீவிர கதியில் இயங்கிக் கொண்டிருந்தார்.

லீமா கையைக் கட்டிக்கொண்டு சுவரின் இயக்கங்களை வேடிக்கை பார்த்தாள். அவ்வப்போது சந்தேகம் கேட்டாள்.

புவன்யா சந்திரமோகனுக்கு ஒத்தாசை பண்ணிக்கொண்டிருந்தாள்.

"புவன்யா..."

"எஸ் டாக்டர்..."

"க்ரேயான் எடு."

ஈ ஈ ஜி உமிழ்ந்த வரிப்படங்களை உன்னிப்பாய் பார்த்துக் கொண்டே கேட்டார்.

புவன்யா சிவப்பு நிற க்ரேயான் மார்க்கரை எடுத்துத் தந்தாள்.

முரளியின் பின் மண்டையில் குறிப்பிட்ட இடத்தில் க்ரேயான் மார்க்கரால் குறி போட்டார்.

லீமா கேட்டாள்.

"சிப் பொருத்தப்பட வேண்டிய இடம் இங்கேதானா?"

"ஆமா. இது ரஃப் லொகேஷன். விஷுவல் சார்ட்டெக்ஸ் இங்கேதான் இருக்கு. நாம பார்க்கற காட்சிகள் மன பிம்பங்களா மாத்தப்படற இடம் இதுதான். பட்.."

"சொல்லுங்க டாக்டர்?"

"இந்தப் பையனோட மூளையில் சிப்பைப் பொருத்தினா அதனால ஏற்படக் கூடிய எதிர் விளைவுகளை தாங்கிப்பானா தெரியலை."

"உடனே பாதிக்கப்படுவானா?"

(வரும்)



## தொப்புள் மாற்றுச் சிகிச்சை



தமிழ்த் திரைப்படங்களின் உபயத்தால் பம்பரம் விடுவதற்கும்,ஓம்லட் போடுவதற்கும் பிரபலமாகி விட்ட 'தொப்புள்' இப்போது தனி அந்தஸ்து பெற்று வருகிறது.

சிறிய வளையங்கள் சிறு உலோகக் குண்டுகள், சின்னச் சங்கிலிகள் மாட்டி அழகு பார்க்குமளவுக்கு 'தொப்புள்' அலங்காரம் பிரசித்தி பெற்றுள்ளது.

உலகெங்கும் அமர்க்களப்பட்டு வரும் இந்தத் தொப்புள் பிரதேசத்தை அவரவர் விருப்பத்திற்கேற்ப அறுவைச் சிகிச்சை செய்து கொள்ளலாம் எனக் கூறியுள்ளார் அமெரிக்க மருத்துவ நிபுணர் கிரிகாரி.

உட்புறம் குழிந்ததாகவோ, வெளிப்புறம் குவிந்ததாகவோ விரும்பியவர்களின் வசதிக்கேற்ப தொப்புள் மாற்று அறுவைச் சிகிச்சை செய்யப்படுகிறது.

வெறும் 15 நிமிடங்கள் மட்டுமே இந்த அறுவைச் சிகிச்சை செய்யப்பிடிக்கிறதாம். இதற்குரிய செலவுதான் 500 அமெரிக்க டொலர்கள். நம் நாட்டு மதிப்பில் 45 ஆயிரம் ரூபா.

## தூள் பறக்கும் கொடி விற்பனை

நியூயோர்க் நகரின் உலக வர்த்தக மையம் மற்றும் பெண்டகன் மீது நடத்தப்பட்ட தாக்குதலுக்குப்பின் அமெரிக்காவில் என்றுமில்லாதவாறு தேசப்பற்று தலைவிரித்தாடுகிறது. இதன் காரணமாக அமெரிக்க தேசியக் கொடிக்கு ஏகப்பட்ட கிராக்கி ஏற்பட்டுள்ளது.

முன்பு ஒரு நாளைக்கு சுமார் 6 ஆயிரம் கொடிகளை மட்டும் விற்றுவந்தது அமெரிக்காவில் பிரபல நிறுவனமான வால்மார்ட். தாக்குதலுக்குப் பின் இந்தக் கொடி விற்பனை இரண்டு இலட்சத்தைத் தாண்டியுள்ளது.

இருப்பினும் அமெரிக்காவின் கொடி மோகத்தைக் கண்ட மக்கள் சீனா, அமெரிக்கத் தேசியக் கொடியைத் தயாரிப்பதில் தீவிரமாகியுள்ளது.

அமெரிக்காவில் இருந்து கொடிகள் தயாரிக்கும் ஓடர்களை வாங்கிக்குவித்துள்ளன சீனாவைச் சேர்ந்த பல நிறுவனங்கள்.

## பின்லேடனின் தொலைக்காட்சி அலைவரிசை?

சர்வதேச தொலைக்காட்சிகள் கூட ஆப்கான் போர் பற்றிய படங்களுக்காகவும், பின்லேடனின் புகைப்படத்திற்காகவும் இந்தத்தொலைக்காட்சியைத் தான் பெரிதும் நம்பியிருக்கின்றன.

சுமார் ஆயிரம் கோடி ரூபாய் செலவில் கட்டார் மன்னர் ஷேக் அஹமட் பின் கனீபா அல்தானி மூலம் தொடக்கப்பட்ட இந்தத்



அமெரிக்காவின் தீவிரத் தேடுதலுக்குள்ளாகியிருக்கும் ஓசாமா பின்லேடனுக்கு இணையாகப் பேசப்படும் இன்னொரு பெயர் அல்-ஜசீரா. வளைகுடா நாடொன்றின் தொலைக்காட்சி அலையோசை ஒன்றின் பெயர்தான் இது. இந்தத் தொலைக்காட்சி அலைவரிசையில் பின்லேடனின் பிரத்தியேக பேட்டிகளும் ஆப்கான் போர்ச் செய்திகளும் ஒளிபரப்பப்பட்டு வருகின்றன.

பி.பி.சி. மற்றும் சி.என்.என். போன்ற தொலைக்காட்சியில் பின்லேடனுக்கும் பங்கு இருக்குமோ என அமெரிக்கா சந்தேகிக்கிறதாம்.

பின்லேடன் பற்றிய பிரத்தியேக செய்திகள் அதிகம் வெளியாவதால்தான் இந்தச் சந்தேகம்.

ஆப்கான் ஆதரவுக் காட்சிகளை இதில் அதிகம் காட்டக்கூடாதென்று அல்-ஜசீரா தொலைக்காட்சிக்கு மறைமுக எச்சரிக்கை ஒன்றை அமெரிக்கா விடுத்திருப்பதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

## திருமணம் செய்து கொள்ளுங்கள்

திருமணமாகாத ஆண்களில் 45 வயதுக்கு மேற்பட்டவர்களிடம் காய்ச்சல், இறப்பு 23 சதவீதம் அதிகமாக இருக்கிறது.

விவாகரத்துப் பெற்றநபர்கள் பத்தாண்டுகளில் இறந்து விடுகின்றனர்.

இவையெல்லாம் இங்கிலாந்து அரசாங்கம் சேகரித்த தகவல்கள். எனவே, மணமாகாத ஆண்களையும், விதவைகளையும், விவாகரத்துப்பெற்றுக்கொண்டவர்களையும் உடனே திருமணம் செய்து கொள்ளவும் இங்கிலாந்து அரசாங்கம் சிபார்சு செய்துள்ளது.

உறுதியான நம்பிக்கையான திருமண உறவு இருக்கும் வரை உடல் நலம் கூடி ஆயுள் அதிகரித்திருப்பதையும் இந்தக் குழு கண்டுபிடித்திருக்கிறது.

## உயிராபத்தை ஏற்படுத்தும் 'டாட்டூ'



மருதோன்றி இட்டுக்கொள்ளும பழக்கம் பெண்களிடம் இப்போது குறைந்து கொண்டு வருகிறது.


மருதோன்றிக்குப் பதிலாக மேலை நாடுகளில் 'டாட்டூ' எனப்படும் இரசாயன அழகு சாதனப் பொருட்கள் மூலம் உடம்பில் 'டிசைன்' போடுவது இப்போது ஃபாசனாகி விட்டது.

இந்த 'டாட்டூ' உடலுக்கு ஆபத்தை விளைவிப்பதாக ஜேர்மனியில் உள்ள ஆராய்ச்சி நிலையம் ஒன்று தெரிவிக்கிறது.

மருதோன்றியில் செய்யப்பட்டது என்றாலும் இதில் இரசாயனப் பொருட்கள் கலந்திருப்பதால், இதை உடலில் இட்டுக் கொள்பவர்களுக்குச் சருமத்தில் எரிச்சல், உலர்ந்து போதல் போன்ற உபாதைகள் ஏற்படுகின்றன.

சருமம் உலர்தல், கெட்டிப்படுதல் போன்றவை உடனே தெரியாது என்றாலும் நாள்பட்ட உபயோகத்தால் திடீரென ஒருநாள் தோன்றி உடலில் நிலைத்து விடும் என்று ஜேர்மனியைச் சேர்ந்த தோல் ஆராய்ச்சி நிபுணர் ஜோன் ஹுஸன் தெரிவித்துள்ளார்.

# 2ம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னை மடியில்: 16❀09❀1963

ஈசன் அடியில் : 02 ❀ 11❀ 1999

அழகு தமிழ் எழுதி
அகிலத்தையே ஆளும்
அற்புத சக்தி கொண்ட
அற்புதனே வித்தகனே!
இத்தரை தனை நீக்கி-எத்தரை
வாழச் சென்றாய்?
பத்தரை மாற்று நிகர் பண்பாளர்
உன்னை நினைத்து
பத்தி பத்தியாக எழுதி
பல்லாயிரம் வரிகள்
முத்திரைதான் பதித்தாலும்
முழுமையான உன் ஆக்கம்
எத்தனை தான் முயன்றாலும்
முடியாது முடியாது!
வித்தகரென வாழ்ந்த
எத்தனையோ பேர் முயன்றும்
சத்தான உன் பேனா சாதித்த
சாதனைகள்
எக்காலும் எமக்கு ஒளி காட்ட-நீ
அருள்வாய்!

## நடராஜா அற்புதராஜா (ரமேஷ்)

தினமுரசு ஆசிரியரும், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும்

# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னை மடியில்: 05 ▫ 12 ▫ 1962


ஈசன் அடியில்: 02 ▫ 11 ▫ 1999

## தர்மராஜா அஜந்தகுமார் (ராஜன்)

கள்ளமில்லா உன்னுள்ளம் களங்கமற்ற உன்முகத்தில்
துள்ளிவரும் சிரிப்பினிலே வெள்ளமெனப் பாயும்
பார்த்தனுக்கு வாய்த்த பரந்தாமன் சாரதிபோல்
வார்த்தை வித்தையால் தமிழ்வையத்தை
போர்த்தத் துணிந்த உந்தன் மைத்துணனை அணைத்து
போன திசை அறியோம்; பொங்கி வரும் துயரம்
பொறுக்க முடியாமல் ஐயகோ அழுது நிதம்
சோர்ந்து துடிக்கின்றோம் சோதனைதானென்ன...!

# ஸ்போர்ட்ஸ்

## சிகிச்சை பெறும் ட்ராவிட்



இந்திய கிரிக்கெட் வீரர் ராகுல் ட்ராவிட் தனது வலது கை தோள்பட்டையில் ஏற்பட்ட காயத்திற்கு கேப்ரவுனில் உள்ள மருத்துவ நிபுணர் ஒருவரது உதவியை நாடி சிகிச்சை பெற்று வருகிறார்.

தற்போது தென்னாபிரிக்காவுக்குச் சுற்றுப்பயணம் மேற்கொண்டிருக்கும் இந்திய கிரிக்கெட் அணி, அங்கு நடந்த முத்தரப்புப் போட்டியில் கலந்து கொண்டு விளையாடியது.

இந்தியா, தென்னாபிரிக்கா, கென்யா ஆகிய 3 நாடுகள் கலந்து கொண்ட இந்த ஒருநாள் தொடரின் இறுதிப் போட்டியில் இந்தியாவும், தென்னாபிரிக்காவும் மோதின.

வழக்கம் போல இந்தப் போட்டியிலும் இந்தியா கோப்பையைக் கோட்டை விட்டது. 6விக்கெட்டுக்களால் வெற்றிபெற்ற தென்னாபிரிக்கா கோப்பையைக் கைப்பற்றியது.

இதையடுத்து இந்திய-தென்னாபிரிக்க அணிகளுக்கிடையே டெஸ்ட் தொடர் நடக்கவுள்ளது. இந்தத் தொடரில் காயமடைந்திருக்கும் ராகுல் ட்ராவிட் கலந்து கொண்டு விளையாடுவார் என இந்திய அணியின் பயிற்சியாளர் ஜோன் ரைட் தெரிவித்துள்ளார்.

அண்மையில் நடந்து முடிந்த முத்தரப்பு ஒருநாள் போட்டித் தொடரில் இந்தியா விளையாடிய 7 போட்டிகளிலும் ட்ராவிட் கலந்து கொண்டார். இந்தப் போட்டிகளில் மொத்தம் 214 ஓட்டங்களை இவர் எடுத்திருந்தார். சராசரியாக 53.50 ஓட்டங்களில் 3 அரைச்சதங்களும் அடங்கும்.

## ஷார்ஜாவில் டெஸ்ட் போட்டிகள்

ஆப்கானிஸ்தான் போர் காரணமாக, பாகிஸ்தானில் நடைபெறவிருந்த கிரிக்கெட் போட்டிகள் பல பாதுகாப்புக் காரணங்களுக்காக இரத்துச் செய்யப்பட்டன.

பாகிஸ்தானுக்கெதிராக டெஸ்ட் போட்டிகளில் விளையாட விருந்த நியூஸிலாந்து, இலங்கை ஆகிய நாடுகள் தமது சுற்றுப் பயணத்தை நிறுத்தி விட்டன. இதனால் பாகிஸ்தான் கிரிக்கெட் சபை பெரும் பண நெருக்கடிக்குள்ளாகியிருக்கிறது.

இதைத் தவிர்க்கும் பொருட்டு பாகிஸ்தானில் நடைபெறத் தீர்மானிக்கப்பட்ட டெஸ்ட் போட்டிகளை நிறுத்தி விடாமல் ஷார்ஜா அல்லது மொரோக்கா ஆகிய நாடுகளில் நடத்த முடியுமென பாகிஸ்தான் கிரிக்கெட் சபையைச் சேர்ந்த ஸஹீட் நுரானி தெரிவித்துள்ளார்.

சர்வதேச கிரிக்கெட் சபை இதற்கு அனுமதி அளிக்குமானால் ஷார்ஜாவில் டெஸ்ட் மற்றும் ஒருநாள் போட்டிகளை நடத்தத் தயாராக இருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## தாய்நாட்டிற்கெதிராக மகன்
## தலைமை தாங்க விரும்பும் தந்தை


இங்கிலாந்து அணித்தலைவர் நஸார் ஹூஸைன் இந்தியாவுக்கு எதிராக விளையாடும் இங்கிலாந்து அணிக்குத் தலைமை தாங்க வேண்டும் என்று நஸார் ஹூஸைனின் தந்தை விரும்புகிறார்.

நவம்பர் மாதம் இந்தியாவுக்கு இங்கிலாந்து அணி சுற்றுப்பயணம் செய்கிறது. அங்கு 3 டெஸ்ட் போட்டிகளில் இந்தியாவை எதிர்த்தாடுகிறது.

இந்தியாவைத் தாய்நாடாகக் கொண்ட நஸார் ஹூஸைன் தமிழ்நாட்டின் சென்னையில் பிறந்தவர். தனது 5வது வயதில் தன் குடும்பத்தினருடன் இங்கிலாந்து சென்று குடியேறியவர்.

தன் மகன் தாய்நாட்டிற்கெதிரான போட்டியில் விளையாடவுள்ள இங்கிலாந்து அணிக்குத் தலைமை தாங்குவதைத் தான் பெரிதும் விம்புவதாக 'சண்' பத்திரிகைக்குத் தெரிவித்துள்ளார் நஸார் ஹூஸைனின் தந்தை.

## சந்தர்போல் நீக்கம்



இலங்கைக்குச் சுற்றுப்பயணம் மேற்கொண்டிருக்கும் மேற்கிந்தியத் தீவுகள் அணியில் அதன் மத்திய தர வரிசைத் துடுப்பாட்ட வீரர் ஷிவ்நாராயண் சந்தர்போல் நீக்கப்பட்டுள்ளார்.

இலங்கைக்கான சுற்றுப்பணத்திற்குத் தெரிவு செய்யப்பட்ட 16 பேர் கொண்ட மேற்கிந்தியத் தீவுகள் வீரர்கள் பட்டியலில் சந்தர்போல் முதலில் இடம்பெற்றிருந்தார்.

பின்னர் இவர் பயிற்சியில் ஈடுபட்டிருந்தபோது இடுப்புப் பகுதியில் ஏற்பட்ட வலியால் அவதிப்பட்டார். இதனைத் தொடர்ந்து மருத்துவர்களின் ஆலோசனையின் பேரில் ஓய்வெடுப்பதற்காக, அணியிலிருந்து நீக்கப்பட்டுள்ளார்.

சந்தர்போலிற்குப் பதிலாக வோவெல் ஹிண்ட்ஸ் அணியில் சேர்க்கப்பட்டுள்ளார்.

## மனஞ்சோர்ந்தால்...

கமலன் அறைக்குள் நுழைந்தபோதே, கட்டிலில் அவள் படுத்திருந்த கோலம்தான் கண்ணில் தைத்தது,

நிலத்தில் சும்மா எறியப்பட்டுக் கிடக்கும் ஒரு கொடித்துண்டுபோல நெளிந்தும் துவண்டும் கிடந்தாள் சாவித்திரி,

அந்த நிலையில் அவள் மன்மதனுடைய பஞ்சபாணங்களையும் ஏந்திக் கிடந்தாள். சேலை நழுவியும் நழுவாமலும் தெரிந்த அவளது ஒவ்வொரு பகுதியும் காமனின் ஒவ்வொரு மலரம்பாக மாறி அவன்மீது பாய்ந்தன.

தடுமாறி அருகே சென்றவன் விழிகள் இரு தாமரை மொட்டுக்களில் சென்று நிலைத்தன. ஒரே சீராக மூச்சுவிட்டுக் கொண்டிருந்ததால் எழுந்து தாழ்ந்தபடி இருந்த அந்த எழில்களிலிருந்து தன் கண்களைப் பலவந்தமாகப் பிடுங்கி அவள் முகத்தில் நிலைக்க விட்டான்.

இமைகளை முடியிருந்தாளே தவிர, தூங்குகிறாள் என்று சொல்ல முடியாதவாறு மோகனாகரமாக ஒளிர்ந்தது அவள் முகம்.

சற்றுநேரம் வைத்த கண் வாங்காமல் அவளைப் பார்த்தபடி நின்றிருந்தான் கமலன்.

கருவிள மலர் இதழென அவள் இமைகள் திறந்தன. எதிரே நின்றவனைப் பார்த்ததும் சட்டென எழுந்தாள். எழுந்த வேகத்தில் சரிந்த உடையைத் தாங்கவென அனிச்சையாகச் சென்ற கையைப் பாய்ந்துசென்று பற்றி அவளருகில் அமர்ந்தான் கமலன்.

மறுகையால் அவள் இடையை வளைத்துச் சுற்றிக் கொண்டு அருகே இழுத்தான். அப்படிச் சுற்றி இழுக்கப்பட்ட வேகத்தில் அவள் மென்னுடல் அவன் மார்பில் சாய்ந்தது.

நெகிழ்ந்த சேலைக்குள்ளிருந்த அந்த மென்மையான உடற்கூறுகள் அவன் உடலில் தவழ்ந்து அசைந்ததில் ஏற்பட்ட உணர்ச்சிச் சுழற்சியால் பெருமுச்சு விட்டுக் கொண்ட கமலன் முன்னே வந்துவிட்ட அந்த எழில் சிற்பத்தைத் தனது இரு கைகளாலும் வளைத்து இறுக்கினான்.

உடலோடு உடல் நெரிந்த நிலை, உணர்ச்சிகள் அத்துமீறித் தெறித்து அறிவு பறிபோன நிலை, கொந்தளிக்கும் ஆசை அலைகள் இரு உடல்களிலும் ஊடுருவி மயக்க போதையில் தாலாட்டும்... விவரணத்திற்கு அப்பாற்பட்ட தனி சொர்க்கம். அந்த சொர்க்கத்தின் சுனை ஒன்றினுள் அமிழ்ந்து திளைத்து மேலும் மேலும் உள்ளே செல்லும் பேராவலில் உடலியக்கம் கொண்டிருந்த இருவரும் பேச்சின்றிய மௌனத்தில் அசைந்தனர்.

வாயிலிருந்து சொற்கள்தான் பிறக்கவில்லையே தவிர, அவள் இதழ்களைக் கவ்வியிருந்த அவன் இதழ்களிலிருந்து ஆயிரமாயிரம் செய்திகள் பரிமாறப் பட்டுக் கொண்டிருந்தன. வாய்ச் சொல் யாதும் பயனில்லாத நிலையில் உணர்ச்சிகள் சுழன்று வீசியடிக்கும் நேரம்.

அவள் இதழ்களை விடுதலை செய்யாத நிலையில், 'அவன் கைகள் அவள் ஆடைகளை விடுதலை செய்யும் பணியில் அங்கங்கே அவள் அழகிய தேகத்தைத் தடவிச் சென்றன. தட்டுப்பட்ட சில இடங்களில் தேங்கவும் செய்தன.

"உம்" என்று உணர்ச்சிப் பெருக்கால் முனகினாள் சாவித்திரி. சுயநிலையை அவள் அடியோடு இழந்திருந்தாள்.

அவள் மார்பும், வயிறும், தொடைகளும் அவன்மீது மிக நெரிபட்டு அழுந்தின. கைகள் இரண்டும் அவன் கழுத்தைச் சுற்றிக் கிடந்தன.

சற்று நேரம் இருவரும் மெல்லிய அசைவுகளோடு சுகத்தின் சுனையில் ஆழ்ந்து கிடந்தனர்.

மீண்டும் அவன் பிடிக்கு முனகலோடு அசைந்த சாவித்திரி, தன் இதழ்களை விடுவித்துக் கொள்ளும் முயற்சியில் தலையைப் பின்னே சரித்தாள். ஆனால் அதிகாரத்தின் சுவையை அனுபவித்த ஆட்சியாளன் போல் சட்டென்று விடுதலை தர இணங்காத அவன் முரட்டு இதழ்கள் அவள் கொவ்வை அதரங்களை மேலும் அழுத்தமாகக் கவ்வியதாலும், அந்தப் பிரயத்தனத்தில் அவளுடல் அதிகமாக இறுக்கப்பட்டதாலும் வலியில் அவள் முனகியதில் சுகமே தெரிந்தது.

தலையைப் பின்னுக்கு இழுக்கும் முயற்சியைக் கைவிட்டு மெல்லப் பக்கவாட்டில் அசைத்தவள், விடுதலை முயற்சியில் சற்றே வெற்றி பெற்றாலும், அதன் எச்ச சொச்சங்களிலிருந்து மீள முடியாதவளாய், மீளவும் விரும்பாதவளாய்... விலக்கிய தன் உதடுகளை அவன் வலது கன்னத்தில் புதைத்தாள்.

அவள் இடையைத் தன்னோடு இறுகச் சேர்த்திருந்த கைகளைத் தளர்த்தாதவனாய் மெல்லச் சொன்னான்,

"ஓரவஞ்சனை கூடாது" என்று,

"எதற்கு?" என்று கேட்டாள் அதரங்களை விலக்கிக் கொள்ளாமலே,

அவள் இதழ்கள் கன்னத்தில் அசைந்ததால் ஏற்பட்ட இன்பக் குறுகுறுப்பின் விளைவாக, தன் நெஞ்சோடு அழுந்தியிருந்த அவள் மார்புகளை மேலும் ஆவேசமாகச் சேர்த்து அழுத்திக் கொண்டு சொன்னான், "கன்னங்களுக்கிடையே வேற்றுமை காட்டக்கூடாது, சாவி... சமத்துவம்தான் முற்போக்கு மனுக்குலத்தின் அவா" என்பதாக.

அவள் கலகலவென்று நகைத்தாள். அவன் மறுகன்னத்திலும் முத்தமிட்டாள். அவன் கைகளிலிருந்து விலகிக் கொண்டு பின்னகர்ந்து பஞ்சணை மேல் முழங்காலில் நின்றாள். கலைந்திருந்த தன் குழல்களைச் சீர் செய்துகொள்ள இரு கைகளையும் பின் தலை நோக்கித் தூக்கியபோது திண்ணிய அவள் மார்பு இரண்டும் முரட்டுத்தனமாக எழுந்தன. கலைந்து போயிருந்த சேலையைச் சரிசெய்துகொள்ள அவள் வளைந்தும் நிமிர்ந்தும் உடலைத் திருப்பியபோது அந்த உடல் வளைவுகளின் வனப்பு எந்தக் கோணத்திலும் எழிலாகவே தோன்றுவதை எதிரே உட்கார்ந்த நிலையிலேயே பார்த்து வியந்தான் கமலன்.


அவன் பார்வையையும், அவற்றிலிருந்த போதை இன்னும் வற்றிவிடாதிருந்ததையும் அவதானித்த சாவித்திரி, "நான்போக வேண்டும்" என்று அவசரமாக உடைகளைச் சீர்படுத்திக் கொண்டு கட்டிலை விட்டிறங்கினாள்.

"எங்கே போகிறாய்?" என்று பாய்ந்து அவள் கையைப் பிடித்திழுத்தான் கமலன்.

"ச்சீ... விடுங்கள்... என்ன இது..." என்று சிணுங்கலோடு உதறினாள்.

கைப்பிடியை விடாமல் அழுத்தி இழுத்துக் கொண்டே, "இப்படித்தானடி நீங்கள்... உங்கள் தேவை தீர்ந்தால் உதறிக்கொண்டு கிளம்பி விடுவீர்கள்..." என்றான் அவனது இழுப்புக்கு அவள் வராமல் விலகிவிட்ட ஆற்றாமையில்.

அவள் சட்டென்று தளர்ந்தாள். கட்டிலின் விளிம்பில் அமர்ந்து



தலையைத் தொங்கப் போட்டுக் கொண்டாள். சாவித்திரி மொத்தமாகச் சோர்ந்துபோனாள்.

கமலன் தன்தவறை உணர்ந்தான். மெல்ல அருகே சென்று அவள் முகத்தை நிமிர்த்தினான். அந்தக் கருவிள மலர்கள் நீர் நிரம்பிக் கிடந்தன. அவள் கன்னங்களை இரு கைகளாலும் பற்றிப் பிடிக்கப் போனான். கையைத் தட்டி விட்டு அவள் உடலைத் திருப்பிக் கொண்டாள். அப்படி அவள் அசைந்தபோதும் அவன் பார்வை அங்கே சென்றதை அவனால் தடுக்க முடியவில்லை. திமிறி எழுந்து நின்ற செவ்விளநீர் அழகுகள், இப்போது தொய்வு கண்டிருந்தன. மனம் சோர்ந்து போனால் உடலும் தன் உற்சாகமின்மையைக் காட்டிக் கொண்டு விடுகிறது என்று யோசித்த கமலன், சற்றுநேரம் அவளைத் தொந்தரவு செய்யாதிருப்பதே உத்தமம் என்று அமைதியானான்.

செருவிள நீர்பட வெம்முலைச்
செவ்விள நீர்படு சேயரிக்
கருவிளம் நீர்பட ஊடுவீர்...

(கலிங்கத்துப் பரணி)




★ **தமிழ்க் கட்சிகளின் கூட்டு வெற்றி பெற்றால் தமிழீழ விடுதலைப் புலிகளிடமும், இன்றைய சூழலிலும் மாற்றம் வரும் என்று நம்பலாமா?**

நா.வித்தியானந்தன், கொழும்பு-05.

*கடந்த இருபது வருடங்களாய் எங்கிருக்கிறீர்கள் வித்தியானந்தன்? வேறு யாருக்காகவும் தங்களை மாற்றிக் கொள்பவர்களா புலிகள்? தவிரவும் 'தங்கள் சுயலாபத்திற்காக எங்கள் பெயரைச் சொல்லிக் கூத்தாடுகிறார்கள் இந்தக் கூட்டணியினர்' என்று லண்டனிலிருந்து வெளியிடும் தங்கள் பத்திரிகையில் இவர்களைக் கேலி செய்திருக்கிறார்கள் அவர்கள்.*

⊙⊡⊙

★ **நான் எனது நண்பனை உயிரைவிட மேலாக நேசிக்கிறேன். அவனுடைய தங்கையை அதற்கும் மேலாக நேசிக்கிறேன். இது சரியா, தவறா?**

கே.ரமேஷ், பொத்துவில்.

*அந்தத் தங்கைக்கும் ஒரு தங்கை இருந்து, அதற்கு மேலும் உங்கள் பரந்த நேசம் செல்லாத வரை சரிதான்.*

⊙⊡⊙

★ **அழகான வரிகளோடு வித்யாசாகர் இசையில் 'புதுமலர் தொட்டுச் செல்லும் காற்றை நிறுத்து...' சிந்தியாவுக்குப் பிடிச்சிருக்கா?**

ரிஸ்னா, நிககொள்ள.

*காற்றை, மழையை, கடல் அலையை என்று எல்லாவற்றையும் நிறுத்திவிட்டுக் காதலை மட்டும் செயல்படச் சொல்கிற அந்தப் பாடல் புதுமையானதுதான். இப்போதைய என் முணுமுணுப்பும் 'திந்தின்னார நிந்தின்னார..'தான்!*

★ **பாராளுமன்றப் பாதையால் தீர்வுக்கு முயற்சிப்பது ஒருவழி. போராட்டப் பாதையால் தீர்வுக்கு முயற்சிப்பது இன்னொரு வழி. இதில் தமிழ்க் கூட்டுக் குழுவினர் எதை முயற்சிக்கிறார்கள்?**

முருகேசு விஜயன், வவுனியா.

*இடையிலுள்ள பாதையால் 'பஜிரோ' ஓடிச்செல்ல.*

⊙⊡⊙

★ **நடிகை ஸ்நேகாவின் விலாசத்தைத் தருவீர்களா?**

செ.சுதர்சன், அக்கரைப்பற்று.

*28/1, மன்னார்முதலி தெரு, சென்னை 600026.*

⊙⊡⊙

★ **சினிமா நடிக நடிகையர் திருமணம் ஏன் நிலைப்பதில்லை?**

செ.ஹரிதரன், தொளஸ்பாகை.

*ஒருவரையொருவர் சரியாகப் புரிந்து கொண்டுவிடுவதால்.*

⊙⊡⊙

★ **திரையுலகின் சமீபத்திய சூடான செய்தி என்ன சிந்தியா?**

கே.குமுதா, நீர்கொழும்பு.

*ரோஜாவும் செல்வமணியும் தங்கள் ஐந்தாறு வருடக் காதலை முறித்துக் கொண்டுவிட்டதுதான்.*

⊙⊡⊙

★ **சார்ஜா எப்படி?**

எஸ்.எம்.நபார், கல்முனை-04.

*முடிந்த மூன்று ஆட்டங்களையும் வைத்துப் பார்க்கிறபோது, களத் தடுப்புக்கே வெற்றி.*

⊙⊡⊙

★ **மூன்றாவது உலக யுத்தம் வருமா?**

ஆர்.மிதுனா, குருந்துவத்த.

*சரியாகத் தெரியவில்லை. ஆனால் ஒன்று மட்டும் மிகச் சரியாகத் தெரியும். நான்காவது உலக யுத்தம் இருக்கவே இருக்காது.*

⊙⊡⊙

★ **கே.ஜே.ஜேசுதாசா அல்லது கே.ஜே.ஏசுதாசா?**

என்.வி.மூர்த்தி, மாபேரியதென்ன.

*அது, நீங்கள் யேசுவை 'ஜேசு' என்று சொல்கிறீர்களா, 'ஏசு' என்று சொல்கிறீர்களா என்பதைப் பொறுத்தது.*

⊙⊡⊙

★ **நாரஹேன்பிட்டியில் நடந்த குண்டு வெடிப்பு புலிகளிடமிருந்து தேர்தலுக்கான முன்வரவேற்பா?**

சு.அமுதமனோகரன், கொழும்பு 13.

*அப்படியா நினைக்கிறீர்கள்? அப்படியானால் அவர்களுக்காகவே நாங்கள் தேர்தலில் நிற்கிறோம் என்று இங்கிருந்து சொல்லிக் கொள்ளும் நம்மவர் நிலைமை என்ன? அப்படியெல்லாம் முடிச்சுப் போட்டு இவர்களைக் கொழும்பை விட்டும் துரத்தி விடுவீர்கள் போலிருக்கிறதே!*

⊙⊡⊙

★ **அணிக்குள் ஒற்றுமையுள்ள, அதிகம் பிரச்சனைப்படாத கிரிக்கெட் வீரர்களாக எந்த அணியினரை நீர் நினைக்கிறீர்?**

ஷகீறா றஷீட், சம்மாந்துறை-06.

*இதற்கு எதிரான கேள்வியைக் கேட்டிருந்தீர்கள் என்றால் 'இந்தியா' என்று பட்டெனப் பதிலளித்திருப்பேன். அதிருக்க, ஒற்றுமையான அணி என்று அவுஸ்திரேலியா, தென்னாபிரிக்கா, இலங்கை அணிகளைச் சொல்வேன். அதிலும் வெல்ல வேண்டும் என்ற ஆவேசமும் நம்மவர்களுடைய கூடுதல் பலம். இதை விடுங்கள் இந்தியாவும் பாகிஸ்தானும் மோதும்போது அவ்வவ் வணிகளுக்குள் ஏற்படும் ஒற்றுமை மற்றெல்லாவற்றையும் விடத் தீவிரமானது என்பதுதானே உண்மை!*

⊙⊡⊙

★ **'அர்ஜுன ரணதுங்க' வெல்வாரா?**

கே.வசந்த், கொழும்பு-15.

*'அர்ஜுனன் எந்தப் பக்கமோ அந்தப் பக்கமே ஜெயம்' என்று அந்தப் பார்த்த சாரதி சொன்னான், இவருக்குச் சாரதி யார், 'மங்கள சமரவீர'வா?*

⊙⊡⊙

★ **காதலுக்கு முகவரி உண்டா?**

ஹூதா றஸாக், காத்தான்குடி-03.

*இல: 07, சொர்க்கம், மேல் உலகம்.*

⊙⊡⊙

★ **கண்களால் பேசும் காதலுக்கும், கடிதத்தால் பரிமாறும் காதலுக்கும் வித்தியாசம் என்ன?**

பெ.கோகிலன், ஹட்டன்.

*ஒரே இதயத்தின் இருவேறு மொழி பெயர்ப்புக்கள் என்ற வித்தியாசம்தான்.*

### இவர் தான் அவர்



ஐஸ்வர்யாராய்

# மன்னாதி மன்னன்

79

இராஜகுமாரன்

இராஜபுரி நகரத்தில் வாழ்ந்த அபரஞ்சியெனும் விலைமாது, அந்நகருக்கு வைர வியாபாரியாக வேடமிட்டு வந்திருந்த மன்னன் விக்கிரமாதித்தனை உண்மையில் யார் என்பதை அறிந்து கொண்டாள். மன்னரை மயக்கி, அவர் மீது அளவற்ற காதல் கொண்டிருப்பவள் போல பாசாங்கு செய்தாள். அவள் உண்மையிலேயே தன்னை உயிருக்குயிராக நேசிப்பதாக விக்கிரமாதித்தன் கருதி நன்றாக ஏமாந்து போனார். ஆனால் மன்னர் விக்கிரமாதித்தனுடைய தம்பியும், அமைச்சருமான பட்டி, அப்பெண் மன்னர்மீது வைத்திருப்பது உண்மையான அன்பல்ல என்பதை நிரூபிக்க ஒரு தந்திரத்தைக் கையாண்டார்.

இராஜபுரி நகரில் வாழ்ந்த தங்களுக்குத் தெரிந்த அனைவரிடமும் பட்டியும், தானும் ஓர் அவசர காரியமாக ஊர் செல்லப் புறப்படுவதாகக் கூறிக்கொண்டு வெளியேறினர்.

நகரின் எல்லையிலுள்ள மக்கள் அதிகமாக நடமாடும் ஓர் இடத்தில் விறகுகளை அடுக்கி சிதை மூட்டி, தனது அண்ணன் பெரிய காந்தையச் செட்டி இறந்து விட்டதாகவும், அவருடைய சடலத்திற்கு தீ மூட்டியிருப்பதாகவும் பட்டி கூறி பிரளாபித்து அழுதார். நகருக்குள் அயலூர்களிலிருந்து செல்லும் மக்கள் அனைவரும் இந்தக் காட்சியைப் பார்த்துக் கொண்டு சென்று நகரிலுள்ள பலருக்கும் தெரிவித்தனர்.

தாசி அபரஞ்சிக்கும் இத்தகவல் எட்டியது. அவள் எண்ணெய் வைத்து மூழ்கி தலைவிரி கோலமாக சிதை எரிந்து கொண்டிருந்த இடத்திற்கு வந்து சேர்ந்தாள். இதனை மறைவிடத்திலிருந்து கண்ட விக்கிரமாதித்தன் பதறிப் போனார். ஆனால் பட்டியோ மேலும் சற்று நேரம் மறைவிடத்தில் அமைதியாக இருக்கும்படியும் தாசி அபரஞ்சியின் உண்மை வேடத்தை அம்பலப்படுத்தும் சந்தர்ப்பம் நெருங்கி வந்து விட்டதாகவும் சைகை மூலம் விக்கிரமாதித்தனிடம் தெரிவித்தார்.

கணவனை இழந்த பெண்கள் உடன்கட்டை ஏறுவதுபோல் விக்கிரமாதித்தனின் சடலம் எரிவதுபோல் கருதப்பட்ட சிதையில் வீழ்ந்தாள். அவள் உடலும் தீயுடன் சங்கமமாகியது.

இந்தக் காட்சியைப் பார்ப்பதற்காகத் திரண்டிருந்த மக்களனைவரும் கலைந்த பின்னர் விக்கிரமாதித்தன் மறைவிடத்திலிருந்து வெளியே வந்து பட்டியைக் கடிந்துகொண்டார். 'தன்னை உண்மையாக நேசித்த ஒரு அப்பாவிப் பெண்ணை உயிருடன் எரித்து விட்டாயே' என்று திட்டினார்.

நிதானமிழக்காத பட்டி சிரித்துக் கொண்டே "அண்ணா! தாங்கள் உடனடியாக தமது குல தெய்வமான காளிகாம்பாளிடம் செல்ல வேண்டும். இறந்த வரை மீட்டெடுக்கும் சக்தி வாய்ந்த பொருட்களைப் பெற்று வர வேண்டும். அவற்றைக் கொண்டே அபரஞ்சியை உயிர்த்தெழ வையுங்கள்." என்று தெரிவித்தார். பட்டியின் சொற்படி விக்கிரமாதித்தன் காளி கோயில் சென்று அன்னையை வணங்கினார். அவர் முன் பிரத்தியட்சமாகத் தோன்றிய காளிகாம்பாள் புனித நீரையும், திருநீறையும் வெள்ளிப் பிரம்பையும் தந்தருளினார். அவற்றைப் பெற்றுக்கொண்ட விக்கிரமாதித்தன் நேராக அபரஞ்சி எரிந்து சம்பலான சிதையருகே வந்து புனித நீரையும், திருநிறையும் தெளித்து வெள்ளிப் பிரம்பால் சாம்பலைத் தட்டினார். நீண்ட தூக்கத்திலிருந்து விழித்தெழுவது போல் உயிருடன் எழுந்த அபரஞ்சி விக்கிரமாதித்தன் கைகளிலிருந்த மூன்று புனிதப் பொருட்களையும் பெற்றுக் கொண்டு நேராக நகரத்துள் சென்று மறைந்தாள்.

விக்கிரமாதித்தன், அபரஞ்சி எழுந்ததும் தன்னை வணங்கி ஆலிங்கனம் செய்யப் போகிறாள் என்று பெரிதும் எண்ணி ஏமாந்து போனார். தாசி அபரஞ்சி நேராக தனதில்லம் சென்றாள். அங்கோர் அறையில் பதனிடப்பட்டு வைக்கப்பட்டிருந்த தனது ஆசை நாயகன் அப்பாசியின் உடல்மீது புனிதப் பொருட்களைத் தெளித்து வெள்ளிப் பிரம்பால் தட்டினாள். அவனும் உயிர் பெற்றெழுந்து நின்றான். இவருவரும் தங்களை மறந்தவர்களாக ஒருவரை ஒருவர் அணைத்து நேரகாலம் தெரியாமல் பொழுதைக் களித்தனர்.

நகரின் எல்லைப் புறத்தில் நின்ற விக்கிரமாதித்தனை பட்டி கவலையுடன் பார்த்து "நீங்கள் இன்னும் என்னை நம்பவில்லையானால் நேராக அவளுடைய இல்லம் செல்லுங்கள். அங்கு நடைபெறும் சம்பவங்களை நேராகப் பார்த்து நீங்களே ஒரு முடிவக்கு வாருங்கள்" என்று கூறி அனுப்பினார்.

விக்கிரமாதித்தன் நகரத்துள் சென்று அபரஞ்சியின் வீட்டையடைந்தார். அபரஞ்சியுடன் சேர்ந்து தனக்கு அமோகமான வரவேற்பளிக்கும் அபரஞ்சியின் தாதிமார் விக்கிரமாதித்தனை அம்மாளிகையினுள்ளே அனுமதிக்கவும் மறுத்து விட்டனர். அவர்களைத் தனது கைகளால் ஒதுக்கித் தள்ளிவிட்டு விக்கிரமாதித்தன் அபரஞ்சியின் படுக்கையறையை நெருங்கினான். கதவைத் திறந்து கொண்டு உள்ளே செல்ல முற்பட்ட அவருடைய காதுகளில் உள்ளிருந்து அபரஞ்சியுடன் மற்றோர் ஆண்மகன் கொஞ்சிப் பேசும் சத்தம் கேட்டது. பதறிப் போனார். நிதானித்துக் கொண்டு கதவைத் தட்டினார். "யாரது என்று அபரஞ்சியின் குரல் அதிகாரத்துடன் ஓங்கி ஒலித்தது. விக்கிரமாதித்தன் சற்றுக் கடுமையாக "நான் தான் உன் காதலன் பெரிய காந்தயச் செட்டி வந்திருக்கிறேன். கதவைத் திற" என்று உரத்த குரல் எழுப்பினார்.

உள்ளேயிருந்து "இப்பொழுது உம்மிடம் பேச எனக்கு நேரமில்லை. திரும்பிப் போகலாம்." என்று கூறினாள் அபரஞ்சி.

உடனடியாக தனது தம்பியும் மதியூக மந்திரியுமான பட்டியை நினைத்து அவருடைய புத்திக் கூர்மையை மெச்சியவராக வேதனையுடனும் வெட்கத்துடனும் அபரஞ்சியின் இல்லத்தை விட்டு வெளியேறினார். அவருக்காக சத்திரத்தில் காத்திருந்த பட்டி அவரை ஆதரவுடன் வரவேற்று "ஏன் அண்ணா இவ்வளவு சீக்கிரம் திரும்பி விட்டீர்கள். இல்லத்தில் அபரஞ்சி இல்லையா என்று கேட்டார்." வெட்கத்தில் தலை குனிந்த வண்ணமிருந்த மன்னன் விக்கிரமாதித்தன், "பட்டி உன் சொல்லை நம்பாமல் அந்தத் தாசியின் பொய் வேடத்தை உண்மையென நம்பி ஏமாந்து போனேன். ஆத்திரமடைந்து உன்னைக் கண்டபடி திட்டிவிட்டேன். என்னை மன்னித்துவிடு என்று தம்பியை இறுக அணைத்துக் கொண்டார்.

பட்டி தழுதழுத்த குரலில் "அண்ணா எத்தகைய அறிவாளியோ அதிவீர பராக்கிரமசாலியோ எல்லாத் துறையிலும் அனுபவம் பெற்றால் தான் இவ்வுலகிலுள்ள எல்லா விஷயங்களையும் நன்கு தெரிந்து கொள்ள முடியும். 'மின்னுவதெல்லாம் பொன்னுமல்ல' ஆகவே நடந்தவற்றை மறந்து விடுங்கள்' என்று கூறி சமாதானப்படுத்தினார்.

இவ்வாறு சிம்மாசனத்தின் எட்டாவது படியில் நின்றிருந்த பதுமை போஜ மாமன்னரிடம் அதைக்கூறி முடித்தது. கதை முழுவதையும் கேட்டுச் கொண்டிருந்த போஜ மாமன்னர் அப்பதுமையிடம் ஒரு கேள்வியைக் கேட்டார். "பதுமையே இதுவரை கதை கூறிய பதுமைகளெல்லாம் விக்கிரமாதித்த மாமன்னருடைய சீறிய பண்புகளையும் வீர தீர பராக்கிரமச் செயல்களையும் மட்டுமே கூறி அவருடைய புகழை உயர்த்தி வைத்தனர். ஆனால் நீ கூறிய கதையில் விக்கிரமாதித்த மாமன்னரைவிட அவருடைய தம்பியும் அமைச்சருமான பட்டி அதி சிறந்த புத்திசாலி என்று தெரியவருகிறதே அமைச்சர் பட்டிக்குத் தெரிந்த தாசி அபரஞ்சி பற்றிய தகவல்கள் அமைச்சரான பட்டிக்கு மட்டும் எவ்வாறு தெரிந்திருந்தது" என்று கேட்டார்.

இந்தக் கேள்வியை போஜ மாமன்னர் கேட்டதும் எட்டாவது பதுமை மீண்டும் கதையைத் தொடர ஆரம்பித்தது.

விக்கிரமாதித்தனும் பட்டியும் சகோதரர்கள். இருவருமே காளி அருள் பெற்றவர்கள். அடிக்கடி காளிகாம்பாள் கோயில் சென்று வணங்கி அவருடைய நல்லாசிகளைப் பெற்று வந்தார்கள்.

இராஜபுரிக்கு வைரவியாபாரிகளாக வேடமிட்டு வந்திருந்த விக்கிரமாதித்தனும் பட்டியும் அங்கிருந்த ஒரு சத்திரத்தில் தங்கியிருந்தார்கள். அன்றிரவ பட்டியை மட்டும் சத்திரத்தில் விட்டுவிட்டு விக்கிரமாதித்தன் தனியே தாசி அபரஞ்சியின் வீடு தேடிச் சென்றார். அங்கு சென்றவர் அவளுடைய மையலில் சிக்கிக் கொண்டார். மன்னர் வருவதற்குத் தாமதமானதனால் பட்டி தனியாக காளிகாம்பாள் கோயில் சென்றார். உரிய பூசைகள் முடிவுற்றதும் பட்டி முன் தோன்றிய அ ்பாள் "மகனே பட்டி! இவ்வூரில் எனக்கொரு பக்தை இருக்கிறாள். அவள் பெயர் அபரஞ்சி அவளுக்கு ஒரு சங்கடம் ஏற்பட்டுள்ளது. அவளுடைய சங்கடத்தைப் போக்க என்னுடைய பக்தர்களான விக்கிரமாதித்தனும், பட்டியுமான நீங்கள் இருவரும் உதவப் போகிறீர்கள் என்று வாக்களித்திருக்கிறேன். எனவே அத்தகைய சந்தர்ப்பத்தில் நீங்கள் இருவரும் அவளுக்கு உதவுவீர்கள் அவள் பெயர் அபரஞ்சி" என்று கூறினாள்.

இவ்வாறு தான் தாசி அபரஞ்சி பற்றிய தகவல்களை முன் கூட்டியே அமைச்சர் பட்டி அறிந்து கொண்டிருந்தார்.

எட்டாவது பதுமை கூறிய கதையை கேட்டு போஜ மாமன்னன் திருப்தியடைந்தாலும் விக்கிரமாதித்தனும் அமைச்சர் பட்டியும் அடுத்து எங்கு சென்றார்கள் என்று அறிந்துகொள்ள ஆசை பிறந்தது.

"பதுமையே இராஜபுரியில் இருந்து மன்னர் விக்கிரமாதித்தனும் அமைச்சர் பட்டியும் அவர்களுடைய காடாறு மாதம் என்ற தவணை முடிவடையாமையினால் வேறு எங்காவது சென்றார்களா" என்று கேட்டார். போஜராஜரிடம் பதுமை மீண்டும் கதை சொல்லத் துவங்கியது.

மன்னனும், அமைச்சருமாக கானகத்தில் நடந்து சென்று கொண்டிருந்தபோது விக்கிரமாதித்த மன்னர் தாசி அபரஞ்சி தனக்குச் செய்த துரோகத்தைப்பற்றி நினைத்துக் கொண்டார். கடும் சினமுற்றார். "தம்பி விலை மாதர்களை எக்காலத்திலும் நம்பக் கூடாது. போலி வேடம் போட்டு குருடர்களை ஏமாற்றுவதில் அவர்களைப் போல் வேறு எவரும் இருக்கமுடியாது" என்று கருவிக் கொண்டார். இவ்வாறு கூறிக்கொண்டு ஒற்றையடிப் பாதையால் இருவரும் நடந்து சென்றார்கள். அப்போது வழியில் சருகோடு சருகாகக் கிடந்த பாம்புச் செட்டையொன்று உயிர் பெற்ற பாம்பு போல் எழுந்து பலமாகச் சிரித்துக்கொண்டு வானவெளியில் பறந்தது. அக்காட்சி இருவருக்கும் விந்தையாக இருந்தது. இதைக் கண்ட விக்கிரமாதித்தன் "தம்பி பட்டி என்ன இது விந்தையாக இருக்கிறது, பாம்புச் செட்டையொன்று நம்மைக் கேலி செய்து கொண்டு இவ்வாறு பறந்து செல்கிறதே இதன் மர்மம் என்ன" என்றார்.

பலவாறு சிந்தித்த பட்டி "அண்ணா உண்மையில் இதன் மர்மம் எனக்குப் புலப்படவில்லை. இருப்பினும் இன்றிரவே இதன் உண்மையை நான் தெரிந்து கொள்வேன்" என்று சொன்னார்.

மாலை வேளையில் இருவரும் காட்டைக் கடந்து சென்று அடுத்த ஊரின் எல்லைப் புறத்திலிருந்த சத்திரத்தை அடைந்தனர். நடநத களைப்பு மேலிட்டமையினால் இருவரும் படுக்கைக்குச் சென்றனர். விக்கிரமாதித்த மன்னர் உடனடியாகவே அயர்ந்து தூங்கிவிட்டார். ஆனால் அமைச்சர் பட்டிக்கு தூக்கம் வரவில்லை. சற்று நேரம் படுக்கையில் புரண்டுவிட்டு எழுந்து உலாவினார். வரும் வழியில் பாம்புச் செட்டை உயிர் பெற்றெழுந்து தங்களைக் கேலி செய்து கொண்டு பறந்து சென்றதை நினைத்தார். அந்த மர்மத்தை எவ்வாறாவது அறிந்து கொள்ள வேண்டுமென்று துடித்தார்.

சத்திரத்திற்கு வெளியே வந்து வேதாளத்தை அழைத்தார். "தாங்கள் கண்ட மர்மத்தை விபரிக்க முடியுமா" என்று வேதாளத்திடம் கேட்டார். பல அரிய விடயங்களையும் உடனடியா அறிந்து சொல்லக்கூடிய வேதாளம் பாம்புச் செட்டை மர்மத்தை அறிய முடியாது தவித்தது.

(தொடரும்)



# காதில பூ கந்தசாமி

கீழுள்ள சத்தியக் கடதாசியில் கண்ணை மூடிக் கொண்டு கையெழுத்திட்ட பின்னர்தான் நீங்கள் மேற்கொண்டு வாசிக்க அனுமதி பெற்றவர்களாவீர்கள். அதனை வெட்டி, அல்லது போட்டோ பிரதி செய்து 'காதில பூ கந்தசாமி' என்ற தலைப்பில் தினமுரசுக்கு அனுப்புவோர் அபிமான வாசகர் போட்டியில் கலந்து கொள்ளும் தகுதியைப் பெறுவீர்கள். விபரம் கீழே.

## சத்தியக் கடதாசி:

நோட்டீஸ் பலகையிலுள்ள காதில பூ கந்தசாமியின் சத்திய வாக்கியத்தைத் தெளிவாகப் புரிந்துகொண்டு, எனக்குச் சுயமாகச் சிந்திக்கும் உரிமை இல்லையென ஏற்றுக்கொண்டு, அவர் கூறுகின்ற அத்தனை பொய்களையும் எள்ளளவு சந்தேகமுமின்றி நம்புவேன், அதைத் தவிர வேறொன்றையும் நம்பமாட்டேன், இப்படி நம்புவதன் விளைவுகளுக்கு நானே பொறுப்பாளியென சுய நினைவுடன் இத்தால் நான் உறுதியளிக்கிறேன்.

திகதி:................. பெயர்:...................... ஒப்பம்:...................

**அபிமான வாசகர் போட்டியில் ஒன்பதாவது:**
**ஒரு மெய் எப்போது பொய்யாகிறது? முடிவுத் திகதி நவம்பர் 30.**

தேர்தல் நாடகம் தொடங்கிட்டுதுங்கோ. என்னென்ன காட்சியெல்லாம் அரங்கேறப் போகுதெண்டு வலு திறில்லாக் கிடக்குதுங்கோ. கட்சிமாறும் பட்சிகளும் காவடியாடும் கூட்டங்களும், கோமாளிகளும், கிறுக்குகளும், பொய்யர்களும், புழுகர்களும், பக்கவாத்தியக் காரர்களும், புகழ் பாடிகளும், வசைபாடிகளும், வார்த்தை ஜாலக்காரரும், மேடையேறப் போறாங்கள். வேடிக்கை வலு உச்சமாத்தான் இருக்கப்போகுதுங்கோ. சிங்கள அரசியலில் நடக்கிற கூத்துக்களை நாங்கள் பிறகு ஒரு நேரத்தில பாப்பம். இப்ப எங்கட தமிழ்க்கூத்தப் பாருங்கோ வெண்டிறன். நல்லதொரு நாடகம் நமக்குள்ளேயே நடக்கேக்க நாம ஏன் வேற எங்கேயும் பாப்பான்.

எதச் சொல்லுறனெண்டால், இப்ப எங்கட சித்தர் பேசின டயலொக்குகளக் கேட்டியளோ. கட்டப் பொம்மனின்ட வீர வசனத்த அப்பிடியே கொப்பியடிச்ச மாதிரியல்லே இருந்துச்சுது. அது எந்தக் க ்டமெண்டால் கட்டப் பொம்மன் வெள்ளைக்காரனப் பாத்துக் கெஞ்சு கெஞ்செண்டு கெஞ்சினானெல்லே,அந்தக் கட்டம் பாருங்கோ."ஐயா துரைச்சாமியே, நான் கூழைக் கும்புடு போட்டுக்கொண்டு மண்டாடிக் கேக்கிறன் ஐயா. எல்லாத்தையும் விட்டு உதறித் தள்ளிட்டு, மீசையத் தாடியை எல்லாம் வழிச்செறிஞ்சிட்டு, ஏன் கோவணத்தையும் கழட்டி வைச்சிட்டு வாறதெண்டாலும் வாறன். என்னைத் தயவு செய்து உங்கட கொம்பனியில சேத்துக் கொள்ளுங்கோ. எனக்கு பிரித்தானிய சாம்ராஜ்ஜியம்தான் ஏக தலைவர்களெண்டதில எந்தப் பிரச்சனையும் இல்லையையா. தயவுசெய்து என்னை உங்களோட சேத்துக் கொள்ளுங்கோ எண்ட கெஞ்சுகெஞ்செண்டு கெஞ்சிறானெல்லே. அதே மாதிரியெல்லே எங்கட சித்தரும் டயலொக் பிசகாமல் அழுக்கு சங்கரியப்பாத்து கெஞ்சினார். "நான் எந்தளவு விட்டுக்கொடுபபுக்கும் தயார். நான்கூட தேர்தலில நிக்காமல் விடவும் தயார். புலிகளோட மட்டும் தான் பேச்சு வார்த்தை நடத்த வேணுமெண்டதிலயும் எனக்குப் பிரச்சனையில்லை. புலிகள்தான் பேச்சுவார்த்தையில ஏகப்பிரதிநிதிகளாயும் இருக்களாம். ஆனால் என்ர கட்சிய மட்டும் உங்கட கூட்டுக்குள்ள சேர்த்துக் கொள்ளுங்கோசாமி என்று கட்டப்பொம்மனப்போல எங்கட சீமான் கீழ விழுந்து கிடக்க, உண்மையாத்தான் சொல்லுறன் பேப்பரப் படிச்ச என்ர கண்ணுலயும் தண்ணி ஒழிகிச்சுதுங்கோ.

ஆனால பாருஙகோ வரலாறெண்ட ஒண்டத் திருப்பிப் பாக்கக்க இதெல்லாம் படு ஜோக்காத் தெரியுதுங்கோ. புலிகளில இருந்து பிரிஞ்ச இயக்கந்தான் சித்தற்ற புள்ளொட் இயக்கமெண்டது நாலுபேருக்கும் தெரிஞ்ச சங்கதியுங்கோ. ரெண்டு ஜென்மப் பகையா இருந்த காலமும் தென்னிந்தியாவில பாண்டிபஜாரில ரெண்டு தலைவர்களும் நேர நேர சுடுபட் ' முதல் எத்தனையோ சண்டைகள், கொலைகள், தடைகள் எண்டெல்லாம் நடந்து ுடிஞ்சு இண்டைக்கி வரை ரெண்டுமே கீரியும் பாம்புமாத்தான் இருக்கினமெண்டது ஒருத்தருக்கும் தெரியாத விஷயமில்லையுங்கோ. வவ்னியாவில ஆமியிண்ர அனுசரணையில கேம்ப் போட்டு ஆயுதங்களோட நிண்டு காவல் காக்கிறது. அங்க ஆடுமாடு நுளைஞ்சிடக் கூடாது எண்டதுக்கு இல்லையெண்டது எந்தச் சின்னப் பிள்ளைக்கும் தெரிஞ்சது தானுங்கோ. இப்படியிருந்து கொண்டு தேர்தலக் கண்ட உடன புதுப்பாட்டுப் பாட வெளிக்கிடறதுதான் பகிடியாக் கிடக்குதுங்கோ. கூட்டுக்க சேந்திரட்டால் பாவவிமோசனம் கிடைக்கிறமெண்ட மாதிரி ஆள் படாத பாடுபட்டு விட்ட அறிக்கைகளும் வீணாத்தான் போச்சுதுங்கோ.

விடாக்கண்டனா சித்தர் தலைகீழா நிண்டாலும் அங்காலை அழுக்கர் கொடாக்கண்டனா எல்லே கொப்பில ஏறி நிக்கிறார். சித்தர் கெஞ்சிக் கேட்டு விட்ட அறிக்கைகளுக்கு அழுக்கர் எட்டி உதைச்செல்லே பதில் சொல்லியிருக்கிறார்.

இந்த வெள்ளைக்காரத்துரை இப்பிடி மரண தண்டனைதான் விதிப்பாரெண்டால் எங்கட கட்டப்பொம்மன் காலில விழுந்திருக்கத் தேவையில்லையெல்லே. தங்கள் அரசாங்கத்திட்ட உதவி பெறுற கட்சிகளோட கூட்டுச்சேர மாட்டினமாம். புளொட்டை முந்திய அரசாங்க உதவிகளை விட்டுட்டு, ஆளயுதங்கள கைவிட்டிட்டு, பிடிச்சு வைச்சிருக்கிற வீடுகளத் திருப்பிக் குடுத்துட்டு, பொடியங்களக் காட்டிக்குடுக்கிறத நிப்பாட்டி, கப்பம்-வரி வாங்கிறதக் கைவிட்டிட்டு வரட்டுமெண்டு பதில் சொல்லியிருக்கிறார் அழுக்கு சங்கரியார்.

சித்தரப் பாக்கேக்க பரிதாபமாத்தான் கிடக்குது. இந்தாள ஏன் இப்படி அநியாயத்துக்குப் போய் அவமானப்பட்டுக்கொண்டு வாறாரோ எண்டு கவலையாவுந்தான் கிடக்குது. என்ன இருந்தாலும் அழுக்கருக்கு இந்த மிடுக்கு அளவுக்கு மிஞ்சினதுதான். உவர் ஆரோட கைகோத்துக்கொண்டு இந்தக் கதையளக்கிறாரெண்டு எவராவது திருப்பிக் கேக்க மாட்டினமோ? டெலோவை ஒரு கையிலயும் ஈ.பி.ஆர்.எல்.எஃப்.பை மற்றக்கையிலயும் பிடிச்சுக்கொண்டு ஆயுதங்கள், கொள்ளைகள், வரிகள், கப்பங்கள் எண்டெல்லாம் வாய்திறக்க முடியுமோ சொல்லுங்கோ. வன்னியில இவையள் நடத்திற வரியும் கப்பமும் முதலாளிமாருக்கு விழுகிற அடியும் உதையும் அழுக்கு சங்கரியார்ர கண்ணில படாமல் அவையோட கைகோத்து ஆனந்தக் கூத்தாட ஏலுமாயிருக்கிறது ஆச்சரியமாத்தான் இருக்குதுங்கோ. அதிலயும் அழுக்கற்ற கூத்தணியிண்ட மூத்த தலைவர்கள் ஆலால சுந்தரத்தையும் தருமலிங்கத்தையும் அநியாயமாகக் கொலைசெய்த ஆக்களோடயே ஆனந்தக்கூட்டுக்குப்போக ஏலுமெண்டால் ஆப்ட்ரோல் சித்தர், அதுவும் அதே தருமலிங்கத்திண்ட அருமை மகனை ஏசிக் கலங்கிறது அநியாயந்தானேயுங்கோ. அப்பனைக் கொண்டவயளோட கூட்டு. மகனுக்குக் கதவுப்பூட்டு! அதுக்குமா அழுக்கு சங்கரி ஐயா! அதுசரிபோகட்டும் அரசாங்கத்திட்ட உதவி பெறாத ஆக்களெண்டு ஏதோ பரிசுத்தம் பேசிறாரே அழுக்கர் அவர் நெஞ்சில கைவைச்சுச் சொல்லட்டும் அவற்ற கட்சிப் பொதுச் செயலாளர் சம்பந்தமானவருக்கு புல்லொட் புறூஃப் கார் அரசாங்கத்திட்டயிருந்து கிடைக்கயில்லையோவெண்டு. யாற்ற குண்டு சுட்டுப் போடுமெண்டு அவருக்கு குண்டு துளைக்காத கார் தேவைப்பட்டதாம் பாருங்கோ. அழுக்கற்ற கூத்தணியில யோசப் பரராஜசிங்கம் தொடக்கம் எந்த எம்.பி.மார் அரசாங்கத்திண்ர பின்கதவைத் தட்டேல்லயாம். வாய்ப்புகள், வரிவிலக்குகள், நஷ்டஈடுகள், வங்கிக்கடன்கள் எண்டெல்லாம் பாக்க வேண்டிய அலுவல்களப் பாத்திட்டுத்தானே விட்டவை.

எல்லாம் சரி இண்டைக்கி போராட்டத்துக்கு வக்காலத்து வாங்கற இந்தக் கூத்தணிக் கட்சியிண்ர எந்த எம்.பி.மாற்ற பிள்ளைகள் போராட்டத்திலை சேந்தவையெண்டு விரல் விட்டு எண்ணிக்காட்டட்டும் பாப்பம். சித்தர் ஒரே ஒருத்தர்தான். அப்பிடி ஒரு கூத்தணி எம்.பி.யிட பிள்ளையப் போராட்டத்தில சேர்த்தவர். அவரைத் தவிர வேறயார்? அமிர் அண்ணற்ற புத்திரர் ஆமி தேடுதெண்டு தெரிஞ்ச உடனே அமைச்சரைப் பிடிச்சு அவசர அவசரமா லண்டனுக்கு அனுப்பிவைச்ச அந்த நாள் முதல் இந்த நாள்வரை எல்லாரும் தங்கட பிள்ளையல வெளிநாட்டுக்கு அனுப்பிப்போட்டு உள்நாட்டுத் தேர்தலில போராட்டம் பற்றி வசனம் பேசிறவையாத்தான் இருக்கினம். ஆனபடியால அழுக்கருக்கு உத்தளவு ஆணவம் கூடாதெண்டிறன். சரியோ பிழையோ. அதோட மட்டுமில்லை. அரசாங்கத்தைப் பற்றி இந்தளவு அக்கறை காட்டிறவை எதிர்க்கட்சியோட மட்டும் கூடிக்குலாவலாமோஎண்டு நியாயத்தையுமெல்லே இங்க பாக்கவேண்டிக்கிடக்குது. ரணிலிண்ட கமக்கட்டுக்க புகுந்துகொண்ட செத்தவீடு, தெரு ஊர்வலமெல்லாம் திரிஞ்சிட்டுவந்த அழுக்கு சங்கரி எப்படியப்பா சுத்தம் சுகாதாரமெண்ட தூய்மை பேசலாம் கேக்கிறன். அங்கமட்டும் நாத்தமில்லையே. எங்கட பெடியள் 53 பேரை சிறைக்குள்ள வைச்சே படுகொலை செய்ய யூ.என்.பி. அரசாங்கம் 83இல ஜூலைக் கலவரத்த நடத்திப் போரெண்டால் போர் சமாதானமெண்டால் சமாதானமெண்டு சவால்விட்ட அரசாங்கம் இண்டைக்கு எதிர்க்கட்சியா நிக்குதெண்டதால நல்லவையா மாறிட்டினமெண்டு என்ன நிச்சயம்? நாளைக்கு அவை பவருக்கு வந்தால் அடுப்பிலயிருந்து நெருப்புக்க விழுந்த நிலைமைதான் வருகுதோ தெரியாது. இதயொண்டும் பார்க்காமல் இப்பவே போய் கமக்கட்டுக்க புகுறதில அழுக்கருக்கு என்ன ஆனந்தமோ தெரியேல்ல. எப்படியும் இவை கூத்தாடட்டும். சனத்தைப் பலிகொடுக்காட்டால் சரி!

**யாவும் கலப்படமற்ற கற்பனை**






# ஒத்திகை


அந்தரத்தில் நின்றபடி சாகசம் செய்யும் கழைக் கூத்தாடிகள் வறிய நாடுகளில் மட்டுமன்றி, உலகில் பணக்கார நாடுகளிலும் இருக்கத்தான் செய்கிறார்கள்.

ஃபிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த கழைக்கூத்தாடிகள் ஒன்று சேர்ந்து உலகின் பல்வேறு நாடுகளுக்கும் சென்று சாகசம் செய்து வருகிறார்கள்.

கடைசியாக இந்தக் கழைக்கூத்தாடிகள் சங்கம் இலண்டன் மாநகரிற்குச் சென்றிருந்தது. இந்தக் குழுவினர் தங்களுடைய நிகழ்ச்சியினைத் தொடங்குவதற்கு முன் ஒத்திகையில் ஈடுபட்டிருந்த காட்சிதான் இது.

தெற்கு இலண்டனில் உள்ள ரோயல் நஷனல் திரையரங்கு வளாகத்தில் பழுதூக்கும் கிரேனின் உதவியின் மூலம் அந்தரத்தில் நின்றுகொண்டு ஒத்திகையில் ஈடுபட்டார்கள்.



# சமாளிப்பு

குளிர்காலத்தில் பச்சைத்தண்ணீர் உடம்பில் பட்டால் என்ன குளிர் குளிரும். ஆனால் இந்த மனிதர் வெற்றுடம்போடு பனிக்கட்டிகளுக்குள் அசராமல் நின்று ஆச்சரியப்பட வைத்திருக்கிறார்.

நெதர்லாந்து நாட்டைச் சேர்ந்த விம்காப் என்பவர்தான் இவர். கின்னஸ் உலக சாதனைப் பதிவேட்டில் தனது பெயரைப் பதிவு செய்ய பெரிய கண்ணாடிப் பாத்திரம் ஒன்றுக்குள் நின்று கொண்டு பனிக்கட்டிகளை நிறைக்கச் செய்தார்.

இப்படி பனிக்கட்டிகளுக்கு நடுவே ஒரு மணித்தியாலமும் 40 செக்கன்களும் நின்றார். ஒரு மணித்தியாலம் பனிக்கட்டிகளுக்கு நடுவே மனிதர் விறைத்துப் போகாமல் நின்றதற்குக் காரணம் மனதை ஒருநிலைப்படுத்தும் தியானமும் யோகாவும்தான் என்று அவரே கூறியுள்ளார்.



# பராமரிப்பு

இப்போது உலகில் அருகி வரும் உயிரினங்களின் பட்டியலில் புலி இனங்களும் சேர்க்கப்பட்டுள்ளன. 1970ம் ஆண்டுகளில் கஸ்பியன் புலி இனமும் 1940ம் ஆண்டுகளில் பாலி புலியினமும் அழிந்து விட்டன. தற்போது சுமத்ரா புலிகள் உலகில் 20 மட்டுமே இருப்பதாக கணக்கிடப்பட்டுள்ளது. போகப்போக மீதமிருக்கும் இனங்களும் அருகிவிடும் போல் தெரிகிறது. வேட்டையும் காடுகள் அழிப்பும்தான் இதற்கு முக்கிய காரணங்களாகக் கருதப்படுகின்றன.

புலிகளைப் பிடித்து உயிரியல் பூங்காக்களில் வளர்த்து அவை மூலம் அந்த இனத்தைப் பெருகச் செய்ய முடியாமலும் இருக்கின்றது. காரணம் வளர்க்கப்படும் புலிகள் கருவுற்று குட்டிகளை ஈனுவது மிகவும் அரிதாகவே நடக்கின்றது. தென் ஃபிரான்ஸில் உள்ள உயிரியல் பூங்காவில் வளர்க்கப்பட்ட ஒரு புலி அண்மையில் 5 குட்டிகளை ஈன்றது.

இவற்றை வளர்த்தெடுப்பதற்காக மிகுந்த கவனம் எடுத்துப் பராமரிக்கின்றனர். படத்தில் பராமரிப்பாளர் ஒருவர் இவற்றுக்குப் புட்டிகள் மூலம் பாலூட்டுவதைப் படத்தில் பார்க்கலாம்.

## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து



**செல்வன் அனுசன் 04.11.2001**

புங்குடுதீவு வேலணை மேற்கை சேர்ந்த சசிகுமார்-சுவாதிநி தம்பதிகளின் அருந்தவ புதல்வன் **அனுசன்** தனது அண்ணா அனிசனுடன் தனது முதலாவது பிறந்த தினத்தை 06.11.2001 அன்று (ZURICH) SWITZERLAND தமது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகின்றார். இவரை அன்பு அப்பா, அம்மா, அப்பப்பா, அப்பம்மா, அம்மப்பா, அம்மம்மா, பெரியப்பாமார், பெரியம்மாமார், சித்தப்பாமார், மாமாமார், அத்தைமார், மைத்துனிமார், மைத்துனர்மார், U.K. அண்ணா, தம்பி மற்றும் உற்றார், உறவினர்களும் வேலணை மேற்கு முடிப்பிள்ளையார் துணையுடன் சகல சௌபாக்கியங்களும் பெற்று நீடூழி பல்லாண்டு காலம் சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றார்கள்.

தகவல்: ப. பகவதசிங்கம்-அம்மப்பா

## 1வது பிறந்தநாள் வாழ்த்து 09.11.2001



**செல்வன் விங்கேஸ்வரன் அபிராம்**

சாமித்தம்பி விங்கேஸ்வரன்-சித்ரா தம்பதிகளின் தவப்புதல்வன் செல்வன் அபிராம் தனது முதலாவது பிறந்த தினத்தை 09.11.2001 அன்று கனடா மொன்றியல் நகரில் வெகுவிமரிசையாகக் கொண்டாடுகிறார். இவரை அன்பு அப்பா, அம்மா, திருகோணமலை அப்பம்மா, கனடா அம்மம்மா, தாத்தாமார், பாட்டிமார், பெரியம்மாமார், பெரியப்பாமார், சித்தப்பாமார், மாமிமார், மாமாமார், மச்சாள்மார், மச்சான்மார், அண்ணன்மார், அக்காமார், தங்கைமார், பூட்டா தங்கராஜா அனைவரும் அபிராமை பலகலையும் கற்று பல்லாண்டு வாழ்கவென எல்லாம் வல்ல ஸ்ரீ கிருஷ்ண பகவான் அருள் பெற்று வாழ வாழ்த்துகிறார்கள்.



இப்பத்திரிகை கொழும்பு-06, வெள்ளவத்தை, நெல்சன் பிளேஸ், 16A ஆம் இலக்கத்தில் டி.டி. என்டர்பிரைசஸ் (பிரைவேட்) லிமிட்டெட் ஸ்தாபனத்தால் பொரலஸ்கமுவவில் உள்ள சி.பி.டி. அச்சகத்தில் நவ.04 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்படுகிறது.